Reg.No: QD/76/NEWS/2005

விலை 15/=

# ஈழநாதம்

பக்கம் - 24

மட்டக்களப்பு பதிப்பு

வார வெளியீடு

நாதம் - 02 | செப்டெம்பர் 02 - 08 / 2005 | வெள்ளி - 16



## மீண்டும் போர் வெடித்தால் மட்டு மாவட்டம் முழுமையான கட்டுப்பாட்டில்



## அச்சுறுத்தலுக்குள்ளாகும் தமிழ் ஊடகத்துறை

## சுனாமி இவர்களுக்கு ராசியா?

## சிந்தனைக்கு

பயம் எனது பலவீனத்தின் வெளிப்பாடு: கோழைத்தனத்தின் தோழன்: உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கெல்லாம் மூலமானது மரணபயம். இந்த மரண பயத்தைக் கொன்று விடுபவன்தான் தன்னைவென்று விடுகிறான். அவன் தான் தனது மனச்சிறையிலிருந்து விடுதலை பெறுகின்றான்.



தமிழீழ தேசியத் தலைவர்


ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு EEZHANATHAM

பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110,
078-8723447, 078-8722960.
இணையத்தளம் : www.battieezhanatham.com
www.battieelanatham.com
மின்னஞ்சல் : batti@eezhanatham.com
editor@battieelanatham.com
02.09.2005


## யார் வந்தாலும் விமோசனமில்லை

ஜனாதிபதித் தேர்தலுக்கான சூடு பிடித்துள்ளது. சிங்கள தேசம் எங்கும் வர்ண சுவரொட்டிகள். சுனாமி பேரழிவு ஏற்பட்டு மக்கள் கூடாராக வாழ்வில் முடங்கிக் கிடக்க தென்னிலங்கை பட்டாசு கொழுத்தி தேர்தல் ஆரவாரங்கள். பல இலட்சக்கணக்கான ரூபாய் பணத்தைக் கொட்டி கட்டவுட்டுக்கள், சுவரொட்டிகள் சமாதானப் பேச்சுக்கள் என்பது கானல் நீராகி விட்டது. இப்போதுள்ள நிலமையை தக்க வைத்திருப்பதும் அவசரகாலச் சட்டம் போன்றவைகளை பிரயோகித்து தமிழ் மக்களைத் துன்புறுத்துவதும் அரசின் கபடத்தனங்களாக இருக்கின்றன. இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் வருவது. புதிதாக ஒருவர் ஜனாதிபதியாவதும் தமிழ் மக்களுக்கு விமோசனங்களை ஏற்படுத்துமா?

கடந்த காலத்தை நினைவூட்டிப் பார்ப்போம் ஜே. ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாஸ, விஜயதுங்கா, சந்திரிகா பண்டார நாயக்கா இவர்கள் தமிழ் மக்களுக்கு சாதித்தது என்ன? போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என முழக்கமிட்டவர் ஜே. ஆர். தமிழ் மக்களுக்கு கச்சிதமான குழியறிப்புக்களை மேற்கொண்டவர் பிரேமதாஸா தமிழ் மக்களை செடிகொடிகளாக வர்ணித்தவர் விஜயதுங்கா ஈற்றில் சமாதான தேவதையாக வந்து பின்னர் யுத்தப்பிரகடனம் செய்தவர் சந்திரிகா அம்மையார்.

தமிழ் மக்களுக்கு ஆசை வார்த்தையையூட்டி வாக்குகளை அபகரித்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகி விடுவதற்கு அவர்கள் ஆர்வம் கொள்கின்றனர். பின்னர் தமிழ் மக்களை மறந்து விடுவார்கள் பின்னர் பௌத்த மகாசங்கத்தினரின் ஆசிர்வாதமும் ஆலோசனையும் இனவாதமும் இவர்களது இதயத்தை நிரப்பி நிற்கின்றன. இப்போது இரு பிரதான சிங்களக் கட்சிகளும் தங்கள் வேட்பாளர்களை நிறுத்தியிருக்கின்றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷ பேரினவாத அங்கியை அணிந்து கொண்டு தேர்தலில் குதிப்பதற்கு அலைந்து கொண்டிருக்கின்றார். இனவாத கட்சிகளான ஜே. வி. பி, ஹெல உறுமய ஆகிய கட்சிகள் தங்களிடமுள்ள பேரினவாத அங்கிகளை நிபந்தனைகளுடன் மகிந்த மீது போர்த்தி விடுவதற்கு தீர்மானித்திருக்கின்றனர். அப்படி என்ன அங்கி? தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் எந்த சமாதான வழிமுறைகளையும் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானால் மேற்கொள்ளக் கூடாது என்ற உத்தரவாதத்தை இந்தக் கட்சிகளுக்கு வழங்க வேண்டும். இப்போதுள்ள நிலையில் தேவை வாக்குகளே தவிர சிறுபான்மையின மக்களின் பிரச்சினைக்குத் காணும் சிந்தனையல்ல. எனவே இவ்விடயத்தில் நடுநிலையாக சிந்தித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி செயற்பட முடியும் என கருதி விடமுடியாது. எனவே இனவாதிகளின் போதையுடன் தான் மகிந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகிறார் என்பது உறுதியாகி விட்டது.

இந் நிலையில் இவர் எப்படி தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போகிறார். இன்னும் ஒரு விடயத்தை அவதானிப்போம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆயுட் காலத் தலைவராக இருக்கப் போவது அம்மையார், அம்மையாரின் விருப்பு வெறுப்புக்குமாறாக மகிந்தவின் வால் ஆடுமாக இருந்தாலும் அதுவும் அரசியல் சிக்கல்களை ஏற்படுத்தும். எனவே மகிந்த ஜனாதிபதியானால் நமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார் என்ற விடயத்தை கற்பனை பண்ணிக்கூட தமிழ் மக்கள் பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஐக்கிய தேசியக்கட்சியில் களமிறங்கும் வேட்பாளரான ரணில் விக்கிரம சிங்காவைப் பற்றி பார்ப்போம். கடந்த 17 வருட ஐ. தே. க ஆட்சியில் தமிழ் மக்களுக்கு கிடைத்த நன்மை என்ன? அந்த வழிமுறைகளில் இருந்து இவர் எந்தளவிற்கு வித்தியசமான போக்கைக் கடைப்பிடிக்கப் போகிறார்.

காலம் சென்ற முன்னாள் ஜனாதிபதியான ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மருமகனான ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களின் நெருப்பில் குளிர்காய முற்படுகிறார். நான் ஜனாதிபதியானால் சமாதானத்தைக் கொண் டுவருவேன். என பிரசாரம் செய்து வாக்குகளை அபகரித்து வெற்றிபெறுவதற் கான சூழ்ச்சியாக இது அமையலாம். கடந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி யில் ரணில் விக்கிரசிங்க பிரதமராகவிருந்தபோது போர் நிறுத்த உடன்படிக் கையில் கைச்சாத்திட்டார். ஆறு சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றது என் பதற்காக ரணிலை தமிழ் மக்கள் ஆதரிக்கும் நிலையில்லை. ஏன்னெனில் போர் நிறுத்தம் கைச்சாத்திடப்பட்டு சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்ற அதேவேளை சர்வதேச வலைப்பின்னல் மூலம் விடுதலைப்புலி களை கட்டுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சியில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டார் என்பது தமிழ் மக்கள் அறிந்த விடயம்.

அதுமட்டுமின்றி உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் இறுக்கமான நடவடிக்கைகளினை எடுக்காது இந்தியாவின் இராணுவத்துறையைச் சேர்ந்த நம்பியாரை அழைத்து ஆலோசனை பெற்றமை அவரது நழுவல் போக்கையே கோடிட்டுக் காட்டுகிறது. எனவே இரு பிரதான கட்சிகளிலிருந்து யார் ஜனாதிபதியானாலும் எவரும் எமது தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வினை பெற்றுத் தரப்போபவர்களல்ல.

# யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு கடிதம்

## அன்புக்குரிய

## தென்தமிழீழ மக்களுக்கு

சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் எவ்வாண்டு நடைபெற வேண்டும் என்ற பிரச்சினை முடிவுக்கு வந்து விட்டது. சிறிலங்காவின் நீதிமன்று இவ்வாண்டுதான் நடைபெற வேண்டும் என்றும், திருமதி சந்திரிகாவின் ஜனாதிபதிப் பதவிக்காலம் இவ்வாண்டு முடிவடைவதாகவும் தனது தீர்ப்பில் கூறியுள்ளது. இத்தீர்ப்புச் சந்திரிகாவுக்குப் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிப் பதவியில் 2006 ஆம் ஆண்டு இறுதிவரை நீடிக்கலாம் என்ற கனவு இத்தீர்ப்பின் மூலம் தகர்ந்து விட்டது. கட்சிக்குள் தனது அதிகாரத்தை அதிகரிப்பதன் மூலம் அரசியலில் ஒரு பலமுள்ளவராகத் தொடர அவர் எண்ணியுள்ளது எவ்வகைப் பலனைத் தரும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இத் தீர்ப்பினால் சிறிலங்காவின் ஆட்சியில் எந்தளவு மாற்றங்கள் வரும் என்பது ஆய்வுக்குரியது, என்றாலும் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை பெரிய மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது.

ஆட்சியாளர்கள் மாற்றமடைவார்களே அன்றி, ஆளும் சங் களப் பேரினவா தம் மாற்றமடையப் போவதில் லை. தமிழினத்தை அடக்கி ஆளவேண்டும் என்ற சிந்தனை பரிணாம வளர்ச்சி போல் சிங்களத் தலைவர்களிடம் அதிகரித்து வந்ததே வரலாறு காட்டும் உண்மையாகும்.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிப்பதில் சிங்களக் கட்சிகளிடையே போட்டி இருந்ததேயல்லாமல் உரிமைகளைக் கொடுக்கவேண்டும் என்ற சிந்தனை, எண்ணம் அவர்களுக்கு ஏற்படவில்லை. அரசியல் கட்சிகளில் ஆதிக்கம் செலுத்திய 'புத்த துறவிகள்', நேரடி அரசியலில் இறங்கி இது முற்று முழுதாகச் சிங்கள பௌத்தர்களுடைய நாடு என்று கூறி வருகின்றமை இந்தப் பரிணாம வளர்ச்சியின் அம்சமேயாகும்.

சிங்கள ஆட்சியாளர்களினால் உரிமைகள் பறிக்கப்பட்டு வந்து, பின்னர் தமிழினப் படுகொலைகள் இன அழிப்பின் உச்சமாக நடைபெற்றது சந்திரிகாவின் ஆட்சியிலேயாகும். இவ்வாறு கூறுவதால் இவருக்கு முன்பிருந்த ஜனாதிபதிகள் இன அழிப்பில் ஈடுபடவில்லை என்பது பொருளல்ல.

சமாதானம் என்று சொல்லிப் பதவிக்கு வந்த சந்திரிகாவின் ஆட்சியிலேயே பெருந்தொகையான தமிழ் மக்கள் ஈவிரக்கமின்றிக் கொன்று குவிக்கப்பட்டனர். இவ்வகையான ஆட்சி செய்த சந்திரிகா மேலும் ஓராண்டு பதவியில் இருக்க முடியாத தீர்ப்புத் தமிழ் பேசும் மக்களுக்குக் கொஞ்சம் ஆறுதலான செய்தியேயாகும்.

இதனைவிட இதில் மகிழ்ச்சியடைய வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இத்தீர்ப்புச் ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றி என்று கூறுகின்றார்கள் சிலர். தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்கிய நாட்டில் வழங்கப்பட்ட தீர்ப்பு ஜனநாயகத்தின் வெற்றி என்று பெரிதாக அலட்டிக் கொள்ள முடியாததாகும்.

1972 இல் ஐந்து ஆண்டுகளுக்குத் தெரிவான சிறிமாவோ தலைமையிலான அரசு அரசியலமைப்பைத் திருத்தி ஏழு ஆண்டுகள் பதிவியில் நீடித்தது. இதை சட்டத்தின் மூலம் சிறிமாவோ செய்திருந்தாலும் ஜனநாயகத்திற்கு எதிரான முறையாகவே ஆட்சி நீடிப்பு நடைபெற்றது. இதனை அன்று ஐ,தே. கட்சி எதிர்த்தது.

ஆனால் 1978 இல் ஆட்சியேற்ற ஜே.ஆர் தலைமையிலான ஐ. தே கட்சி அரசு 1983 இல் நடைபெற வேண்டிய பொதுத் தேர்தலையே நடத்தாமல் தனது அரசியல் யாப்பு மூலம் செய்தது. சட்டத்தின் மூலம் மக்களது அடிப்படை உரிமை அப்பொழுது பறிக்கப்பட்டது.

இப்பொழுது சந்திரிகா தனது பதவிக்காலம் 2006 இல் தான் முடிவடையவுள்ளது என்று கூறியதை அடிப்படை மனித உரிமைகளை மீறிய செயலென அதே ஐக்கிய தேசியக் கட்சி "குரல் எழுப்புவது மக்களை ஏமாற்றும் நடவடிக்கையேயாகும்.

இப்பொழுது இத் தீர்ப்பை ஜன நாயகத்துக்குக் கிடைத்த வெற்றி என்று கூறுபவர்கள் தீர்ப்பு மறுதலையாக இடப்பட்டிருந்தால் என்ன கூறியிருப்பார்கள்? தமக்குச் சார்பான தென்றால் சனநாயகத்துக்காதரவான தீர்ப்பு என்பதும் மாறானதென்றால் மௌனமாகி விடுவதும் அரசியல்வாதிகளின் பல்டிகளாகும்.

இதற்காகத்தான் "நீதிமன்றத்திற்குச் செல்வதென்றால் அங்கு வழங்கும் தீர்ப்பைக் கௌரவமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று தந்தை செல்வா கூறியிருந்தார்.

அதனால்தான் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்சினைகளை நீதிமன்றிக்குக் கொண்டு செல்லக்கூடாது என்றும் அதைப் பேச்சுவார்த்தை மூலமாக அல்லது போராடிப் பெற வேண்டும் என்று தந்தை செல்வா கூறியிருந்தார். எனவே இவ்வகைத் தீர்ப்புக்களைப் பெரிதாகத் தமிழ் மக்கள் எடுத்துக்கொள்ளத தேவையில்லை.

ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றி என்று பேசாது விடுவதே நல்லது. சிங்களத்து அதிகார வர்க்கங்கள் தீர்ப்பைப் பற்றிக் கூறுவதையும் நாம் பெரிதாகக் கவனிக்கத் தேவையில்லை.

ஜனாதிபதித் தேர்தல் இவ்வாண்டு நடைபெற்றால் என்ன அடுத்த ஆண்டு நடைபெற்றால் என்ன தமிழ் மக்களை எந்தச் சிங்களத் தலைவர் ஆளுவது என்பதே அதன் மூலம் நடைபெறப் போகின்றது.

தமிழ் மக்கள் தங்களை ஆளக்கூடிய தமிழ்த் தலைமையைத் தெரிவு செய்ய முடியாத நிலை தொடரப் போகின்றது. இந்த நிலை மாறித் தமிழ் மக்கள் தங்கள் தலைவிதியைத் தாங்களே தீர்மானிக்கின்ற உரிமையை என்று பெறப் போகின்றார்களோ அன்றுதான் ஜனநாயகத்தின் உண்மையான வெற்றியாகும்.

சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், அல்லது ஜனாதிபதித் தேர்தலுடன், அல்லது பின்னர் நாடாளுமன்றத்திற்கும் பொதுத் தேர்தல் நடைபெறலாம் என்பது கணிப்பாகும். இத்தேர்தல் களிலெல்லாம் தமிழ் மக்களைப் பற்றிய பரப்புரைகளே அதிகளவில் பேசப்படப் போகின்றன.

புலிப்பயங்கரவாதம் அதிகளவில் பேசப்படும். மகிந்த ராஜபக்ஷ ஒற்றை ஆட்சியின் கீழ் புலிகளை அழிப்பதற்கு ஆதரவு ஒப்புதல் கொடுத்தால் மக்கள் விடுதலை முன்னணியும், ஜாதிக ஹெல உறுமயவும் அவருக்கு ஆதரவு கொடுக்க முன்வரும்.


இந்நிலையில் அதி தீவிரவாதச் சிங்களச் சிந்தனையாளர்கள் ஒரு புறமும் தீவிரவாதச் சிங்களச் சிந்தனையாளர்கள் மறுபுறமும் தேர்தலைச் சந்திக்கவுள்ளனர். அதாவது மோதகமும் கொழுக்கட்டையும் போன்ற இரு பகுதியினர் வெவ்வேறு வடிவங்களில் தேர்தலைச் சந்திக்கப் போகின்றனர் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இருபகுதியினரும் ஒரே தன்மையுள்ளவர்களே.

நடைபெறப் போகும் தேர்தல் மூலம் சிங்களச் சமூகம் அல்லது அரசியல்வாதிகள் தமிழ் பேசும் மக்கள் பிரச்சினைக்கு என்ன தீர்வை முன்வைக்கப் போகின்றார்கள் என்பதை உலக நாடுகள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றன. இனத்துவேசம் எந்தளவு ஓங்கி வளர்ந்துள்ளது என்பதை உலகம் கண்டு கொள்ள இத் தேர்தல் மேலும் ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது எனலாம்.

**அன்புடன் மாசிலான்.**

# மீண்டும் ஒரு போர் வெடிக்குமானால் மட். மாவட்டத்தை முழுமையாக கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்

## மட்டு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு



மீண்டுமொரு போர் வெடிக்குமானால் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்திருக்கும் சுமார் ஐயாயிரம் வரையிலான சிறிலங்காப் படையினரை வெளியேற்றி மட்டக்களப்பு மாவட்டத்தை முழுமையான கட்டுப்பாட்டில் நிரந்தரமாக வைத்திருக்க முடியும். அதற்கான பலம் எம்மிடமுள்ளது.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஈழநாதம் (மட்.பதிப்பு) இணையத்தளமூடாக புலம் பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகளின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகளின் கேள்விகளுக்கு மட்டக்களப்பு மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பானு அளித்த பதில்கள் வருமாறு:-

**கேள்வி: மட்டக்களப்பின் காட்டுப் பகுதியில் ஒரு பக்கத்தை கருணா குழு தம் வசம் வைத்திருப்பதாக கூறப்படுகின்றது. சிறிலங்கா சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால இவர்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு அரசுக்கு இல்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார். இதன் உண்மை நிலை என்ன?**

-வாகீசன், அமெரிக்கா-

**பதில்:** முதலில் கருணா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதி என்பது மட்டக்களப்புக் காட்டுப்பகுதியில் மட்டுமல்ல வேறு எங்குமே கிடையாது. பொலநறுவை மாவட்டத்தின் படைக் கட்டுப்பாட்டுப் பகுதியில்தான் படையின் அனுசரணையுடன் இருக்கும் வேறு ஒட்டுப்படையாட்களுடன் கருணா விசுவாசிகள் இருக்கின்றார்கள். அதைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் சென்று உறுதிப்படுத்தியதாக அறிகின்றோம்.

அவர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது அரசின் பொறுப்பல்லவென்றால் அரசு கையெழுத்திட்டுள்ள போர் நிறுத்த உடன்படிக்கை கேள்விக்குறியாகி விடும் அல்லவா?

**கேள்வி: இப்போது மட்டக்களப்பில் அரசியல் பணியில் ஈடுபட்டிருக்கும் போராளிகளின் பாதுகாப்பு எவ்வாறு இருக்கின்றது?**

-சத்தியானந்தன் சத்தியபாலன், டோகா-

**பதில்:** புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி படைக்கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணியில் ஈடுபடும் போராளிகளினதும், உறவினர்களைச் சந்திப்பதற்காக விடுமுறையில் படைக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்லும் போராளிகளினதும் பாதுகாப்பிற்கு அரசே பொறுப்பாகும். ஆனால், அரசு அந்தப் பொறுப்பை மதிக்கத் தவறி விட்டது. தற்போதுள்ள சூழலில் எமது போராளிகள் மக்களின் பாதுகாப்பிலேயே அரசியல் பணிகளில் ஈடுபடுகின்றார்கள். போராளிகளில் கை வைத்தால் மக்களின் கொந்தளிப்பிற்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதும் அரசிற்குத் தெரியும்.



**கேள்வி: பொது மக்களுக்கு வழங்கப்படும் தற்காப்பு பயிற்சி மூலமாக மக்களுக்கு இனிமேல் யுத்தமொன்று தொடங்கும் போது பாதிப்பு ஏற்படாது தடுக்க இயலுமா? எவ்வாறு அது சாத்தியமாகும்? ஏனெனில், பல முனைகளிலும் படையினர் தொடுக்கக் கூடிய தாக்குதல்களில் இருந்து அது பாதுகாப்பளிக்குமா?**

-கிருபானந்தன் பாரீஸ், பிரான்ஸ்-

**பதில்:** அதனுடைய பெயரே தற்காப்புப் பயிற்சி. அது வலிந்த தாக்குதலுக்கோ அல்லது வேறு போர் நடவடிக்கைகளுக்கோ பயன்படுவது அல்ல. ஆனால், சிறிலங்கா அரச படைகளின் கண்ணியம் உலகறிந்தது. போரொன்று எங்கள் மீது மீண்டும் திணக்கப்படுமானால் பொது மக்களை இலக்கு வைத்து வான்வழியில் மற்றும் பீரங்கிகளால் சிறிலங்கா அரச படைகள் நடத்தக் கூடிய தாக்குதல்களிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கும் இன அழிப்புச் செயற்பாடுகளில் ஈடுபடும் சிறிலங்கா படைகளின் மிலேச்சத்தனங்களில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்குமே அந்தப்பயிற்சி வழங்கப்படுகின்றது.

**கேள்வி: யுத்தமொன்று நாளையே வெடிக்குமானால் மட்டக்களப்பு பிராந்தியத்தை நீண்ட காலத்திற்கு தக்கவைக்க உங்களால் முடியுமா?**

-ரவி ஈசன் ரொரன்ரோ, கனடா-

**பதில்:** நீண்ட காலத்திற்கல்ல, நிரந்தரமாகவே எங்களால் தக்க வைக்க முடியும். மக்கள் சிங்கள அரசின் கபடத்தை முழுமையாக அறிந்திருக்கின்றார்கள். போரை ஆரம்பித்து தமிழ் மக்களின் தேசியத்தை நிலைநாட்டும் படி தலைவருக்கு மகஜரும் தந்திருக்கின்றார்கள். ஆகவே, மக்களின் உணர்வெழுச்சியுடன் கூடிய போரொன்று நிகழுமானால் இந்த மாவட்டத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்திருக்கும் சுமார் ஐயாயிரம் வரையான சிறிலங்கா ஆயுதப் படைகளை வெளியேற்றி நிரந்தரமாகவே தக்க வைக்க முடியும்.

**கேள்வி: மட்டக்களப்பில் இப்போது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவில்லை என்றும் உங்களின் தலைமைத்துவத்தால் அந்தப் பகுதியை கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் அறிகின்றேன். அது உண்மையா என்பதை அறியத் தாருங்கள். தவிர மட்டக்களப்பிலே விடுதலைப்புலிகள் சிறுவர்களை கட்டாயமாகச் சேர்ப்பதாக குற்றச்சாட்டுக்கள் (பன்னாட்டு) எழுகின்றன. இதற்கு விடு தலைப் புலிகளின் பதில் என்ன?**

-யு.யு.குமார் இங்கிலாந்து-

**பதில்:** கருணாவின் சதியை மட்டக்களப்பு மக்கள் முறியடித்தபோதே அவர்களின் ஆதரவு யாருக்கென்பது உலகிற்கே தெளிவாகிவிட்டது. இங்கே நடைபெறுகின்ற எழுச்சி நிகழ்வுகளிலும் பேரணிகளிலும் மக்கள் தங்கள் நிலைப்பாட்டை அவ்வப்போது வெளிப்படுத்தி வருகின்றார்கள். மேலும் இந்த மாவட்டத்தின் எண்பது வீதம் வரையான தரைப்பகுதி எமது கட்டுப்பாட்டிலுயே இருக்கின்றது. அதிலே தமிழீழத்தின் அனைத்து நிருவாக அலகுகளும் முறையாக இயங்கி வருகின்றன. சிறுவர் ஆட்சேர்ப்பு என்பது ஒரு தவறான குற்றச்சாட்டு. படையில் சேர வருபவர்களின் வயதுகள் உடனுக்குடன் பரிசீலிக்கப்பட்டு வயதெல்லையை அடையாதவர்கள் மாவட்டத் தலைமைச் செயலகத்தின் மூலம்பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுகின்றார்கள். சில ஊடகங்களே தவறான மாயையை ஏற்படுத்தி வருகின்றன.

**கேள்வி: தென்னிலங்கையின் மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது மட்டக்களப்பின் சுனாமி மீள்கட்டுமானப் பணி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் அரசினால் பாரபட்சமின்றி மேற்கொள்ளப்படுகின்றதா?**

-வாசுகி கந்தசாமி, அவுஸ்ரேலியா-

**பதில்:** ஒப்பிட்டுப் பார்த்தால் அரசாங்கம் இங்கே எதையுமே செய்யவில்லை என்றுதான் கூறமுடியும். மக்கள் தங்கள் அவலங்களை அவ்வப்போது ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தி வருகின்றார்கள். அரச சார்பற்ற நிறுவனங்களும் தொண்டர் அமைப்புக்களும் புலம்பெயர்ந்த உறவுகளும் மற்றும் ஆர்வலர்களும் எங்களுடன் இணைந்து பெரும்பாலான மனிதாபிமானப் பணிகளைச் செய்துவருகின்றார்கள். அவர்களின் பணிகளை இலகுவாக்குவதற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்துவருகின்றோம்.

**கேள்வி: நேரடிப் பேச்சுவார்த்தை எவ்வாறு சாத்தியமாகும்?**

**பதில்:** பேச்சுவார்த்தை என்பது நடந்தால்தான் உண்மை. அப்படி நடந்தால் எமது தலைமை நிச்சயமாக அவசர காலச் சட்டத்தினால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்கும்.

**கேள்வி: ஒட்டுமொத்த வடக்கு கிழக்கிலே மட்டக்களப்பில்தான் பெருந்தொகையான ஒட்டுப்படைக் குழுக்கள் உள்ளன. கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் தலைமை இந்தப் பகுதி மக்களின் அபிலாசைகளைத் திருப்தி செய்யாது விட்டதுதான் இதற்கு காரணமா? இளைஞர்கள் புலிகளுடன் சேர்வதைவிட்டு ஒட்டுப்படைகளுடன் சேர்வதைத் தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளீர்களா? –**

-இரத்னபால அபிநயா-

**பதில்:** ஆக்கிரமிப்பு படைகள் இருக்கும் இடங்களில் எல்லாம் ஒட்டுப்படைகளும் இருக்கவே செய்கின்றன. மட்டக்களப்பில் இப்போது கருணா குழுவென்ற போர்வையில் அனைத்து ஒட்டுப் படைகளையும் சிறிலங்கா புலனாய்வுப்படையினர் இறக்கிவிட்டிருப்பதால் இங்கே அதிக ஒட்டுப்படைக் குழுக்கள் இருப்பது போன்ற தோற்றப்பாடு இருக்கின்றது. மேலும் இந்தியப் படையினர் உருவாக்கிய ஒட்டுப்படைகளைக் கூட சிறிலங்கா படைப் புலனாய்வினர் இன்றும் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆக விடுதலைப் போராட்டத்தை நசுக்க ஒட்டுப்படைகளை உருவாக்கிப் பேணுவது ஆக்கிரமிப்புப் படைகளின் வழக்கம். அதற்கு விடுதலைப் படையோ அதன் தலைமைத்துவமோ காரணமாக இருக்க முடியாது. மேலும் அரச படைகளின் முகாம்களுக்குள் இருக்கும் ஒரு துரோகி வெளியே சற்றுநேரம் வந்து ஒரு கொலையைச் செய்துவிட்டுப் போகும் போது ஊடகங்களுக்கு அது ஒரு பரபரப்பான செய்தியாக மாறிவிடும். இரவில் துண்டுப் பிரசுரம் மற்றும் பத்திரிகை விநியோகித்தல் ஒரு இணையத்தளத்தை நடத்துதல் என்பனவும் அப்படியே. அதை வைத்துக் கொண்டு ஒட்டுப்படைகளில் இளைஞர்கள் அதிகமாக இணைகின்றார்கள் என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடாது.

**கேள்வி: தற்போதைய நிலையில் புலம்பெயர் தமிழர்கள் குறிப்பாக கிழக்கை சொந்த இடமாக கொண்டவர்கள் என்ன செய்ய வேண்டும்?**

-அர்சுனா, ரொறன்ரோ, கனடா-

**பதில்:** அன்பின் அர்ச்சுனா அவர்களே,

தாயகத்தின் உண்மை நிலவரங்களை அவ்வப்போது அறிந்து அங்கேயுள்ள நம் உறவுகளுக்கு தெரிவியுங்கள். இயன்ற பொழுதெல்லாம் எங்களோடு தொடர்பு கொண்டு சரியான தகவல்களை அறிந்து கொள்ளுங்கள். இந்த மண்ணிற்கென்று ஒரு தனியான போர்ப் பாரம்பரியம் இருக்கின்றது. கடந்த காலங்களில் இந்த மண்ணில் எதிரிக்கெதிரான போர்களிலும் துரோகத்திற்கெதிரான நடவடிக்கையிலும் எங்களுடைய வீரமும் தேசிய உணர்வும் நிருபிக்கப்பட்டும் வந்திருக்கின்றது. சரியான ஊடகங்களைத் தெரிவு செய்வதுதான் இவ்வாறான பிரசாரங்களை முறியடிப்பதற்கான சிறந்தவழி என்று நான் கருதுகிறேன்.



# தமிழீழ விடுதலைப் புலிகளை

# அழிக்கும் இலக்கில் விரிவாக்கப்பட்ட

# சிறிலங்காவின் புலனாய்வு கட்டமைப்பு

வே.பவான்

சிறிலங்காவின் புலனாய்வுக் கட்டமைப்பின் செயற்பாட்டின் அடிப்படை நோக்கம்; அன்று தொட்டு இன்றுவரை தமிழீழ விடுதலைப்புலிகளை இல்லாது ஒ ழித்தல், தமிழர்களுக்கு தமிழீழம் என்ற எண்ணக்கருவை ஒவ்வொரு தமிழனின் மனதிலிருந்தும் அகற்றல் என்பதை இலக்காகக் கொண்டு செயற்பட்டது, செயற்பட்டுக் கொண்டு வருகின்றது எனலாம்.

ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட புலனாய்வு கட்டமைப்பானது விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க கூடிய சரியான, நுட்பமான,



திறன் பட்ட கட்டமைப்பாக இயங்கவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருந்த போதிலும் முக்கியமான காரணம் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆரம்ப காலத்திலேயே பொட்டம்மான் அவர்களின் தலைமையில் புலனாய்வு ரீதியில் சிறந்த விழிப்புணர்வைப் பெற்றிருந்தமையைக் குறிப்பிடலாம். எனவே புலிப்படைகளின் புலனாய்வு வல்லமைக்கு ஈடாக சிறிலங்கா அரசுக்கு தனது புலனாய்வுக் கட்டமைப்பை விரிவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதாவது, ஆரம்பத்தில் சிறிலங்காவின் புலனாய்வு கட்டமைப்பானது பொலிஸ் நிர்வாகத்தின் கீழ் குற்றவியல் விசாரணை திணைக்களமாக இருந்தது. (CID criminal Jnvest igation Department) இதன் அடிப்படை நோக்கம் குற்றவியல் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதும், தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தலுமாகக் காணப்பட்டது. ஆனால் அவ் அமைப்பு குற்றவியல் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் ஓர் அமைப்பு மட்டுமாகவே செயற்பட முடிந்தது. விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான திறமையை (CID) கொண்டிருக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து 1985ம் ஆண்டு அரச தேசிய பாதுகாப்பு சபையின் NSC (Nationl Security Council) கீழ் முதல் தேசிய அமைப்பாக NIB (National Intelige nce Bureau) சிறிலங்கா அரசால் உருவாக்கப்பட்டது. இதன் நோக்கமும் தமிழர் விடுதலைப் போராட்டத்தைச் சிதைத்ததை இலக்காகக் கொண்டது. ஆனால் இவ் NIB அமைப்பானது ஓரளவு வித்தியாசமான முறைகளைக் கையாண்டது. அதாவது தகவல் சேகரிப்பு, ஆய்வுத் தலைமைக்கு அனுப்புதல்,மறைமுகச் செயற்பாட்டை மேற்கொள்ளுதல் என்ற படிமுறைகளைக் கையாண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்திற்குச் சார்பாக செயற்படுகின்ற அமைப்புக்கள், மற்றும் தனி நபர்கள் பற்றிய விடயங்களும் புலிப்படையின் புலனாய்வு கட்டமைப்பு பற்றிய விடயங்களும் தகவல்களாக NIB ஆல் சேகரிக்கப்பட்டன. இவை ஆய்வுக்குட்படுத்தப்பட்டு தலைமைக்கு அனுப்பப்பட்டு பின் இரகசிய மறைமுகச் செயற்பாட்டின் மூலம் அவ் அமைப்பை அல்லது அந்நபரை அல்லது அச்செயற்பாட்டை அழித்தது. ஆனால் NIB ஆனது தகவல்களைப் பல கோணங்களில் ஆய்வுக்குட்படுத்தும் திறமையில் லாததனாலும், தலைமைக்கு இடையிலான, சீரான தொடரான செயற்பாடு காணப்பட்டமையினாலும் NIB கட்டமைப்பு வெற்றியளிக்காமல் போனது.

இதையடுத்து அமெரிக்காவின் ஊளவுத்துறை "சி.ஐ.ஏ", இந்தியாவின் புலனாய்வுத்துறை " றோ", இஸ்ரேலிய இரகசிய சேவை "மொசாட்" போன்றதொரு புலனாய்வு கட்டமைப்பை புலிகளுக்கு ஈடாக அமைக்க வேண்டிய தேவை சிறிலங்கா அரசுக்கு ஏற்பட்டது.

இதனால் பாரிய செலவில், விரிவானதொரு கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டது. அதன்படி பொலிஸ் நிர் வாகத்தின் கீழும், படைத்துறை தலைமையகத்திற்குக் கீழும் பல அமைப்புக்கள் உருவாக்கப்பட்டது. பொலிஸ் நிர்வாகத்தின் கீழ் பின்வரும் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டது.

கிளர்ச்சி முறியடிப்பு பிரிவு CSU ( Counter Subvevsire Unit). பயங்கரவாத புலன் விசாரணைப் பிரிவு TID (Terrorst Investigation Division). விசேட புலனாய்வுப் பிரிவு UNITE SIU (Special Investigation Unit). விசேட பிரிவு SB ( Speecial Branch) போதைப் பொருள் தடுப்புப் பணியகம் PNB (Police Narcotics Bureau) ஏமாற்று மோசடி விசாரணைப் பிரிவு FIB (Frauol Investion Bureau) குற்றக் கண்டு பிடிப்பு பணியகம் CDB (Crim ed Investire Bureau)

இவ் அமைப்புக்களில் CDB ஆனது கொழும்பு நகரின் பாதுகாப்பை முதன்மைப் படுத்தி செயற்பட்டு வந்தது. பின் இவ் அமைப்பு கலைக்கப்பட்டு தற்போது MPIU (Mountlarinia Polic Inteligence Uathering) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. MPIUI நேரடிக் கண்காணிப்பில் வழிநடத்தியவர்களாக இருந்தவர்கள் நிலாப்தீன், ஜெயரட்ணம் ஆகிய இருவரும். ஆனால் தற்போது இருவரும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.



படைத்துறை தலைமை யகத்தின் கீழ் பின்வரும் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டது. இராணுவப்புலனாய்வுப் பிரிவு, கடற் படை புலனாய்வுப் பிரிவு, விமானப் படை புலனாய்வுப் பிரிவு இவ்வாறாக தமிழ்த் தேசியத்தை அழிக்கும் இலக்கில் சிறிலங்கா புலனாய்வுக் கட்டமைப்பு பொலிஸ் நிர்வாகத்தின் கீழும், படைத்து றை தலைமையகத்தின் கீழும் பல அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு விரிவாக்கப்பட்டது. தற்போது உள்ளக புலனாய்வு பணியகம் DII (Derectorete of Internal Intellgence) வெளிநாட்டு புலனாய்வு பணியகம் DFI (Derea torete of Foreign Intelligence) என்றவாறு இரு கட்டமைப்புக்களாக விரிவாக்கப்பட்டது.

இதில் DFI இன் வெளியக புலனாய்வு செயற்பாடுகளை எல்லா நாட்டிலும் உள்ள தூதுவராலயங்கள் முன்னெடுத்துச் செல்கின்றன. DII இன் தலைமையகம் கொழும்பில் உள்ள கேம்பிறீச் பிளேசில் அமைந்துள்ளது. DFI இன் தலைமையகம் கொழும்பிலுள்ள அவுஸ்ரேலியா உயர்ஸ்தானிகாரியாலயத்திற்கு எதிரே பஸ்தரிப்பிடத்துக்குப் பின்புறமாக அமைந்துள்ளது.

தற்போதைய சூழலில் தமிழர் தாயகத்தில் ஊடுருவியுள்ள அமைப்பாக DMI காணப்படுகின்றது. இதன் ஆரம்ப இயக்குனர் மேஜர்ஜெனரல் பலகல்ல ஆவார். பின்னர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் நியமிக்கப்பட்டார். அதன் பின் பிரிகேடியர் கபில ஹெந்தவிதாரண நியமிக்கப்பட்டார். ஆனால் தற்போது கபில ஹெந்தவிதாரணவும் ஆட்டம் காணத் தொடங்கி விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

DMI அமைப்பானது பணத்திற்குச் சோரம் போபவர்களையும், தமிழ்த் தேசிய விரோதிகளையும் தன் நண்பர் குழுக்களாக இணைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் போருக்கு எதிராக அவர்களைப் பயன்படுத்தி வருகின்றது. இவ்வாறு DMI இணைந்துள்ள நண்பர் குழுக்கள் புளொட்மோகன் குழு, கருணா குழு, ராசிக்குழு, டக்ளஸ் குழு, ஜே.வி.பி குழு போன்றது ரோகக் குழுக்களைக் குறிப்பிடலாம். DMI ஆனது தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றிய பெறுமதி வாய்ந்த தகவல்களைத் திரட்டுவதற்கும், புலிகளுக்கு எதிரான நாச வேலைகளைச் செய்வதற்கும், நீண்ட வீச்சு, வேவு ரோந்து அணியின் LRRP (Long Range Reconnaissance Patrol) தாக்குதல் நடவடிக்கைக்கான இலக்குகளை வகுப்பதற்கும் இத்துரோகக் குழுக்களைப் பயன்படுத்துகின்றது. இவ்வாறாக சிங்களப் புலனாய்வுத்துறை துணைப்படையின் உதவியுடன் விரிவாக்கப்பட்டது.

ஆனால் இன்றைய சூழலில் இராணுவப் போர் ஓய்வில் இருக்க அரசியல் போரும், புலனாய்வுப் போரும் சிங்களப் படைக்கும் புலிப்படைக்கும் இடையே தலை தூக்கியுள்ளது. புலனாய்வுப் போரைப் பொறுத்தவரையில் சிறிலங்கா அரசானது தமிழீழ விடுதலைப்புலிகளைச் சின்னாபின்னமாக்கி தமிழர்கள் தமிழீழம் வென்றெடுப்பதைச் சீர்குலைக்கும் நோக்கில் தமிழ்த் தேசிய விரோதக் குழுக்களையும் இணைத்து இராணுவ புலனாய்வு கட்டமைப்பை உருவாக்கியது. ஆனால் அக் கட்டமைப்பால் புலிப்படையின் புலனாய்வு வல்லாதிக்கத்திற்கு எதிராக இன்று வரை நின்று பிடிக்கமுடியவில்லை. அதாவது சிறிலங்கா புலனாய்வு கட்டமைப்பானது தன் இராணுவ உளவாளிளையும், துணைப்படை நண்பர்களையும் இழந்து செயலூக்கம் அற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.



# அரச பேரினவாத அச்சுறுத்தலில் தமிழ் ஊடகத்துறை

ஒரு நாட்டின் ஜனநாயகத்தை அடையாளப்படுத்துவதற்கு ஊடகங்கள் பிரதானமானவை. ஊடகங்களின் சுயாதீனமான கருத்துக்களை, சிந்தனைகளை வெளிக்கொண்டுவரும் போது அச்சுறுத்தல், பீதி என்பன இன்றி சுதந்திரமான சூழல் நிலவ வேண்டும். அதன் போதுதான் ஒரு நாட்டின் ஜனநாயகத்தின் தன்மை எந்தளவு உள்ளது என்பதை அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

சிறிலங்காவில் மூவின மக்கள் வாழ்கின்ற போதும் அரசின் ஊடகச் சுதந்திரம் என்பது தமிழர் தரப்பைப் பொறுத்தமட்டில் அச்சுறுத்தல் மிக்கதாக, ஆபத்து மிக்கதாக வளர்ச்சியடைந்து வருகின்றது. அந்த வளர்ச்சியின் உச்சமாக இப்போது அரசின் அராஜகத்தனங்களால். தமிழ் ஊடகத்துறை நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஊடகங்களின் பங்களிப்பு பிரதானமாகக் கருதப்பட்டது. சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை, மழுங்கடிக்கக் கூடிய கருத்துக்களை, உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை தமது கட்டுப்பாட்டிலுள்ள அரச ஊடகங்கள் வாயிலாக வெளிக்கொணர்ந்தது. படைத்தரப்புக்கு ஏற்படும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கையை மிகக் குறைத்து உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டது. அதே வேளை விடுதலைப்புலிகளுக்கு ஏற்படும் சிறு இழப்புக்களை மிகைப்படுத்துவதும் அப்பாவித் தமிழ் இளைஞர்களைப் பயங்கரவாதிகளாக நிரூபித்துக் காட்டுவதும் இந்த ஊடகங்களின் நோக்கமாக இருந்தது. இதனால் தமது இனத்தையே ஏமாற்றுகின்றோம் என்ற மிகப் பெரிய தவறை அரசு செய்து கொண்டிருந்ததை அப்போது காணமுடிந்தது.

மறுபுறம் விடுதலைப் புலிகள் களநிலவரங்களின் யதார்த்தத்தினை வெளிக்கொணர வேண்டிய தேவை ஏற்பட்டது. போரின் ஆரம்பத்தில் "உறுமல்" பலகைகளில் உண்மையான நிலவரங்களை மக்கள் பார்வைக்கு விட்டு வந்த விடுதலைப்புலிகள் இன்று ஊடகத்துறையில் தமது அகலக்கால் பரப்பி நிற்கின்றனர்.

சிங்களப் பேரினவாதம் தமது ஊடகத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி எவ்வாறு தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தினை மழுங்கடிக்க நினைத்தார்களோ அது நிறைவேறவில்லை என்பதை உணர்ந்து கொண்டனர். இவை ஒரு புறமிருக்க தமிழீழ ஊடகங்களும் தவிர்ந்த ஏனைய தமிழ் ஊடகவியலாளர்களும் தமது பேனாமுனையால் விடுதலைப் போராட்டத்தின் யதார்த்தத்தை சிங்களப் படைகளின் அராஜகத் தனங்களை வெளிக் கொணர்ந்தனர்.

இது சர்வதேசம் வரை சிங்கள அரசுக்குத் தாக்கத்தைக் கொடுத்தது. சர்வதேச சமூகம் சிறிலங்கா அரசு மீது கொண்டிருந்த நம்பிக்கை முகமூடி கிழித்தெறியப்படுவதற்கு தமிழ் ஊடகவியலாளர்களின் பங்களிப்பு பிரதானமானவை.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் சிங்களப் பேரினவாதம் தமது கழுகுப் பார்வையை தமிழ் ஊடகவியலாளர்கள் மீது திருப்பியது. தமிழ் ஊடகவியலாளர்களை, விரட்டுவது, தாக்குவது, கைது செய்வது என அதன் அராஜகத் தனங்கள் விரிவடைந்து. இறுதியாகப் படுகொலை செய்யப்படும் பரிதாப நிலையைத் தோற்றுவித்தது. அதுமட்டுமன்றி இன்னும் தமிழ் ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்கு இலக்காவதும், கைது செய்யப்படுவதும் தொடர் அத்தியாயங்களாகச் செல்கின்றன.

கடந்த போர்க் காலத்தில் அதனைச் சற்றுப் பார்ப்போம் தமிழ் ஊடகவியலாளர்களான சிறிகஜன், படையினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பின்னர் விடுதலையானார். அதே போன்று வவுனியா மாவட்டத்தில் பிரபல தமிழ் ஊடகவியலாளர் மணிக்கவாசகர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விடுதலையானார்.

இவ்வாறு அவர்கள் மீதான கைது நடிக்கைகள் ஆரம்பமாகி கடந்த 19.10.2000ம் ஆண்டு அன்று யாழ் ஊடகவியலாளர் நிமல்ராஜன் அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். அந்தக் காலகட்டத்தில் சிங்களப் படைகள் வடபுலத்தில் குண்டுகள் வீசி கண்மூடித்தனமான தாக்குதலை மேற் கொண்டமை தொடர்பாக சர்வதேச ஊடகங்கள் வாயிலாக உண்மையை வெளிக்கொணர்ந்திருந்தார் நிமலராஜன் அதற்கு வழங்கி பரிசு துப்பாக்கிக் குண்டுகள். இற்றைவரை நிமலராசனின் கொலையாளிகள் கைது செய்யப்பட வில்லை. அதன் தொடர் கதையாக 31-05-2004ம் ஆண்டு தமிழ் ஊடகத்து றையின் சிரேஷ்ட ஊடகவியலாளரும், சிறந்த பத்தி எழுத்தாளருமான ஜி.நடேசன் மட்டக்களப்பில் அவரது அலுவலகத்திற்குச் சென்ற போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

தமிழ் ஊடகத்துறையில் நடேசன் தனக்கென ஒரு முத்திரை பதித்தவர். அவர் தமிழ்த் தேசியத்தை நேசித்தவர். விடுதலைப் போராட்டத்தின் மீது அளவற்ற பற்றுடன் காணப்பட்டார். படைத்தரப்பின் அடாவடித்தனங்களைக் கண்டித்த அவர் தமது பேனாமுனையால் உண்மைகளை வெளிக்கொணர்ந்தார். எனினும் இவரது பேனா தொடர்ந்தும் ஊற்றெடுப்பது ஆபத்து எனக் கருதியோ என்னவோ படைத்தரப்பின் பாதுகாப்பு மிக்க பகுதிக்குள் வைத்தே தேசவிரோதிகள் துணையோடு இவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவர் ஊடகத்துறையூடாக ஆற்றிய பங்களிப்பைக் கௌரவப்படுத்தும் வகையில் விடுதலைப்புலிகள் நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவை தவிர மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் ஊடகவியலாளர்கள் மிரட்டப்பட்டனர், அச்சுறுத்தப்பட்டனர். இதன் காரணமாக பல தமிழ் ஊடகவியலாளர்கள் புலம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. நடேசன் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் மட்டக்களப்பில் ஏதாவது ஒரு சம்பவம் என்றால் அங்கே மொய்த்து நிற்கும் தமிழ் ஊடகவியலாளர்கள் குழாம் பார்த்தாலே புழகாங்கிதம் அடையச் செய்யும். அந்தளவிற்கு அவர்களது ஆதிக்கமும் துணிவும் வலுத்திருந்தது.

ஆனால் இன்று நிலைமை பரிதாபம் எஞ்சிய ஒருசில தமிழ் ஊடகவியலாளர்கள் தங்களது முகவரியைத் தெரிவிக்காமலே செய்திகளைச் சேகரிக்க வேண்டிய நிலை ஒரு ஊடகவியலாளன் உயர்வாக மதிக்கப்படுபவன். கௌரவமான அந்தஸ்த்து வழங்கப்படுகின்றது. அவ்வாறானவர்கள் இன்று தங்களை இனங்காட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் அரசின் அச்சுறுத்தலே ஆகும். இவ்வாறான சூழலில் கூட தமிழ்த் தேசியத்திற்காகக் குரல் கொடுத்த தமிழ் ஊடகத்துறையின் மிகப் பெரிய பொக்கிசம் என வர்ணிக்கப்பட்ட டி.சிவராம் அவர்கள் கடந்த ஏப்ரல் 28ம் திகதி கொழும்பில் கடத்தப்பட்டு கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார். இன்றைய தமிழ் ஊடகத்துறைக்கும் வளர்ந்துவரும் ஊடகவியலாளர்களுக்கும் சிவராமின் இழப்பு பேரிழப்பு.




தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் புலமை பெற்ற சிவராம் தமிழ்த் தேசியத்திற்காக ஆற்றிய பணி அளப்பெரியது. தமிழினம் சிறந்ததொரு ஆய்வாளனை இழந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. இவரது அளப்பெரிய பணிக்குத் தேசியத் தலைவர் அவர்கள் மாமனிதர் விருது வழங்கிக் கௌரவித்தமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம்.

**பிரவீனா**

இன்று கதிர்காமர் கொலை தொடர்பாக கொழும்பு நகரில் வாழும் தமிழ் மக்களைச் சித்திரவதைப்படுத்தும் சிங்களப்படை சிவராம் போன்றோரது படுகொலை விசாரணைகளைத் துரிதமாக மேற்கொள்ளாது மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றது. அதே வேளை சிவராமின் படுகொலையுடன் மட்டும் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான அரச படையினரின் அடாவடிகள், கொலைமிரட்டல்கள் நின்றுவிடவில்லை.

அது ஒரு தொடர்கதையாகி செல்கின்றது. ஏனெனில் ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு விநியோகப் பணியாளர் அரசகுமார் அக்கரைப்பற்றுப் பிரதேசத்திற்கு கடந்த ஜூன் 29ம் திகதி அன்று பத்திரிகைகளை எடுத்துச் சென்ற போது சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவம் நடைபெற்ற இடம் படையினர் கட்டுப்பாட்டுப் பிரதேசம்.

படைத்தரப்பின் ஒத்துழைப்பின்றி இலகுவாகச் சுட்டுக்கொல்வது என்பது கடினமானது. இதன் பின்னர் கூட ஈழநாதம் அதிரடிப்படையினரின் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் ஈழநாதம் விநியோக முகவர்களிடம் சென்ற அதிரடிப்படையினர் எச்சரிக்கை செய்துள்ளனர். இவ்வாறு எச்சரிக்கை விடுத்தவர்கள் காரைதீவு படைமுகாமிற்குள் புகுந்து கொண்டதையும் மக்கள் கண்டுள்ளனர்.

இதேவேளை கதிர்காமர் கொலையை அடுத்து குருநாகலைச் சேர்ந்த தமிழ் ஊடகவியலாளர் ரமேஷ் படைத்தரப்பினரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார். அதேசமயம் ஜே.வி.பி.யி னர் கொழும்பில் நடாத்திய ஆர்ப்பாட்ட மொன்றில் செய்தி சேகரிக்கச் சென்ற சுடர்ஒளிப் பத்திரிகையின் செய்தியாளரான ஜதுர்சன் என்பவர் ஜே.வி.பி.குண்டர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.


தான் ஒரு செய்தியாளர் என அடையாளப்படுத்திய போதும் ஜே.வி.பி.குண்டர்கள் புலியெனக் கூறித் தாக்கியுள்ளனர். அத்துடன் அவரது கமரா, கையடக்கத்தொலைபேசி என்பனவும் அபகரிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இவர் ஒருநாள் தடுத்து வைக்கப்பட்டு மறு நாள் விடுதலையானார். ஜதுர்சன் எதற்காகக் கைது செய்யப்பட்டார். தமிழர் என்பதற்குத் தானே. அப்படியானால் தமிழர்கள் ஊடகவியலாளர்களாக இருக்க முடியாதா?

இச்சம்பவத்தில் ஓரிரு நாட்களுக்கு முன்னர் சுடர் ஒளி விளம்பர நிலையம் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டது. ஆயினும் உயிர்ச் சேதமில்லை. அதன் பின்னர் சுடரொளி தலைமை அலுவலகம் மீது ஓகஸ்ட் 29. மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஒரு பணியாளர் பலியாகினார். மூவர் காயமடைந்துள்ளனர். நிமலராஜனில் இருந்து நடேசன், சிவராம், அரசகுமார் எனப் படுகொலை தொடர் கதையாக; அச்சுறுத்தல், கைது நடவடிக்கைகளும் அதிகரித்திருப்பது தமிழ் ஊடகத்துறையை நசுக்குவதற்காக மேற்கொள்ளப்படும் திட்டமிடப்பட்ட நடவடிக்கையாகும்.


இவைதவிர சிறிலங்கா அரசு தமது அரச வானொலி சேவையான தென்றல் ஒலிபரப்பில் தமது ஆட்சிக்கு ஒற்றை ஆசனத்தை வழங்கி வரும் ஈ.பி.டி.பி கட்சிக்கு அளிக்கும் மகத்தான சேவையாக தமிழனத்திற்கு எதிரான கருத்துக்களைத் தெரிவிக்கும் வகையில் களமமைத்துக் கொடுத்திருக்கிறது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை, தேசிய உணர்வுகளை அவதூறான வார்த்தைகளால் தூற்றுவது மக்களிடையே உண்மைக்குப் புறம்பான கருத்துக்களைத் தெரிவிக்கும் நடவடிக்கைகளை இந்த ஒலிபரப்பு மேற்கொண்டு வருகின்றது.


அத்துடன் தமிழ் ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் கூட மிக மோசமாக விமர்சிக்கப்படுகின்றன. ஊடகத் தர்மத்திற்கு அப்பாற்பட்டு நாகரீகமற்ற வார்த்தைகளைப் பாவித்து நடத்தப்படும் இந்த ஒலிபரப்பு நிகழ்ச்சி தொடர்பாக தமிழ் மக்கள் மிகவும் கொதிப்படைந்துள்ளனர்.

போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு சமாதானத்தை நோக்கியதாக அரசு இதய சுத்தியுடன் நகர்வுகளை மேற்கொண்டிருக்குமானால் இவ்வாறான துரோகக் கும்பல்களுக்கு தமது ஊடகங்களில் களமமைத்துக் கொடுத்திருக்க விடமாட்டாது.









?

ஆயினும் தமிழினம் தமிழ்த் தேசியத்தின் மீதும், தேசியத் தலைவர் மீதும் கொண்டிருக்கும் பற்றுறுதியானது இவ்வாறான ஒலிபரப்புக்களை நடத்தி மக்களைக் குழப்பத்திலாழ்த்தவோ அல்லது திசை திருப்பவோ முடியாது என்பது வெளிப்படை.

எனவே மூவினங்கள் வாழும் நாடு ஐக்கிய இலங்கைக்குள் சமாதானத் தீர்வு காணப் போவதாகக்கூறும் சிங்களத் தலைமைகள் ஏன் தமிழ் ஊடகத்துறையை நசுக்க வேண்டும். அது அவர்களின் உண்மைக்குப் புறம்பான விசமப் பிரசாரத்தை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு சென்றதற்குப் பழி தீர்க்கும் நடவடிக்கையாகவே கருத வேண்டியுள்ளது.

இந்த நிலையில் சிங்கள தேசம் ஜனநாயகம் இங்கு இருக்கிறது என்று கூறுமானால் அது கேலிக்குரியது. அது எப்போதோ அழிந்து விட்டது. இதேவேளை எவ்வித அச்சுறுத்தல் மிரட்டல்கள் வந்தாலும் தமிழ் ஊடகங்கள் விடுதலையின் யதார்த்தத்தைச் சிந்தித்து அதனை தமது ஊடகங்கள் வாயிலாக வெளிக்கொணர்கின்றன. சர்வதேச சமூகம் தமிழினத் தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும். அதற்காக ஊடகங்களின் பங்களிப்பும் எழுது கோல்களும் பிரதானமானவை என்பதைச் சிந்திப்போம்.

# நெத்தி வேர்வை சிந்தும் செங்கல் உற்பத்தி; சுனாமி இவர்களுக்கு ராசியா?

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பிரதான கைத்தொழில்களுள் ஒன்றான செங்கல் கைத்தொழில் பெரும் முன்னேற்றம் கண் டு வருகின்றது. இவ்வாறான நிலையில் அண்மைக் காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கல்லுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

கடந்த வருடம் டிசம்பரில் ஏற்பட்ட கடற்கோள் அனர்த்தத்தினையடுத்து செங்கல்லுக்கு இவ்வாறானதொரு பாரிய தட்டுப்பாடு காணப்படுகின்றது. அத்துடன் செங்கல்லுக்கு தேவைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இத்தகையதொரு தட்டுப்பாடுகளையும் தேவைகளையும் ஈடுசெய்து கொள்ளமுடியாதபடிக்கு செங்கல் உற்பத்தியாளர்கள் பெரும் சிரமங்களையும் இன்னோரன்ன கஷ்டங்களையும் அனுபவித்து வருகின்றனர்.


மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கல்லுக்கு நிலவுகின்ற தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதாயின் செங்கல் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கடப்பாடு செங்கல் தொழிலாளர்களுக்கு இன்றியமையாததொன்றாய் காணப்படுகின்றது. அவ்வாறு செங்கல் கைத்தொழிலை அதிகரித்து செங்கல் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமாயின் செங்கல் உற்பத்தியாளர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும். செங்கல் உற்பத்தியானது இலங்கையில் பல மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறு பல மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் தமிழர் தயாகப் பிரதேசமான வடகிழக்கிலும் இவ்வுற்பத்தி முக்கிய இடத்தினை வகிக்கிறது

தமிழர் தாயகப்பகுதியான வடகிழக்குப் பிரதேசங்களில் இச் செங்கல் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் கூடுதலாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலேயே அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. மட்டக்களப்பு மாவ ட்டத்தையும் செங்கல் உற்பத்தியையும் நோக்குவோமாயின் , மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் அடிப்படைத் தொழில்களுள் செங்கல் உற்பத்திக் கைத்தொழில் மூன்றாவது இடத்தினை வகிக்கின்றதாகக் கருத இடமுண்டு.

அதாவது நெற்செய்கை முதலாவது இடத்திலும், மீன்பிடி கைத்தொழில் இராண்வது இடத்திலும், செங்கல் கைத்தொழில் மூன்றாவது இடத்திலுமுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பாலும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது. அதாவது வேப்பவட்டுவான், காரைக்காடு, பாலசேனை, பாலமடு, மணற்பிட்டி, தாண்டியடி, கொத்தியாபுலை, கோயில்போரதீவு, பழுகாமம், புன்னைக்குளம், பாலையடிவட்டை, காக்காச்சிவட்டை போன்ற பகுதிகளிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது. இப்பகுதிகளில் செங்கல் உற்பத்தி செய்யப்படுவதற்கு முக்கிய காரணம் இப் பிரதேசத்தில் உள்ள களிமண் செங்கல் உற்பத்திக்கு உகந்ததாகக் காணப்படுவதேயாகும்.

செங்கல் உற்பத்தியானது பண்டைக்காலம் தொட்டு இருந்து வந்துள்ள போதிலும் தற்காலங்களிலேயே இதனுடைய வளர்ச்சி மென்மேலும் பரிணமித்து வருகின்றது. இருந்த போதிலும் கடந்த வருட கடற்கோள் அனர்த்தத்தின் பின் இச் செங்கள் உற்பத்தி மேலும் விரிவடைந்ததுடன் கேள்வியும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் அண்மைக் காலத்தில் செங்கல்லுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. இவ்வாறான நிலையில் செங்கல் உற்பத்தியாளர்களிடம் நேரடியாகச் சென்று விபரங்களைக் கேட்டறிந்த போது கிடைக்கப்பெற்ற தகவல்கள் இவை.

**வேப்பவெட்டுவானைச் சேர்ந்த வடிவேல் (24) என்பவ ரைக் கேட்டபோது:-**



எனக்கு 1 பிள்ளை உண்டு. நான் இந்தச் செங்கல் தொழிலை எனது 10 வயது முதல் செய்து வருகின்றேன். நான் கூலிக்கு வேலை செய்கிறேன். நான் நாள் ஒன்றுக்கு 1000 கல் வெட்டுவேன்.



**நீங்கள் எப்படி இந்தச் செங்கல்லை உற்பத்தி செய்கின்றீர்கள் எனக் கேட்டபோது?**

செங்கல் வெட்டக்கூடிய தரமான களிமண் உள்ள இடத்தினைத் துப்பரவு செய்து அதன்பின்பு களியைக் கொத்திப் புரட்டி தண்ணீரை ஊற்றி இளக வைக்க வேண்டும். களி மண்ணானது நன்கு இளகிய பிற்பாடு மீண்டும் நன்கு கொத்திப்புரட்டி தண்ணீரை ஊற்ற வேண்டும். அதன் பிறகு மீண்டும் ஒரு தடவை கொத்திச் சாட வேண்டும். அதன் பிறகு களி நன்கு கூழாகிய பின்பே அச்சியில் இட்டு ஒவ்வொன்றாக வெட்டி அடுக்குவோம். தொடர்ந்து வெயிலில் நன்கு காயவைத்த பின்பு சூளையில் அடுக்குவோம் எப்படியும் 20,000 தொடக்கம் 40,000 வரையிலான செங்கற்களைச் சூளையில் அடுக்கி நாங்கள் விறகிலேயே செங்கற்களைச் சுடுவோம்.

நான் முதலாளிக்கு செங்கற்களை வெட்டி அடுக்கி மட்டுமே கொடுப்பேன். 1000 கல் வெட்டி அடுக்கிக் கொடுத்தால் 425-450 ரூபா வரை கூலி கிடைக்கும். நாங்கள் 3 பேர் சேர்ந்து செங்கல்லை வெட்டி அடுக்கி முதலாளியிடம் ஒப்படைப்போம் அவர் வேறு கூலியாட்களைப் பிடித்து 1000 கல்லுக்கு 450ரூபா வீதம் கொடுத்து அடுக்குவார். இந்தச் செங்கல் வேலையானது மிகவும் கஷஷ்டமான தொரு வேலை என்று கூறினார்.

**வேப்பவெட்டுவனைச் சேர்ந்த விஜயகுமாரனிடம் கேட்ட போது:-**



நான் இந்த செங்கல் கைத்தொழிலை எனது 12 வயது முதல் மேற்கொண்டு வருகின்றேன். இத் தொழிலே எனது குடும்பத்தின் பிரதான தொழிலாகும். வேப்ப வெட்டுவானில் உள்ள பெரும்பாலான மக்கள் இத் தொழிலையே தங்களது பிரதான தொழிலாக முன்னெடுத்து வருகின்றனர். வருடத்தில் 2ம் மாதம் தொடக்கம் 8ம் மாத கடைசி வரையும் இத்தொழிலை மேற் கொள்வோம். அதன் பிறகு வயல்வேலை, விறகு கம்பு என்பன விற்பது போன்ற தொழில்களை ஏனைய மழைகாலங்களில் செய்வோம்.

நாங்கள் 1000 கல் வெட்டி அடுக்கிக் கொடுத்தால் 425-450 ரூபா வரையான கூலி கிடைக்கும். நாங்கள் 2இஞ்சி கல்லே வெட்டுவோம். இங்கு மற்றைய பகுதிகளைப் போல் உமியின் மூலம் செங்கற்களை சுடமால் விறகு மூலமே சுடுவோம். ஏன்னெனில் உமி மூலம் சுடும் போது கூடிய நாட்கள் எடுக்கும். ஆனால் விறகு மூலம் கற்களைச் சுடும்போது ஒரு இரவிலேயே சுட முடியும். விறகு மூலம் சுடும் போது மொத்தம் 4 நாட்களில் கல் சூளையை பிரிக்க முடியும்.


சுனாமி அனர்த்தத்திற்கு முன்பைவிட சுனாமி அனர்த்தத்திற்குப் பின்பு இங்கு செங்கல் கூடுதலான விலைக்கு விற்கப்படுகின்றன. அதாவது சுனாமிக்கு முன்பு 1000 செங்கல் 1500 ரூபாய் வரை விற்கப்பட்டது. தற்போது சுனாமிக்கு பின்னர் 1000

நேரு

செங்கல் 2000ரூபாய் வரை விற்கப்படுகின்றன. இதற்குக் காரணம் கூடுதலான செங்கற்கள் தேவைப்படுவதுடன் உற்பத்திப் பொருட்களுக்கு அதிக விலை விற்கப்படுவதே ஆகும். காரணம் செங்கல் சூளைக்கு சுடுவதற்கு தேவையான விறகை அதிகவிலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. 40,000 ஆயிரம் செங்கற்களைச் சுடுவதற்கு 15,000 ரூபாய் பெறுமதியான விறகு தேவைப்படுகின்றது.

இதற்கான விறகினை அதிக தூரம் சென்றே எடுக்க வேண்டியுள்ளதும், விறகின் விலை உயர்வுக்கு முக்கிய காரணமா கவும் உள்ளன. தற்போது செங்கல்லுக்கு விலையேறிக் கொண்டே செல்கின்றது. ஆனால் கூலி மட்டும் உயர்வதாகயில்லை. செங்கல் மூலம் கூலியாட்களுக்கு எந்தவித இலாபமுமில்லை. இந்தத் தொழில் மூலம் மட்டும் குடும்பத்தைக் கொண்டு நடத்த முடியாத நிலையில் உள்ளோம்.

இந்தச் செங்கல் தொழிலில் களியுடன் கிடந்து பாடுபடுவது மட்டும்தான் மிச்சம் ஆனால் குடும்பநிலை மிகவும் கஷ்டமான நிலைக்குத் தள்ளப்பட்டது. நாங்கள் எடுக்கின்ற கூலியைக் கொண்டு அன்றாடச் செலவைக் கூட ஈடுசெய்ய முடியாதபடியுள்ளது. என்ன செய்வது சின்ன வயதில் இருந்து இத்தொழிலை செய்து வருகின்ற படியினாலும், நல்லாக அனுபவம்



உள்ளதும், மிகவும் பரிட்சயமானதுமான தொழில் என்ப தாலும் இத் தொழிலையே தொடர்ந்து செய்து வருகின்றோம். அத்துடன் இத் தொழிலை விட வேறு எந்தத் தொழிலும் இங்கு இல்லை என்பதனாலேயே தொடர்ந்து இத்தொழிலை செய்ய வேண்டியுள்ளது.

**அடுத்து வேப்பவெட்டுவானைச் சேர்ந்த(55) வயதுடைய அருளையா என்பரைக் கேட்ட போது:-**



நான் 34 வருட காலமாக சொந்தமாக செங்கல் வாடி வைத்து பல கூலியாட்களை வேலைக்கு அமர்த்தி இத் தொழிலை மேற்கொண்டு வருகின்றேன். முன்பு கூலிக்கே வேலை செய்து வந்தேன். எனக்கு மொத்தம் 9 பிள்ளைகள் இதில் 3 பெண் பிள்ளைகள் படிக்கின்றனர். மீதிப்பேர் திருமணம் செய்து விட்டனர்.

தம்பி இந்தத் தொழில் மூலம் பெரிய இலாபம் ஈட்ட முடியமால் உள்ளது. ஏனெனில் எல்லாப் பொருட்களுக்கும் விலையேறிக் கொண்டு வருவதனால் கடந்த வருடங்களில் பல நபர்களை வைத்து வேலை செய்த நான். தற்போது இரண்டு பேர் மட்டும் வேலை செய்கின் றோம். இந்தத் தொழில் மிகவும் கஷ்டம் தம்பி.

என்ன செய்வது இத்தொழிலைப் பழகித்தோமே என்பதனாலும், இங்கு இந்த தொழிலைவிட வேறு எந்தத் தொழில் செய்யலாம். இங்கு என்ன தொழில்தான் இருக்கிறது. கஷ்டப்பட்டாச்சும் எனது மூன்று பெண்பிள்ளைகளையும் படிக்க வைக்க வேண்டும் என்பதால் கடைசி மூச்சி இருக்கும் வரை இத் தொழிலையே செய்துதான் ஆகவேண்டும். சுனாமிக்கு முன்பு செங்கல் விற்பனை குறைவாகக் காணப்பட்டது. ஆனால் தற்போது கொஞ்சம் கூடுதலான ஏற்றுமதி செய்கின்றோம்.

சுனாமிக்கு முன்பை விட இப்போது கல்லுக்கு விலை ஓரளவு பரவாயில்லை. 2 இஞ்சிக் கல் 1000திற்கு 900-1000 ரூபா வரையான செலவு முடியும். 1 லோட் விறகு 9,000-1,000 வரை விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. 1 லோட் (உழவு இயந்திரத்தினால்) விறகினால் 20,000 கல் சுடுவோம். இச் செங்கல் தொழில் மூலம் எப்படியும் எல்லா செலவுகளையும் தள்ளி 20,000 கல்லுக்கும் பொதுவாக ஒரு 4000 ரூபா இலாபம் அடைய முடியும் அது கிடைப்பதும் பெரும் கஷ்டம்.

தம்பி எல்லாத்துக்கும் இப்போது செலவு தானே. என்னதான் செய்வது நமது நாடும் சரி அரசாங்கமும் சரி வரவர சாமானின் விலை கூடிக் கொண்டே செல்கின்றது.

**வேப்பவெட்டுவான் கல் மிகவும் நல்ல கல் என சொல்கின்றார்களே இதற்கு என்ன காரணம் என்று கேட்டபோது:-**

தம்பி இங்கு காணப்படுகின்ற களி மிகவும் திறமா னதாகும். இதனால் இங்கு உற்பத்தி செய்யப் படும் செங்கற்கள் மிகவும் திறமையானது எனக் கூறினார்.

**பாலசேனையைச் சேர்ந்த நல்லதம்பி (38) என்பவரைக் கேட்ட போது:-**



எனக்கு 4 பிள்ளைகள். நான் 8 வருட காலமாக சொந்தக் கல்வாடி வைத்து தொழில் செய்து வருகின்றேன். இப்போது நானும் எனது மகனும் சேர்ந்து கல்வெட்டிச் சுடுகின்றோம். தம்பி நினைக்கிற மாதிரி செங்கல் மூலம் பெரிய இலாபம் எடுக்க முடியாது. குடும்பச் செலவை ஓரளவு ஓட்டமுடியும். இதற்கூடாகத் தான் 4 பிள்ளைகளும், நான் மனைவியும் சாப்பிட வேண்டும். படிப்பிக்க வேண்டும் எனக் கூறினார்.

அத்துடன் சுனாமிக்கு முன்பைவிட இப்போது கல்லுக்கு விலையும் தான். கல் கூடுதலாக விற்கப்பட்டும் வருகின்றது. இருந்தும் குடும்பச் செலவு எல்லாம் கூடுதலாகக் காணப்படுவதினால் இதன் மூலம் மிச்சம் வருவது கஷ்டம் நாங்கள் காத்தான்குடி மட்டக்களப்பு வாழைச்சேனை வரை கல்லை ஏற்றுமதி செய்கின்றோம்.

**முனைக்காட்டைச் சேர்ந்த புலேந்திரனைக் கேட்டபோது:-**

நான் மணற்பிட்டியில் கூலிக்குச் செங்கல் வெட்டுகிறேன். எனக்கு 1000 கல் வெட்டினால் 1000 ரூபா கி டைக்கும். 1 நாளைக்கு 1000 கல் வெட்டுவேன். நாங்கள் உமி மூலம் தான் கல்லை சுடுவோம். 1 லோட் உமி 3500-3750 ரூபா வரை விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. இந்தச் செங்கல் வேலையானது மிகவும் கஷ்டம். வேறு தொழில் இல்லாத படியினாலும் குடும்பத்தைக் கொண்டு நடத்த வேண்டும் என்பதற்காகவும் இத் தொழிலை செய்து வருகின்றேன் என்று கூறினார்.

இவ்வாறு செங்கல் கைத்தொழில் மூலம் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் கூடிய லாபம் ஈட்டினாலும் அவர்கள் மிகவும் கஷ்டத்தின் மத்திலேயே இத் தொழிலை தொடர்ந்தும் செய்துவருகின்றனர். இவர்களது அயராத முயற்சியினால் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏராளமான பகுதிக்குச் செங்கல்களை ஏற்றுமதி செய்து வருகின்றனர். என்பதை ஈழநாதம் ஊடாக வெளிக்காட்டுகின்றோம்.




# விலை

**மலைமகள்**

அன்று ஒரு கறி வைப்போம் என்று எங்கேயோ போய் முருங்கைக் காய் பிடுங்கி வந்த சுருதிதான் அவரை முதலில் கண்டவள். ஏதோ வேலையாக என்னுடைய காப்பரணில் நின்ற நான், இவள் யாருடனோ கதைக்கும் குரல் கேட்டு எட்டிப் பார்த்துவிட்டுத் தான், ஓடிப் போய் என்னவென்று கேட்டேன்.

''சண்டை நடக்கிற இடத்துக்குக் கிட்ட ஏன் ஐயா வந்தனீங்கள்? அவன் ஷெல் அடிப்பான் எண்டு கேக்க, ஒண்டும் சொல்லாமல் அழுகிறாரடி" என்றாள் இவள்.

எனக்குப் பார்க்கப் பெரிய சங்கடமாக இருந்தது. அப்பாக்கள் அழுததை நான் ஒரு போதும் பார்க்கவில்லை. எங்களுடைய அப்பா சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் தான் வீட்டுக்கு வருவார். வீட்டில் எல்லா வேலையும் செய்வார். அம்மாவுக்குச் சமைத்தும் கொடுப்பார். எங்களுக்குக் குளிக்கத் தண்ணீர் அள்ளித் தருவார். பின்னேரமென்றால் மடமடப்பான சறமும் சேர்ட்டும் போட்டு குறுநில மன்னர் போல வெளிக் கிட்டுப் போய்க் கடற்கரையில் காலாற நடந்து வருவார். இரவு எங்களோடு சாப்பிடுவார். நிறையக் கதைப்பார். அப்பாவாவது அழுவதாவது?

அந்த ஐயா அழ, எனக்கு அப்பாவின் நினைவும் வர, வயிற்றைப் பிசைந்தது. அவர் துவாயால் வாயைப் பொத்தியவாறு விம்மிக் கொண்டிருந்தார். கண்ணீர் ஓடிக்கொண்டேயிருந்தது. என்னுடைய அப்பாவை விடவும், இவருக்கு வயது கூட. இவருடைய பிள்ளைகள் எங்களை விடவும் பெரிய அக்காக்கள், அண்ணாக்களாகத்தான் இருப்பார்கள். காணியைப் பார்த்து அழுவதால், அது இவருடையதாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் காணி போனாலும் இவ்வளவு பெரிய அக்காக்களும், அண்ணாக்களும் இவரை வைத்துப் பார்க்கமாட்டார்களோ? நான் மனதுக்குள் ஏதேதோ எல்லாம் யோசித்துக் கொண்டிருந்தேன். அதற்கிடையில் என்னுடன் நிற்கும் ஒருத்தி தேநீரோடு வந்து,

''குடியுங்கோ ஐயா, தூரத்திலிருந்து வந்திருப்பீங்கள்" என்றாள்.

இரண்டு கைகளாலும் தேநீர்க் கோப்பையை வாங்கியவர் குடித்து முடித்து, முகத்தைத் துடைத்தபின், அவரின் மனம் சற்றுத் தெளிந்திருப்பது போல் எனக்குப்பட்டது. பெருமூச்சொன்றை விட்டுக்கொண்டு தானாகவே அவர் கதைத்தார்.

''எனக்கு ஏழு பொம்பிளைப் பிள்ளையளம்மா. ஆறு பேர் குடும்பமாயிட்டுதுகள். மூத்தவள் மட்டும் வீட்டோட இருக்கிறாள். முப்பத்தி மூண்டு வயசு. பிள்ளைக்குச் செவ்வாய்க்குற்றம். இவ்வளவு காலமும் ஒண்டும் சரிவரேல்ல. நான் பெரிய கமக்காரனம்மா. பரந்தனில, கரடிப் போக்கில எனக்கு வயல் காணியள் இருக்கு. ஏழு பேரையுமே கஷ்ரம் தெரியாமத்தான் வளத்தனான். பிள்ளையளுக்கே எல்லாத்தையும் பிரிச்சுக் குடுத்திட்டன். இந்தக் காணியும், மில்லும் மூத்தவளுக்கு. இப்பதான் பிள்ளைக்கு ஒரு இடம் பொருந்தி வந்திருக்குது. மாப்பிள்ளை பகுதி கொஞ்சம் கஷ்ரம். காணியையும், மில்லையும் பார்த்திட்டுத்தான் ஓமெண்டு சொன்னது"

மூச்சை ஆழமாக இழுத்து விட்டுச் சொன்னார்.

''இப்ப காணியும் போய், மில்லும் போய், என்ரை குஞ்சின்ரை வாழ்க்கையும் போயிட்டுது. ம்....... ஏதோ எனக்கொருக்கா காணியையும் மில்லையும் பார்க்க வேணும் போல இருந்தது. உங்களிட்டையோ, ஆமியிட்டையோ எண்டு கூடத் தெரியாமத்தான் வந்தனான். கண்டிட்டு அவன் சுட்டாலும் பரவாயில்லை எண்டு வந்தனான். இனி நான் இருந்தும் என்ரை பிள்ளைக்கு என்னத்தைச் செய்யப் போறன்.?

துவாயை உதறிக்கொண்டு எழுந்தவரிடம், மில் இருக்குமிடத்தைக் கேட்டாள் சுருதி. இராணுவம் நிலை கொண்டிருந்த பகுதி நோக்கிக் கையைக் காட்டினார்.

''நான் வாறன் மக்கள்...... நல்லாயிருங்கோ" என்றவாறு மிதி வண்டியை உருட்டிக்கொண்டு தளர்வாக நடந்து போனவரின் பின்னே ஓடிப்போன சுருதி,

''ஷெல்லடிப்பான்.......... கெதியிலை போகவேணும் ஐயா"

என்று சொல்ல, அவர் மிதி வண்டியிலேறிப் போனார். சுருதி திரும்பியும் ஓட்டத்தில் வந்தாள்.

''ஏன்ரி...... காணியும் மில்லும் இல்லாத பொம்பிளையளைக் கலியாணம் செய்ய ஊருலகத்தில ஒரு ஆம்பிளையளும் இல்லையோ?" என்றாள்.

''இல்லாத படியாத்தான் ஐயா அழுகிறார்" என்றேன் நான்.

சுருதி தலையை ஆட்டியவாறு சொன்னாள்,

''எனக்கும் இரண்டு அண்ணாமார் இருக்கினம். சீதனம் வாங்கித்தான் கலியாணம் கட்டிறதெண்டா, உங்களுக்கு ஒரு தங்கச்சி இருக்குதெண்டதை மறந்திடுங்கோ எண்டு கடிதம் எழுதப்போறன்"

என்றவளின் முகத்தில் தெரிந்தது கோபமா? அல்லது வேதனையா? அல்லது இரண்டுமே கலந்த ஒன்றா?

அன்றைக்கு முருங்கைக் காய் சமைக்கவில்லை. அன்று முழுவதும் நாங்கள் அந்த ஐயாவை, முகம் தெரியாத அக்காவை, அவர்கள் வாழ்ந்திருக்கக் கூடிய வாழ்வைப் பற்றியே கதைத்துக்கொண்டிருந்தோம். இதற்கிடையில் சுருதிதன் தமையன்மாருக்குக் கடிதம் எழுதி, வெளி வேலைக்குப் போனவர்களிடம் அஞ்சல் செய்யுமாறு கொடுத்து விட்டாள்.

''இண்டையிலயிருந்து இது எங்கட காணி. இந்தக் காணியை அக்காவின்ரை கையில் குடுக்கிறவரைக்கும், இதைப் பாதுகாக்கிறது எங்கடை பொறுப்பு. இதை அவனிட்டை விடக்கூடாது. விடுபட்டாலும் அடிச்சுப் பிடிப்பம்" என்றாள் சுருதி திடீரென்று.

இந்தக் கதை அந்த நேரம் சண்டையில் நின்ற அநேகம் பேருக்குத் தெரியும். எல்லோருமாகச் சேர்ந்து எங்களைக் ''கட்டுக்கிணத்துக் காணிக்காரர்" ஆக்கிவிட்டார்கள்.

இப்போதுதான் அந்தக் காணி விலைபோகின்றதா?

1998 இல் கிளிநொச்சியை நாங்கள் மீட்ட போது அக்காவின் காணியும், மில்லும் மீண்டு விட்டன. கண்ணிவெடிகள் முடிந்தவரையில் அகற்றப்பட்டு, போன வருடம் தான் காணிகள், வீடுகளெல்லாம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. 1996 இல் முப்பத்து மூன்று வயதென்றால், இப்போது அக்காவுக்கு முப்பத்தெட்டு வயதாகியிருக்கும். இப்போதுதான் காணி விலை போகின்றது என்றால், இனித்தான் கலியாணமோ? அல்லது காணியில்லா விட்டாலும் பரவாயில்லை என்று அக்காவை அப்போதோ திருமணம் செய்த அண்ணாதான் இப்போது ஏதும் தேவைக்காகக் காணியை விற்கிறாரோ? யோசனைகள் பல மாதிரி ஓடின.

''விடக் கூடாது விட்டாலும் பிடிச்சுக் குடுக்கவேணும்"

என்று சொன்ன சுருதி எதிரியிடம் எம் நிலம் பறி போகாமல் நாம் தடுத்த ஒரு சண்டையில் நிலத்தின் விலையாக உயிரைக் கொடுத்தாள். பறிபோன நிலத்தை மீட்ட சண்டையில் கயல்விழி, நானெல்லாம் எமது உடலின் பாதி இயக்கத்தை, கொஞ்சப் பேர் உறுப்புக்களை, இன்னும் கொஞ்சப் பேர் உயிர்களை............ நிறையக் கொடுத்து விட்டோம்.

எனக்குத் தெரிந்த, அறிந்த, பழகிய முகங்கள் பலரை அதன் பின்னர் நான் சந்திக்கவுமில்லை. யார் யார் இருக்கின்றார்களோ? எந்தத் துறையில் என்ன பணியைச் செய்கின்றார்களோ? எல்லோரையும் திடீரென்று ஒரு நாள் சந்தித்தால்.........

எனக்கு எல்லாவற்றையும் கயல்விழியுடன் கதைக்கவேண்டும் போலிருக்கிறது. உடனேயே கதைக்க வேண்டும். எல்லாவற்றையும் ஒருமுறை அவளோடு சேர்ந்து மீட்க வேண்டும். வதனியைக் கூப்பிட்டவாறே வீட்டு வாசலை நோக்கி நாற்காலியை உருட்டத் தொடங்கினேன்.

# விழுதுகள்..... 18

**லெப். ரவிக்குமார்**
**நாகேஸ் யோகராஜா**
**உப்போடைஇ கல்லடி**
**மடடக்களப்பு.**



**அழியாதோர் ஆகினீர்**


மீன்பாடும் தேன்நாடு என்று பேர்கொண்ட எமது மட்டக்களப்பின் இந்த வாவிக்கரையில் நின்று, இந்த



மீன்களின் ரீங்காரத்தை எத்தனை நாள் ரசித்திருப்போம். இன்று நீயில்லாமல் நான் தனியே நிற்கையில் மீன்கள் பாடும். அந்த மெல்லிய ஒலிகூட சோக இசையாகவே தோன்றுகிறதே!.

போன திங்கட்கிழமை உன்னையும், உன் தம்பி அன்ரனியையும் இழந்த அந்த சம்பவத்தை நினைத்தால் ஏற்படும் ஏதோ இனம் புரியாத உணர்வு, ஆத்திரத்தில் எம்மை நிதானம் இழக்கச் செய்துவிடுமோ என்றுகூட அஞ்சுகின்றேன்.

அன்று நான் தடுக்க தடுக்க 'குளித்துவிட்டு உடனே வந்துவிடுகின்றேன்' என்றுசொல்லிவிட்டு உனது தம்பியுடன் போனாய். 'தம்பியுடையான் சண்டைக்கு அஞ்சான்' என்கிற பழமொழிதான் அப்போது எனக்கு நினைவுக்கு வந்தது. அன்று, எனக்கு தேகநிலை நன்றாக இருந்தியிருந்தால் எப்படியும் என்னால் முடிந்த வரை உன்னைக் காப்பாற்ற முயன்றிருப்பேன்.




குளித்துவிட்டு இன்ன வீதியால்தான் வருவாய் என்பதே இந்த மாபாவி விபரமாக தகவல் அனுப்பியிருக்கிறான். உள்வீதியாலும், பிரதானவீதியாலும் நீயும் உன்தம்பியும் சுற்றிவளைக்கப் பட்டுவிட்டீர்கள் என்பதை கேள்விப்பட்டதும் ஒவ்வொரு தாக்குதலிலும் மின்னிய உனது வீரமே என் நினைவிற்கு வந்தது. அதிரடிப்படையினருக்கு அன்று ஏதோ கஸ்ரகாலம் என்றுகூட நினைத்துக் கொண்டேன்.

அதிரடிப்படையினருடன் நீயும் உன்தம்பியும் மோதிக்கொண்டு இருந்திர்கள். இங்கே என்மனம் அலைமோதிக்கொண்டு இருந்தது. யாழ்ப்பாணம் என்றால் எப்படியாவது தப்பிவிடலாம். ஊர்றோட்டில் நிற்கும் அதிரடிப்படையிடம் தப்பினால் வாவி. பிரதான வீதியில் நிற்கும் அதிரடிப்படையிடம் தப்பினால் கல்லடி முகாம் அல்லது கடல். நீயும், உன்தம்பியும் வைத்திருந்த ஆறுகுண்டுகளின் சத்தமும் கேட்டவுடன் இனி என்ன செய்யப்பபோகின்றீரகள் என என்மனம் படபடத்துக்கொண்டு இருந்தது.

காயமடைந்த உன் தம்



பியின் அருகில் நீயோடியதும் 'அண்ணா நீ தப்பிவிடு' என்றுசொல்லவும் அதைக்கேலாமல் நீ அவனை தூக்கிக்கொண்டு ஓடும்போது காயப்பட்டாய். சந்தியில் அதிரடிப்படையினர் உங்களை நெருங்கவே 'அண்ணா என்னை சூட்டுவிடு' எனகெஞ்சியபோ




து'. ஆண்டவனே! உன் உடன்பிறப்பு அன்ரனியின் தரையில் நீயே! ஓ எனக்கதறிய நீ சயனைட்டைக் கடித்து விட்டு, ரவைகளை முடித்து உனது பிஸ்ரலை ஆற்றுக்குள் வீசிஎறிந்த சம்பவம்பற்றி அச்சம்பவம்பற்றி அச்சம்பவத்தை நேரில்கண்டவர்கள் விபரித்தபோது "விடுதலையே". உனக்காக எத்தனை துயரங்களைத்தான் என்மனதில் ஏற்கவேண்டியுள்ளது' என எண்ணிக்கொண்டேன்.

காப்பிலி தோற்றம் கொண்ட முரட்டுக் குழந்தையான நீ அழுவதை, கல்லடியில் எவருமே கண்டியிருக்கமாட்டார்கள். பாடசாலையில் உனது தம்பிக்கு யாராவது அடித்து விட்டால் அவர்களை அடித்து உருட்டி துவம்சம் செய்துவிடுவாய்!

அவ்வளவு பாசம் வைத்திருந்த தம்பியை நீயே எம உலகம் அனுப்பியதையும், பகைவர்களிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்பதில் நியும் உன் தம்பியும் காட்டிய மன உறுதியை நினைக்கையில், தம்பியை இழந்த நிலையிலும் எமது இயக்க ஆயுதம் எதிரிகளிடம் சிக்கக் கூடாது என்பதுற்காக அதை ஆற்றில் வீசியெறிந்த நிதானத்தையும் நினைக்கையில், தாங்க முடியாத வேதனைகளுக்கு மத்தியிலும் எம்மனதில் வைராக்கியம் மேலோங்குதடா.

இதுவெல்லாம் தலைவர் ஊட்டிவளர்த்த விடுதலையுணர்வின் வெளிப்பாடே மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாவது தலைவரை ஒழித்துவிட்டதாக 'லங்கா புகத்' பெருமையளித்துக் கொண்டது. ஆனால் எத்தனை ரவிக்குமார்கள், எத்தனை அன்ரனிகள் மீண்டும் மீண்டும் இந்து மண்ணில் மலர்வார்கள் என்பதை அது சொல்லப்போவதில்லை. நாளைய வரலாறு இந்த உண்மையை நிச்



சயம் உணரத்தத்தான் போகின்றது. அதுவரையில் நான் உயிருடன் இருப்பனோ என்னவோ?

வழக்கத்தில் படுவான்கரையில் இருந்து கல்லடிக்கு தோணியில் வரும்போது எவ்வளவு திட்டங்களையெல்லாம் கதைத்துக் கொண்டுவருவோம். இன்று இந்த வாவிலேயே தோணியை வலித்துக்கொள்ளும் போது எனது இதயமும் சோர்ந்து வலிக்கிறதடா! ஆற்றிலே நாம் கதைத்தவை ஆற்றோடு போகாமல் அவற்றை அபாரசாதனைகளாக்கக் காத்திருக்கின்றேன்''.கொஞ்சம் பொறு!

இதனை எழுதிய மாவீரன் கப்டன் கரன், இதேயிடத்தில், ஒரு சுற்றிவளைப்பில் அகப்பட்டு 10.11.1986 அன்று வீரச்சாவடைந்தார்.

தொடரும்..........

# மட்டக்களப்பு மாவட்ட இடப் பெயர் ஆய்வுகள்

சென்ற வாரத் தொடர்ச்சி.......

**10.08 தாளங்குடா**

வேடர் குடியிருப்புக் கருகே குடாவடியில் உள்ள இக் கிராமத்தில் தாளை மரம் நிறைந்து காணப்பட்டதன் காரணமாக தாளங்குடா எனவும் அழைக்கப்படுகிறது.

**10.09 பாலமுனை**

உலகநாச்சி மண்முனையை ஆண்ட காலப்பகுதியில் பாலன் எனும் வேடன் இக் கிராமத்தில் தலைவனாக இருந்தான். மீன்பிடி பிரதான தொழிலாக இருந்தது. அங்கு குடியேறியவர்களால் தலைவனாக அமர்த்தப்பட்ட இவனது பெயரைக் கொண்டே பாலன்முனை பாலமுனையாயிற்று என்பர்.

**10.10 மண்முனை**

மண் மிகுந்த பிரதேசமாகவும், நீரால் சூழப்பட்ட முனையாகவும் காணப்பட்டமையினால் மண்முனை என அழைக்கபடலாயிற்று. உலகநாச்சி இப்பகுதியை ஆண்ட காலப் பகுதியில் மண்முனையிலேயே தன் வசிப்பிடத்தை அமைத்ததாக நம்பப்படுகிறது.

**10.11 மாவிலங்கத்துறை**

இயற்கைத் துறைமுக வசதி கொண்ட இப்பகுதியில் கரையோரத்தில் மாவிலங்க மரம் நிறைந்து காணப்பட்ட காரணத்தால் இப்பகுதி மாவிலங்கத்துறை என அழைக்கப்படலாயிற்று.

**10.12 இராசதுரை கிராமம்**

பாராளுமன்ற உறுப்பினர் திரு.செல்லையா இராசதுரை மூலம் ஆக்கப்பட்ட மாதிரிக் கிராமம்.

**11. மண்முனை மேற்கு (வவுணதீவு) பிரதேச செயலக இடப்பெயர்கள்.**

**11.01. இலுப்படிச்சேனை:-**

இலுப்பை மரங்கள் நிறைந்த காட்டுப் பகுதியாகக் காணப்பட்டது. இம்மரங்களை வெட்டி மக்கள் குடியேறி சேனை செய்த இடமாகையினால் பெறும் பெயர் என்பர்.




**11.02. பாவற்கொடிச்சேனை:-**

இங்குள்ள மக்களினால் அதிகமாக பயிரிடப்பட்ட சேனைப் பயிர் செய்கையில் பாகல் கொடி முக்கியம் பெற்றமையினால் ஏற்பட்ட பெயர்.

**11.03 பன்சேனை:-**

பன் புற்கள் அதிகம் வளர்ந்து சேனை போன்று காணப்படுவதால் ஏற்படும் பெயர்.

**11.04 காந்திநகர்:-**


1983ம் ஆண்டு இனப்பிரச்சினை காரணமாக மலை நாட்டிலிருந்து வந்தவர்கள் குடியேறுவதற்கு புதிதாக அமைத்த கிராமத்திற்கு காந்தியின் பெயர் சூட்டியதாகவும், அதனால் காந்தி நகர் என அழைக்கப்படுகிறது என்பர்.

**11.05 காஞ்சுரங்குடா:-**

காஞ்சூரை மரங்கள் குடாப் பகுதியில் காணப்பட்டமையினால் ஏற்பட்ட பெயர் என்பர்.

**11.06. கொத்தியாபுலை-கொத்தனார் துறை:-**

இவ்விடத்திற்குத் தென்பக்கமாக ஒரு சவக்காலை காணப்பட்டது. இதன் முன்புறம் புலை வாசல் என அழைக்கப்பட்டது. அவ்விடத்தில் காணப்பட்ட நாவல் மரத்தில் துட்ட தெய்வம் காணப்பட்டதாகவும், கர்ப்பிணித் தாய்மார்களின் சுகப்பிரசவத்திற்கு கொத்தியார் எனும் தெய்வத்திற்கு நேர்த்தி வைப்பது அக்கால மக்களின் வழக்கமாக இருந்தது.



புலை வாசல் நாவலடியில் கொத்தியார் நிற்பார். எனும் காரணத்தினால் அவ்விடத்திற்கு சிறுவர்களை அனுப்புவதில்லை எனக் கூறப்பட்டது. எனவே இவ்விடம் நாளடைவில் கொத்தியபுலை என திரிந்தது என்பர்.

கலிங்க காலத்தில் இவ்விடம் கொத்தனார் துறை என அழைக்கப்பட்டது எனும் கருத்தும் உள்ளது.

**11.07கன்னன்குடா:-**

**11.07.01.** குடியிருப்புக்கு அருகே கனம்குடா இருப்பதால் அது மருவி கன்னன்குடா என அழைக்கப்பட்டது என ஒரு சாரார் கருத்து உள்ளது.

**11.07.02.** கிராமத்தின் வடக்கே வாவிக்கரையில் அமைந்த திமிலதீவிலிருந்து கண்ண பிரான் மீது அதிக பக்தியுள்ள ஒருவர் இக்கிராமத்தில் குடியேறி காடாகக் கிடந்த நிலப்பரப்பை வெட்டி திருத்திகாணியாக்கி நெல் விதைத்து பெரும் செல்வந்தராகி தனது உற்றார் உறவினர்களுக்கு ஆதரவளித்தும், அல்லல் படுவோருக்கும் அண்டி வாழ்வோருக்கும் ஆதரவு கொடுத்து ஒரு குட்டி கண்ணன் போல் காணப்பட்டார். இவர் மறைந்ததும் இவரது பெயரைக் குறிக்கும் முகமாக கண்ணன் கொடையூர் எனப் பெயர் பெற்றது. அது காலப் போக்கில் கன்னன் குடா என அழைக்கப்பட்டது என்பர்.

**11.07.03.** சேற்று நிலத்தால் சூழப்பட்டு அக்குடா போன்று காணப்ப் இப்பிரதேசத்தில் கண்ணா மரங்கள் காணப்பட்டமையினால் கண்ணாகுடி என்பது மருவி கன்னன்குடா என ஆயிற்று என்பர்.

**11.08. கரையாக்கன்தீவு:-**

இங்கு காணப்பட்ட வேடன் காரையாக்கன் எனும் தெய்வத்திற்கு பூசை செய்து வந்தான். இதனால் இவ்வூருக்கு கரையாக்கன் தீவு என பெயர் ஏற்படலாயிற்று என்பர்.

**11.09. குறிஞ்சாமுனை:-**

**11.09.01.** குறிஞ்சாக் கொடிகள் நிறைந்து காணப்பட்டதனால் இவ்விடம் குறிஞ்சாமுனை என அழைக்கப்படுகின்றது என்பர்.

**11.09.02** குறிஞ்சான் எனும் வேடன் சேனை வெட்டிக் குடியிருந்தமையினால் ஏற்பட்ட பெயர் என்பர்.

**11.10. மண்டபத்தடி:-** தற்காலிகமாக ஒரு விழா செய்வதற்காக சிலைகள் குருத்தோலைகள் கட்டி அங்கு மண்டபம் ஒன்று அமைத்து வதனமார் சடங்கு நடத்துவதற்கு வல்லகட்டி காவல் செய்த இடமாகவும் இது காணப்பட்டதனால் மண்டபத்தடி எனப் பெயர் பெறக் காரணமாயிற்று.

**11.11. புதுமண்டபத்தடி:-**

மண்டபத்தடி கிராமத்தில் வைத்தியசாலை அமைக்க இடமில்லாமல் வேறு இடத்துக்கு காவல் இடம் மாற்றப்பட்டபோது பெற்ற பெயர் ஆகும்.

**11.12. பருத்திச்சேனை:-**

இக்கிராமத்தில் 1931ம் ஆண்டளவில் பல பருத்தி மரங்கள் நிறைந்து காணப்பட்ட போதும் இங்கு சேனை செய்யும் விவசாயிகள் பருத்தி மரங்களை அழித்து பயிர்ச் செய்கையை மேற்கொண்டனர். இதன் பின்பு இக்கிராமம் பருத்திச்சேனை என மக்களால் அழைக்கப்படுகின்றது.

**11.13 ஈச்சந்தீவு:-**

இக்கிராமத்தில் ஈச்சை மரங்கள் அதிகமாகக் காணப்படுவதனாலும், இவ்வூரின் கிழக்குப் பக்கம் முன்னோர்களால் நூறு ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் வேளாண்மை செய்யப்பட்டதாகவும் இவ் நிலப்பரப்பு தீவாக அமைந்தும் காணப்பட்டதனால் இவ்வூருக்கு ஈச்சந்தீவு என பெயர் நிலைத்தது என்பர்.

**11.14. வவுணதீவு:-**

வவுண சிங்கன் எனும் சிற்றரசன் ஆட்சி செய்த இடம்.

**மேலதிக விளக்கம்:-** புலியந்தீவு சத்துருக்கொண்டான் எனும் இடப் பெயர்களில் உண்டு.

**11.15 நாவற்காடு:-**

நாவல் மரங்கள் அடர்த்தியாக காடு போல் காணப்பட்ட இடம் ஆகும்.

**11.16. மங்கிகட்டு:-**

இக்கிராமத்தையண்டிய தென்பகுதியில் ஓர் கட்டு காணப்படுகிறது. (நீரைத் தேக்கி வைக்கும் அணைக்கட்டு) இக்கட்டினை மங்கை எனும் ஒரு பெண் அமைத்ததாகவும், இதனால் இதை மங்கை கட்டு என அழைத்து அது மருவி மங்கிக் கட்டு ஆயிற்று என்பர்.

**11.17.18. விளாவட்டவான்/ மகிழவட்டவான்:-**

சிறு தாழ்ந்த நிலப்பரப்பில் (வயலுக்கு) அருகில் நீரைத் தேக்கி வைத்து வயலுக்கு (வட்டை) தேவைக்கேற்ப நீரை செலுத்துவதும், நீர் வயலில் கூடினால் நீரை அகற்றுவதற்கும் ஏற்ற இடத்தினை முன்னோர்கள் வான் என அழைத்தனர். வட்டையும், வானும் சேர்ந்த இடத்தில் விளா மரங்கள் ஏராளமாகக் காணப்பட்டதால் விளா வட்டுவான் எனப் பெயர் பெற மகிழ மரங்கள் அதிகம் காணப்பட்டமையினால் மகிழ வட்டவான் என அழைக்கப்பட்டன என்பர்.

**11.19. நெடியமடு:-**

நீளமான (நெடிய) பள்ளங்கள் (மடு) காணப்படுவதால் நெடியமடு எனப் பெயர் வழங்கப்படலாயிற்று என்பர்.

**11.20 நரிப்புல் தோட்டம்:-**

நரிப்புல் என்பது வட்டவடிவான கட்டி போன்ற அடியினை உடைய ஈக்கில் போன்ற பருமனுடைய ஒரு அடிவரை வளரக்கூடிய புல் இனமாகவே இது உவர் நிலத்தில் வளரக் கூடியது.

தோட்டம் என்பது சிறு வெளிப்பகுதியாகும். நரிப்புல் தோட்டம் எனும் சிறு சிறு வெளிப் பகுதிகளில் செறிந்து வளர்ந்து காணப்பட்டதால் இவ்வூரை நரிப்புல் தொட்டம் என ஆரம்ப காலத்தில் அழைக்கப்பட்டு அது மருவி பின்னர் நரிப்புல் தோட்டம் என அழைக்கப்படுகின்றது.

**11.21. ஆயித்தியமலை:-**

**11.21.01.** சூழவுள்ள இடங்கள் சோலைக் காடாக இருந்த காலத்தில் இந்த இடம் பரந்த வெளியாகவும், வெயில் மிகுந்த இடமாகவும், சூரியன் அடி வானத்தில் உதிக்கும் போதே துல்லியமாகப் பார்க்கக் கூடியதுமாக இருந்தமையினால் சூரியனின் பெயர்களில் ஒன்றாகிய ஆதித்தன் எனும் பெயரை அடிப்படையாகக் கொண்டு ஆயித்தியமலை என பெயர் வரக் காரணமாயிற்று என்பர்.

(தொடரும்.........)

**கே.எஸ்.ஆர்.சிவகுமார்**
**கலாசார உத்தியோகஸ்த்தர்**
**(கோறளைப்பற்று)**

---




## அதிஸ்டம் அனுராவுக்கு



அனுராவுக்கு:-

கதிர்காமர் சுட்டுக் கொலை! பட்டென்று செய்தி மின்னல் வேகத்தில் பறக்க, கடிகாரத்தில் நேரத்தைச் சரிபார்ப்பது போல் தங்கள் பாதுகாப்பை திரும்பிப் பார்த்தவர்கள் அனேகம்பேர். ஆபத்து! எனக்கும் வரப்போகிறதா? என பீதி கொண்டு வழங்கப்பட்ட பாதுகாப்பை உறுதிப்படுத்த சிலர் முயன்றவேளை இன்னும் சிலர் கதிர்காமர் படுகொலையால் ஆனந்தக் கண்ணீர் விட்டனர்.

எதற்காக இந்தக் கண்ணீர்? கதிர்காமர் உயிர் பிரிந்தவுடன் காலியாகவிருக்கும் வெளிவிவகார அமைச்சுப் பதவி யாருக்குக் கிடைக்கும். சிக்கலான நேரத்தில் காலியாக இருக்கும் பதவியைப் பெற்றுக் கொள்வதற்காக அம்மாவுக்குச் சாமரம் வீசியவர்கள் ஏராளம். ஜயந்த தனபால, சங்கரியார் பெயர்கூட அரசியல் அரங்கில் அடிபட்டது.

இனவாதிகள் எல்லாரும் தமிழினத்திற்குத் துரோகம் செய்யும் சங்கரியாருக்கு அமைச்சு பதவி வழங்க வேண்டும் என அபிப்பிராயம் தெரிவித்தனர். அப்படி என்ன பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியில் தமிழர் ஒருவரின் கையில்தான் வெளிவிவகார அமைச்சுப் பதவி இருக்க வேண்டுமா என்று கேள்வி எழுப்பலாம். ஆனால் ஒரு சிங்களவர் பதவி வகிப்பதைவிட தமிழ் இனத்திற்குத் துரோகம் செய்யும் ஒருவருக்கு இந்தப் பதவியை வழங்குவதால் நிறையவே சாதித்து விடலாம் எனக் கருதித்தான் கடந்த ஆட்சிக் காலத்தில் அப்படி ஒரு பதவி அம்மணியினால் வழங்கப்பட்டது.

கதிர்காமர் கொலைக்குப் பின்னர் அந்தப் பதவியை உங்கள் கைகளுக்குத் தந்திருக்கிறார். குடும்பப் பாசம், சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் பண்டா குடும்பத்திலிருந்து கை நழுவிப் போகக் கூடாது என்பதற்காக அம்மணி அவர்கள் தமது சகோதரனுக்கு இந்தப் பதவியை அளித்திருக்கிறார் அல்லவா?

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிற்பதற்குக் கடினமான முயற்சிகளை நீங்கள் மேற்கொண்டீர்கள். மேடைப் பேச்சுக்கள் மெய் சிலிர்க்க வைத்தன. பண்டாரநாயக்கா குடும்பத்திலிருந்து சுதந்திரக் கட்சியின் தலைமை பறிபோகாது எனப் பேசிய பேச்சுக்கள் எல்லாம் ஓய்ந்து இறுதியில் மகிந்த ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதேவேளை பிரதமர் வேட்பாளராக உங்களை நிறுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் தற்போது அதிஸ்டம் அடித்திருக்கிறது. இவை நீடிக்குமா? என்பது கேள்விக் குறியாகவுள்ளது. ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலை இந்த வருடமே நடத்த வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

ஜனாதிபதி மாளிகை வாசத்தை முடித்துக் கொண்டு பெட்டிப் படுக்கைகளுடன் அம்மணி காலியாகப் போகிறார். அடுத்தது யார்? நீலமா? பச்சையா? என்ற கேள்வி எழுந்துள்ளன. ஒருவேளை ரணில் ஜனாதிபதியானால் அங்குதான் உங்களுக்கு துரதிஷ்டம். ஏனெனில் நாடாளுமன்றம் கலைக்கப்படும் வாய்ப்பு ஏற்படலாம்.

அவ்வாறெனில் உங்கள் வெளிவிவகார அமைச்சுப் பதவி என்பது விரல் விட்டு எண்ணும் மாதங்களே என எண்ணத் தோன்றுகின்றது. அதற்குள் கதிர்காமர் செய்த துரோகத்தனங்களைப் போல் துரோகத்தனங்களைச் செய்து பண்டாரநாயக்கா குடும்பம் ஈழத்தமிழினத்திற்குச் செய்த கறைபடிந்த வரலாற்றுத் தவறுகளைத் தொடர்ந்து செய்து விடவேண்டாம்.

இங்ஙனம்
ஈழமகன்.

# ஈழப் போரியல் வரலாற்றில் பெண் போராளிகள்

உலக நாடுகளை மையமாக வைத்து பெண்கள் தொடர்பான முன்னேற்றங்களை ஒப்பிட்டு நோக்கும் போது ஈழத்துப் பெண்கள் உலகளாவிய ரீதியில் சரித்திரம் படைத்த பெண்ணினம் என்று கூறக்கூடியளவிற்கு அவர்களுடைய முன்னேற்றப் பாதைகள் பல வழிகளிலும் தொடர்ந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

சர்வதேச ரீதியில் பெண்கள் தொடர்பான உரிமைகள் ஒரு பொதுவான அமைப்புக்களின் வேண்டுதலாக பெண் அமைப்புக்களால் கோரப்பட்டு விடுதலை பெற்று நிற்கும் அதே வேளை, ஈழத்துப் பெண்களின் விடுதலையானது தனியான ஒரு இனம் என்ற அடிப்படையில் பெண்கள் சமூகத்தில் ஒரு தலை நிமிர்வுடன் வாழவும், வரலாறு படைக்கவும் ஈழத்துப் போரின் மூலம் பெண் விடுதலை முழுமையான இடத்தைப் பிடித்துள்ளது என்றால் அது மிகையாகாது.



இவ்வாறு ஈழத்தில் ஆரம்ப காலகட்டங்களில் பெண்கள் தமது வீட்டுப் படலையைக்கூடத் தாண்டப் பயந்து நிற்பார்கள். ஆனால் இன்று தமிழர் தாயகத்தின் எல்லையை வரைவதற்காக ஏ.கே47 துப்பாக்கி கொண்டு போர்க்களம் சென்று உயரிய சாதனைகளைப் படைக்கத் துணிந்து விட்ட வீரப் பெண்களாக மாறிவிட்டனர். அவர்களின் மாற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது இவ் ஈழப்போராட்டமேயாகும்.

தமிழீழப் போரை ஆரம்ப காலத்தில் ஆண் போராளிகளே முன் நடத்திச் சென்றார்கள். காலப் போக்கில் பல இயக்கங்கள் பெண் போராளிகளை தமது போராட்டத்துக்காக, உடனடியாக உள்வாங்கிக் கொண்டாலும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் புலிகள் அமைப்பில் பெண்கள் சில வருடங்களின் பின்னரே இணைக்கப்பட்டார்கள்.

இதன் மூலம் பெண்களை அடக்கவும், அழிக்கவும் நினைத்த சிறிலங்காப் படையிலுள்ள காமுகர் கூட்டமும் பெண் புலிப் படையைக் கண்டு அஞ்சி ஓடக்கூடியளவுக்குப் பெண்கள் ஆயுதமேந்திப் போரிடத் தொடங்கினார்கள்.

இவ்வாறு ஈழத்துப் போரியல் வரலாற்றில் தமிழீழத் தேசியத் தலைவரின் பணிப்பின் பேரில் அமைந்த போராட்டத்தில் இணைந்து கொள்ளும் முன்னரும் பெண்கள் விடுதலைப் போராட்டத்திற்குப் பல வழிகளிலும் ஒத்தாசைகளையும், உதவிகளையும் புரிந்து வந்துள்ளார்கள். அதனடிப்படையில் ஆரம்ப காலத்தில் விடுதலைப் புலிப் போராளிகளுக்கு உணவு கொடுப்பது முதல் அவர்கள் போர் செய்வதற்கான மருந்துப் பொருட்கள் நிறைந்த ஆயுதங்களையும் சேகரித்துக் கொடுத்தல் போன்ற உதவிகளை நல்கி தமிழீழ விடுதலைக்காகத் தங்களை அர்ப்பணித்து சாதனை படைத்தார்கள்.

ஆரம்ப காலத்தில் போராட்ட வரலற்றில் இணைந்து கொண்ட பெண்கள் தமது இனத்தின் விடுதலைக்காக மாத்திரம் போராட வேண்டும். தம் இனமும் முழுமையான சுதந்திரத்துடனும், தலை நிமிர்வுடனும் வாழ வேண்டும் என்ற வேட்கையுடனே தமிழீழ விடுதலைக்கான போராட்டத்தில் இணைந்து கொண்டார்கள்.

இவ்வாறு போரியல் மூலம் தம்மை இணைத்துக் கொண்ட பெண் போராளிகள் பெண்களின் எதிர் கால இலக்கு பற்றியும், அவ்வாறு அந்த எதிர்கால இலக்கை அவர்கள் எவ்வாறு அடைய வேண்டும் என்ற முழு விளக்கத்தையும் தமிழீழத் தேசியத் தலைவரின் வழிகாட்டல் மூலம் உணர்ந்து, அதனை எதிர் கொள்ளத் துணிந்தார்கள் எனின் அது மிகையாகாது.

இவ்வாறு போராட்ட காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் வெறும் போராளிகளாக மட்டுமே இருக்கவில்லை. ஆற்றல் மிக்கவர்களாகவும், செயல் திறன் மிக்கவர்களாகவும் இருந்து பல போராட்ட களங்களில் சிறப்பாகத் தமது திறமைகளை வெளிக்காட்டக் கூடிய வல்லமை மிக்கவர்களாக இருந்து வந்துள்ளனர்.

இவ்வாறு விடுதலைப் போரியல் வரலாற்றில் பெண் போராளிகள் உத்தியோக பூர்வமாகத் தமது ஆயுதப் பயிற்சியை 85ம் ஆண்டு காலப் பகுதியிலேயே இந்தியாவில் வைத்து ஆரம்பித்து போராட்டத்தில் களம் புகுந்து சாதனை படைக்கும் வீரப் பெண்களாக பயிற்சி பெற்றார்கள். ஆரம்ப காலத்தில் மிகக் குறைந்தளவிலான பெண் போராளிகளைக் கொண்டியங்கிய மகளிர் அணியானது இன்று பல்லாயிரக் கணக்கான போராளிகளைக் கொண்டுள்ளது என்பது யாவரும் அறிந்த விடயம்.

இவ்வாறு போராட்ட காலத்தில் பெண் போராளிகள் ஆரம்ப காலங்களில் உளவியல் ரீதியான தாக்கங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவான நிலையிலும்கூட பெண் போராளிகள் அத்தடைகளை உடைத்தெறிந்து களங்களில் புகுந்து புதுத் தெம்புடன் எதிரி தமக்கு இளைத்த கொடுமைகளை நினைத்து ஆவேசத்துடன் போராடி வரலாறு படைத்த நிகழ்வுகளுக்கும் எமது தமிழீழப் போராட்ட வரலாற்றில் உண்டு.

இவ்வாறு பூப் போன்ற மனத்தினையும், மென்மையான குணாதிசயங்களையும் கொண்ட ஈழத்துத் தமிழ்ப் பெண்கள் தம் இனிய உயிர்களை அழித்ததுடன் நில்லாது. அதன் மூலம் எதிரியின் பலத்தையும் சிதைவடையச் செய்துள்ளார்கள்.

இவ்வாறே சமூகத்தில் உள்ள ஏனைய பெண்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது எமது தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் மாறுபட்டவர்களாகத் திகழக் காணலாம். இவர்கள் தமது சுதந்திரங்களையும், சுயநலன்களையும் கருத்தில் கொள்ளாது தேச விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்கள். போராளிகள் என்றால் அவர்களுக்கும் வேறு ஆசைகள் எதுவும் இல்லையா? ஆனால் தமது தேசத்தின் விடுதலைக்காக ஆசைகளைத் துறந்து புரட்சிப் பெண்ணாகவும், தன்மானப் பெண்ணாகவும் நிற்பவர்கள் இந்தத் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள்.

இவ்வாறு பல புதிய பரிமாணங்களைப் பெற்று விளங்கும் பெண் போராளிகள் போரியல் ரீதியாக மட்டுமல்லாது, அறிவியல் ரீதியாகவும் பாரிய வளர்ச்சியைப் பெற்றுள்ளார்கள். ஒட்டு மொத்தமாகக் கூறப்போனால் தமிழீழப் பெண்கள் தமது உரிமையைப் பெற பெண் போராளிகளாக தமிழீழப் போராட்டத்தில் சுமார் 20 வருடத்திற்கு முன்னரே புறப்பட்டு விட்டார்கள் என்றே கூறத் தோன்றுகின்றது. இதனை அண்மையில் கடந்த 18ம் திகதி கொண்டாடப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பில் மகளிர் படைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்ட 20 வருட பூர்த்தி நிகழ்வை முன்னிட்டு உணர முடிகின்றது.

எனவே தமிழீழப் பெண் சமூகமே! எதனையும் பெண்களான எம்மால் சாதிக்க முடியும் என்ற கருத்தை நிலை நாட்டிய தமிழீழ மகளிர் அமைப்பு மேலும் வளர்ச்சியடையவும், நமது பங்களிப்புக்களையும் நல்குவோமாக.

**கே.நவநீதா**
**முனைக்காடு**

## முகம் சிவப்பாகமாற மூலிகைப் பொடி

பெண்கள் தமது முகத்தின் அழகினைப் பேணுவதற்கு கண்டகண்ட அழகு சாதனப் பொருட்களையெல்லாம் கடைகளில் கூடுதலான பணத்தினையும் செலவு செய்து. பாவனைப் படுத்தினாலும். சில வேளைகளில் அது அவர்களுக்குத் தீங்கையே விளைவிக்கின்றது. சகோதரிகளே நாம் நமது இயற்கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு நமது அழகினை மேம்படுத்தலாம். அவ்வாறு நீங்கள் முக அழகினையும். சிவப்பு நிறத்தினையும் பெற்றுக் கொள்ளுவதற்கு கீழ்வரும் மூலிகைப் பொடியை தயார் செய்து பாவனைப் படுத்திப் பாருங்கள். சிவப்பழகிகளாகத் திகழலாம் மூலிகைப்பொடி தயாரிக்கும் முறையாவது.

| | |
|---|---|
| பச்சைப்பயறு | :- 250 கிராம் |
| கடலைப்பருப்பு | :- 250 கிராம் |
| கஸ்தூரி மஞ்சள் | :- 100 கிராம் |
| பூலாங்கிழங்கு | :- 250 கிராம் |
| ஆவாரம பூ அல்லது ரோஜாஇதழ் | :- 250 கிராம் |

ஆகியவற்றை வாங்கி ஆவாரம் பூ அல்லது ரோஜாஇதழை சுத்தம் செய்து காயவைத்து மற்றப் பொருட்களோடு சீகைக்காய் அரைப்பது போல் அரைத்து ஒரு போத்தலில் போட்டு தினசரி நான்கு வேளைகளிலும் முகத்தில் தேய்த்து உடனே கழுவி விடலாம். இவ்வாறு செய்வதனால் பெண்கள் எளிய முறையிலான சிவப்பழகிகளாகத் திகழலாம்.

எஸ்.யசோதா




## இழந்த சிவப்பு நிறத்தை திருப்பிப் பெற முயலுங்கள்

நமது பெண்களில் சிலர் இளவயதுப் பருவத்தில் (குழந்தைப் பருவம்) நல்ல சிவப்பு நிறமாக இருப்பார்கள். நாளாக நாளாக நிறம் மங்கி கறுப்பாகி விடுவதுமுண்டு. அப்படிப்பட்டவர்கள் மீண்டும் சிவப்பாக மாறவேண்டுமாயின், சிறு வயதில் நல்ல நிறம் உள்ளவர்கள் போகப்போகக் கறுப்பாக மாறக் காரணம் வெயில். வெயிலில் போகாது காரில் போகின்றவர் கூட காரின் மேல் பாகம் சூடாவதால் அந்த வெப்பத்தால் பாதிக்கப்படும் நிற மாற்றமடைய வாய்ப்பேற்படுகின்றது.

அவ்வாறான பெண்கள் தினசரி எலுமிச்சம்பழச் சாறு, வெள்ளரிக் காய்ச் சாறு ஆகியவற்றைக் கலந்து முகத்தில் தேய்த்து 20 நிமிடம் ஊற வைத்து முகம் கழுவ வேண்டும். மாதம் ஒரு முறை அழகு நிலையங்களுக்குச் சென்று முகத்தை அழகு செய்து கொள்வதன் மூலமும் இளந்த நிறத்தைப் பெறலாம். (இது வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே பொருந்தும்)

25 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருந்தால் முட்டையின் மஞ்சள் கருவில் சற்றுத் தேன் கலந்து முகத்தில் தடவி 20 நிமிட நேரம் ஊறவைத்து முகத்தைக் கழுவ வேண்டும்.

பெண்கள் காலையில் சிறிது பாலோடு, கடலை மாவு, சிறிது கஸ்தூரி மஞ்சள் ஆகியவற்றைக் கலந்து முகத்தில் தடவி 20 நிமிட நேரம் ஊற வைத்த பின் தேய்த்துக் கழுவ வேண்டும்.

பெண்கள் இப்படி தினமும் செய்தால் சிறிது, சிறிதாக இழந்த சிவப்பு நிறத்தை மீண்டும் பெறலாம். கூடியவரை வெயிலில் போகக்கூடாது. போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட் டால் குடையை எடுத்துக் கொண்டு போக வேண்டும். கண்களுக்கு வெயிலுக்கு அ ணியும் கண்ணாடிகளை அணிந்து கொண்டு போகலாம் மூலம் சகோதரிகளே இழந்த நிறத்தை மீளவும் திரும்பிப் பெறலாம்.

## நீல நிறப் பழங்களுக்கு தனி மகத்துவம்

நீலம் கருஞ்சிவப்பு, ஊதா ஆகிய நிறங்களில உள்ள பழங்கள் காய்கறிகளில் உள்ள பைட்டோ என்ற தாவர இரசாயனக் கூறு உணர்ச்சிகளை மெல்ல மெல்ல அமைதிப்படுத்தி இரவில் தூங்க வைக்கும் தன்மை கொண்டது.

இதனால்தான் மழை மற்றும் குளிர்காலங்களில் கவலைகள் மனதை அலைக்கழிக்காமல் இரவில் நிம்மதியாக தூங்க நீலநிற கத்தரிக்காய் குழம்புடன் நமது பெண்கள் சிலர் உண்பதைக் காணலாம். கறுப்புத் திராட்சைப் பழம் உண்மையிலே நீலநிறம்தான். இது புற்றுநோயைக் குணமாக்குகிறது. மூளையின் கலங்கள் சுறுசுறுப்பாகவும் அதே நேரத்தில் பழுதடைந்தால் கலங்களைப் புதுப்பித்து விடும் தன்மை கொண்டது.

உடல் எடையைக் குறைக்க விரும்பும் பெண்கள் காலையில் 200 மில்லி திராட்சைப்பழத்தை சாப்பிட்டாலும் உடல் எடை குறைவதுடன், சுறுசுறுப்பும் எளிதில் அதிகரிக்கும். அத்தோடு நெஞ்சுவலி முழுமையாகக் குணமாகும்.

பெண்கள் இரவு உணவுகளில் நீலநிறம், ஊதா, தங்கநிறம், வெள்ளை ஆகிய நிறங்களிலுள்ள பழங்கள், காய்கறிகளைச் சேர்த்து வந்தால் இளமையும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

நீரிழிவு நோயை எளிதில் நாவற் பழம் குணப்படுத்தும். அத்தோடு தோல் நோய்களைக் குணப்படுத்தும், கத்தரிக்காய்களில் பி விற்றமின்கள் உள்ளதால் மூளை நலமும் கத்தரிக்காயினால் பெருகும். நாவற் பழத்தினை அதன் காலங்களில் அளவுடன் சாப்பிட்டு வந்தால் இரத்தம் சுத்தமாகி, மண்ணீரல் நோய்களும் குணமாகும்.

பெண்களே உங்களுக்குக் கோபமும், ஏமாற்றமும் ஏற்படும் போது மனதில் நீலநிற வானத்தைக் கற்பனையில் ஐந்து நிமிடம் நினைத்துப் பாருங்கள். உடனே மன அமைதி கிடைக்கும். எனவே சகோதரிகளே. தினமும் ஒரு வேளை திராட்சையும், வாரத்தில் மூன் று நாள் கத்தரிக்காயையும், மீதி நாட்களில் பீட்ரூட்டையும் உணவில் சேர்த்துக் கொண்டால் நம் உணர்வுகள் அன்பும், அமைதியும் நிறைந்த உணர்வுகளாக மாறும் என்பது உறுதி.

**ஆர்.சுபாங்கி, செட்டிபாளையம்**

## தயிர் சாப்பிட மறவாதீர்கள்

மிகப் பழைய காலத்திலிருந்தே தயிர் மனிதனின் முக்கிய உணவாக இருந்து வருகின்றது. நாவிற்குச் சுவையான, மென்மையான உணவு தயிர். இதனால் தினமும் 2கப் தயிர் சாப்பிடுவதால் வாழ்நாள் நீடிக்கின்றது.

இந்த நிலையில் தயிராக மாற்றப்பட்ட பாலோ, எளிதில் ஜீரணமாகி விடும் தன்மை கொண்டது. இதனால் உடலும், மனமும் குளிச்சியடைகின்றது. தயிர் நரம்புகளின் சக்தியைப் பாதுகாத்து உடல் எப்போதும் இளமைத் தோற்றத்துடன் இருக்குமாறு பார்த்துக் கொள்கின்றது. பெண்களுக்கு இதனால் அழகும் கூடுகின்றது. கண்களின் பார்வைத் திறனையும் அழகையும் பாதுகாக்கும் தன்மை இத் தயிருக்குண்டு.

பெண்களுக்கும், ஆண்களுக்கும் எலும்பு மெலிவு நோய் வராமல் தடுக்க தயிரிலுள்ள கல்சியம் உதவுகின்றது. இதனால் மாரடைப்பு மரணங்கள் தடுக்கப்படுகின்றது. அழகையும், ஒல்லியான தோற்றத்தையும் பெற விரும்பும் பெண்களுக்கு, உயிர்த்துடிப்புடன், செயலாற்றுதலுடன் வாழ விரும்பும் ஆண்களும் தினமும் இரண்டு கப் தயிர், 2கப் மோரும் சாப்பிட்டு வருவது மிகவும் நல்லது.

குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் பாலை விட தயிரே எளிதில் ஜீரணமாகும். இதனால் குடல் கோளாறு, மலச்சிக்கல், பேதி, வயிற்றுக் கோளாறு முதலியவற்றைத் தவிர்த்தும், குணப்படுத்தியும் வாழலாம்.

எனவே மிகமிக முக்கியமான உணவு தயிர். இதன் அருமையை உணர்ந்து தினமும் எல்லா வயதினருக்கும் தயிரை உணவில் சேர்த்துக் கொள்வதனால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரித்து வாழ்நாள் நீடிக்கப்பதுடன், மனத்திற்கு உற்சாகத்தையும் தந்துவிடுவதனால் ஆரோக்கியத்துடனும், இளமையுடனும் நீண்ட நாள் வாழலாம்.

**எம்.ஜனனி, கல்லடி, உப்போடை**

இவ்வாரச் சிறுகதைகள்

# காதல் பரிசு



இன்று காலை பாடசாலை ஏ.எல் வகுப்பு மாணவர்கள் ஏதோ துள்ளிக் குதித்து கும்மாளம் அடித்துத் திரிந்தனர். அவர்கள் கும்மாளத்துக்கு ஏதோ ஒரு காரணம் இருக்கத் தானே வேண்டும். அவர்களின் சந்தோச ஆரவாரத்தில் ஒரே ஒரு மாணவி மட்டும் கலந்து கொள்ளவில்லை. அவள் தன் இருப்பிடத்தில் இருந்து கொண்டு முகத்தை மேசையில் புதைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுது கொண்டு இருந்தாள். அவள் தான் சுமதி அவள் ஏன் இருக்கிறாள். மற்ற மாணவர்கள் ஏன் துள்ளிக் குதிக்கின்றனர்........?

ஆம், சுமதி க.பொ.த உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறாள்.

ஏறக்குறைய பதினெட்டு வயது நிரம்பிய கட்டழகு மங்கை. முல்லைக் கொடியிடையும், கயல்விழிகளின் மருண்ட பார்வையும், கொவ்வை செவ்விதழ்களின் மோகனப் புன்னகையும் எவர் மனதையும் கவரத்தான் செய்யும்.

சுமதி தினமும் பாடசாலைக்கு பஸ்சில் தான் சென்று வருவாள். அவள் பஸ்சில் செல்லும் போது பஸ்சில் உள்ள இளைஞர்கள் மட்டுமல்ல வயதானவர்களும் வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருப்பார்கள். பஸ்சில் இடம் இல்லா விட்டாலும் அவளைக் கண்டவுடன் சீற்றில் இருப்பவர்கள் போட்டி போட்டுக் கொண்டு எழுந்து இடம் கொடுப்பார்கள். அதற்குக் காரணம் அந்தக் கொள்ளை அழகியை நிற்க வைத்து அவள் அழகை ரசிப்பது அவ்வளவு நல்லதல்ல என்ற பெரும் நோக்கம் தான்.

டிக்கட் கொடுக்கும் கண்டக்ரர் கூட அவள் அருகில்போய் நின்றால் அப்பால் செல்ல மனம் வராது. அவ்விடயத்திலேயே நின்று டிக்கட்டுக்களை கொடுப்பான். அவள் கையால் காசை வாங்கும் அந்த கண்டக்ரர் எவ்வளவோ புண்ணியம் செய்தவன் என்று வயிற்றெரிச்சல் பட்டுக் கொள்வார்கள். சிலர் பஸ்சில் பிரயாணம் செய்யும் வாலிபர்கள் இப்படியாக சென்று கொண்டிருந்தது நாடகர்.

அன்று ஒரு திங்கட்கிழமை, வழக்கம் போல் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தாள் சுமதி. பஸ்சில் ஏகப்பட்ட ச னக்கூட்டம். சிறிது தூரம் சென்றதும், யாரோ ஒரு வாட்ட சாட்டமான வாலிபன் ஏறினான். அவனும் சுமதி இருக்கும் சீற்றின் பக்கத்தில் தான் கம்பியில் பிடித்துக்கொண்டு ஆடி அசைந்து கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் அவனின் சப்பாத்துக் கால், அவளின் காலை மிதித்துவிட்டது. ஆய்- என்றபடி காலை இழுத்துக் கொண்டாள் சுமதி. மறுகணம் ''ஐயம் சோறி'' என்ற வார்த்தைகள் அவன் வாயில் இருந்து வந்தன. அப்பொழுது சுமதியின் கண்கள் அவன் கண்களுடன் உறவாடின. அவனின் மதிப்பை அக்கண்கள் ஏற்றுக் கொண்டன. பின் ''யூகேன் ரேக்பிளேஸ் கியர்'' என்று ஆங்கிலத்தில் கூறிக்கொண்டு சிறிது தள்ளி இருந்தாள். அவனுக்கு இதுதான் சந்தர்ப்பம் படக்கென்று இருந்து கொண்டான், அடிக்கடி இருவரின் கண்கள் மட்டுமே பேசின.

பாடசாலை வந்தது சுமதி இறங்கிக் கொண்டாள். அன்று சுமதி பாடசாலை சென்றதும் அந்த பஸ்சில் கண்ட வாலிபனின் முகம் அவள் கண்ணில் தோன்றிக் கொண்டிருந்தான். அன்று அவளுக்கு படிப்பில் நாட்டம் செல்லவில்லை. அவனைப்பற்றிய எண்ணமே அவளை வட்டமிட்டன. பாடசாலை விட்டதும் வீடு செல்ல பஸ்நிலையத்தை அடைந்தாள். சிறிது நேரத்தில் பஸ் வந்தது. பஸ்சில் ஏறிக் கொண்டாள். மின்சாரத்தால் தாக்குண்டவள் போல் சிறிது நேரம் சிலையாக நின்றாள். ஏன் தெரியுமா காலையில் பாடசாலை செல்லும் போது அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அதே வாலிபன் பஸ்சில் இருந்தான். சுமதியைக் கண்டதும் அவ்வாலிபன் புன்முறுவலுடன் தன் பக்கத்தில் இருக்கும் படி சைகை காட்டினான். என்றாலும் அவள் சிறிது வெக்கப்பட்டுக் கொண்டு எதிரில் இருந்த சீற்றில் இருந்து கொண்டாள்.

இப்படியாக இவர்கள் சந்திப்பு பஸ்சில் நடைபெற்றுக்கொண்டே வந்தது. இந்தச் சந்திப்பின் பயனாகச் சுமதி அவ்வாலிபனிடமிருந்து சில விபரங்களை அறிந்து கொண்டாள். அவனின் பெயர் கணேஷன். பிரதேச செயலகமொன்றில் பிரதம குமாஸ்தாவாக கடமையாற்றுகின்றான். பஸ்சில் பிரயாணம் இப்படியான நாளாந்த சந்திப்பு காதல் உறவாகி விட்டது. இந்த காதல் உறவு சுவை முதலில் கடிதத்தில் தான் வெளிப்படும். இருவரும் கடிதங்களை பஸ்சில் பரிமாறிக் கொண்டனர்.

இப்படியாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தான் அன்று அவன் கணேஷன் கொடுத்த காதல் கடிதத்தை சுமதி இலக்கியப் புத்தகத்துக்குள் வைத்து விட்டாள்.

அன்று காலையில் இலக்கியப் பாடத்துக்கு வந்த ஆசிரியர் சுமதியின் இலக்கியப் புத்தகத்தைத்தான் படிப்பிப்பதற்காக எடுத்தார். புத்தகத்தைப் புரட்டினார். புத்தகத்துக்குள் இருந்த காதல் கடிதம் ஆசிரியரின் கையில் அகப்பட்டுக் கொண்டது. பின் அக் கடிதம் அதிபரின் அறைக்குள் சென்றது.

இதை அறிந்து கொண்ட வகுப்பு மாணவர்களைக் கேட் கவா வேண்டும். இதுதான் அவர் களது குதூகலத்துக்குக் கார ணம். அதிபரின் அறையில் இருந்து வரும் சுமதியின் உள்ளம் படக் படக்கென்று அடித்துக் கொண்டிருந்தது. அதிபரின் முடிவு எதுவோ அது சுமதியின் காதலுக்குப் பரிசாக இருக்கும்.?

கே. எம்.வாசகர்
கன்னன்ங்குடா.

# தங்கைக்காக.....



சாந்தி உள்ளே ஏதோ எழுதிக்கொண்டிருந்தாள். அவள் நிறுவனமொன்றில் பொறுப்பு வாய்ந்த அதிகாரி; நான்கு இலக்க சம்பளத்திற்குச் சொந்தக்காரி.

வெளியிலிருந்து தாய் மரகதம் அழைத்தாள் ''பிள்ள சாந்தி வெளியே வா. உன்னைத் தேடி யார் வந்திருக்கா என்று பார்'' சாந்தி அவசரமாக வெளியே வந்த போது தனது ஊரின் பக்கத்து ஊர் உஷா முற்றத்தில் நின்றிருந்தாள். தலைநிறைய பூவும், வாய்நிறையச் சிரிப்புமாக......

தனக்குத் தெரிய சின்னப்பிள்ளையாக இருந்தாள். இன்று எவ்வளவு பெரிய பெண்ணாக வளர்ந்து விட்டாள். "உட்கார் உஷா....." எனக் கூறிய சாந்தியிடம் "இல்ல அன்ரி நான் அவசரமாகப் போகவேணும்" என்று நாணம் கலந்த புன்னகையுடன் கூறி கல்யாணப் பத்திரிகையை சாந்தியின் கையில் கொடுத்து விட்டு போய் விட்டாள்.

இவளுக்கா கலியாணம். இன்னும் 18 வயது கூட இருக்காது. இப்பவே கலியாணமா, என்று தாய் அதிசயத்துடன் கேட்க..... பின்ன என்னப் போல இருக்கவா சொல்றீங்க..... நாற்பது வயதாகிய நான் ஒரு "வரன்" எடுப்பதற்கு கஷ்ரப்படுவது போல அவர்களும் செய்வார்களா?

சாந்தியின் மனதில் அடக்கி வைக்கப்பட்ட வார்த்தைகள் தன்னை அறியாமலே உணர்ச்சி அலைகளாய் வெளிவந்தன. தாய் எதுவும் கூறாமலே குற்ற உணர்வுடன் உள்ளே சென்றாள். தன்னையும் மீறிவந்தவார்த்தைகள் தன் தாயின் மனதைக் காயப்படுத்தி விட்டதோ என சாந்தி கவலையடைந்தாள்..... ஆனாலும் தனது எண்ணங்களைத் தைரியமாகக் கூறியதற்காக நின்மதியாய் இருந்தது. அவளுக்கு இதுவரை கிடைக்காத சந்தர்ப்பம். இப்போது கிடைத்தது என்ற சிந்தனையில் நித்திரையும் செய்தாள். இரவுப் பொழுது கடந்தது.

"அக்கா விடிஞ்சித்து....." தங்கையின் குரல் அவளைத் தட்டி எழுப்பியது. தினமும் வேதனை தரவா பொழுது விடிகின்றது. அவளுடைய நிழலுலகத்திலே கவலை முகில்கள் மூடி மறைத்து எதிர்காலத்தையே இருளாக்கியது. தன்னுடன் படித்த, பழகிய பெண்பிள்ளைகளும் ஏன் ஆண்களும் இன்று திருமணம் செய்து கொண்டு தன் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்க..... நான் எனது கசப்பான உணர்வுகளை மறந்து விட்டு அலுவலகம் செல்லத் தயாரானேன்.

நாட்கள் சென்று கொண்டிருந்தன. ஒருநாள் அவள் வேலைக்குச் செல்லத் தயாரான போது தாய் மெதுவாகப் பேச்சை எடுத்தாள். சாந்தி இன்றைக்கு உன்னைப் பெண்பார்க்க வாறாங்க. மாப்பிள்ளைக்கு சற்று வயதாம். நீ இன்றைக்கு வேலைக்குப் போக வேண்டாம் பிள்ள. என்ற தாய்க்கு, எதிராக சாந்தி மீண்டும் வெடித்தாள்......

"ஏனம்மா ஒரு இளம் பெடியன் அவ்வளவிற்குக் கிடைக்கவில்லையா?..... போயும் போயும்....."

தாயும் விடவில்லை. "ஏனடி நானும் உன்னப்பார்த்துக் கிட்டேதான் வாரன். குற்றத்தை எல்லாம் என்மேலே போட்டுகிட்டேதான் வாராய்?.... நான் என்ன உன்ன கலியாணம் செய்ய வேணாம் என்றா தடுத்தன். உன் வயசுக்கு வயதுபோனவன் இல்லாம குமரனா வருவான்?"

தாயின் குரலில் காணப்பட்ட கேலி, சாந்தியை மேலும் உசுப்பி விட்டது. அதிர்ச்சியோடு ஆத்திரமும் பொங்க "ஏன் நானா எனக்குக் கல்யாணம் வேண்டாம் என்று சொன்னேன். உங்களுக்காகவே உழைச்சி, உழைச்சி ஏன்ர ஆசைகளும் மரித்துப் போய்விட்டது. இதற்குக் காரணமே நீங்கதான். என்று பேசி தன் தாயை முறைத்துப் பார்த்து விட்டுக் கட்டிலில் போய் விழுந்தாள்.

இரண்டு நாட்கள் உணவின்றி, ஒழுங்கான உறக்கமின்றி வாடிய சாந்தி பின்பு சரியான முடிவிற்கு வந்தாள். இப்படியே தொடர்ந்தால் அடுத்த 'இடி' தனது தங்கை மேல்தான் விழுமென்று உணர்ந்தாள்.

தானே முன்னின்று தனது தங்கைக்கு ஏற்ற படித்த பொறுப்புள்ள ஒரு வரனைத் தேடி காலப்போக்கிலே கட்டி வைத்தாள்.

வருடங்கள் உருண்டோடின. வழக்கம் போல தாய் பழைய பல்லவி பாட....... "எனக்குக் கல்யாணமே வேண்டாம்....... நான் வயது போனவள் எனது தங்கைக்காகவே உயிர் வாழ்கின்றேன்" என கண்ணீருடன் தன் ஆசைகளை இருளவிட்ட சாந்தி மெழுகு வர்த்தியாய் அந்தக் குடும்பத்திற்கே ஒளியேற்றலானாள்.

தி.குமுதினி
கொக்கட்டிச்சோலை

# இயல்பை பாதிக்கும் படைகளின் ஓயாத நகர்வுகள்

சிறிலங்காவின் அரச படைகள் தமிழ் மக்கள் மீது தொடர்ந்து பிரயோகித்து வரும் அழுத்தங்கள், பயமுறுத்தல்கள் என்பவற்றுக்குக் கடந்த முப்பது வருடங்களாகக் குறைவிருக்கவில்லை. படையினரின் பிரசன்னம் உள்ள வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தினமும் இடையறாது இதற்கு முகங்கொடுத்தே வருகின்றனர். கடும் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலமாயினும் சரி, போர் நிறுத்தம் அமுலில் உள்ள நாள்களாயினும் சரி அதற்கு ஓய்விருக்கவில்லை. அழுத்தம், அச்சுறுத்தல் என்பவற்றின் உத்திகளில் தாக்கத்தில் சில வேறுபாடுகள் மட்டுமே இருந்து வருகின்றன.

அதற்குப் போர்க்காலத்தில் படையினருக்கு எதிராக இடம்பெற்று வந்த தாக்குதல்களும் அமைதிக்காலத்தில் புரிந்துணர்வு உடன்பாட்டில் அவர்கள் செய்துகொள்ளும் புதிய பொருள் கோடல்களும் அவர்களுக்குத் துணை புரிந்து வந்திருக்கின்றன.

இப்போது அவசர காலச்சட்டம் துணையாகக் கிடைத்திருக்கின்றது. அவசர காலச்சட்டம் அமுல்படுத்தப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா படையினர் நடந்து கொள்ளும் முறைமை, அதற்கு சில வாரங்கள் முன்னதாக நடந்து கொண்டதில் இருந்து எந்த விதத்திலும் வேறுபட்டதல்ல.



மூன்று வாரங்களுக்கு முன்னதாக இணுவிலில் சிறிலங்கா படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுக்கு அப்பாவி தமிழ் இளைஞன் ஒருவன் பலியானமைக்கு எந்தச் சட்டங்களும் நடைமுறைகளும் இடமளித்திருக்கவில்லை. அடிப்படையில் சிறிலங்கா இராணுவத்திற்கு இருக்கக் கூடிய கட்டுப்பாட்டு ஒழுங்குகளுக்கே முரணானதாகத்தான் அச்சம்பவம் அமைந்தது. ஆயினும், அது பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் மக்களின் சீற்றத்துக்கு இரையான பின்னரும் நியாயப்படுத்தப்பட்டுள்ளது.

அதிலிருந்து காரணமின்றி படையினராலும் பொலிசாராலும் யாழ். குடா நாட்டு மக்கள் தீவிரமாகத் தண்டிக்கப்பட்டு வருகின்றார்கள். தவறுகள் குற்றங்கள் யாருடையவையாக இருந்தாலும் தமிழ் மக்கள் தண்டிக்கப்பட்டால் தீர்வாகிவிடும் என்ற அடிப்படை மனோபாவம் படையினருக்கும் அரச இயந்திரத்துக்கும் மாறவில்லை.


கதிர்காமர் கொல்லப்பட்டதும் பிரகடனம் செய்யப்பட்ட அவசரகால நிலையால் தான் தமிழ் மக்கள் இராணுவ நெருக்குவாரங்களைச் சந்திக்கின்றார்கள் என்ற வாதம் உண்மையில் இதில் அடிபட்டுப் போகின்றது. மட்டக்களப்பிலும் அம்பாறையிலும் திருகோணமலையிலும் இடம்பெறுகின்ற கெடுபிடிகள் யாவையும் ஓராண்டுக்கு மேற்பட்டவை.

புரிந்துணர்வு உடன்பாடு அமுலில் இருக்கின்ற தருணத்தில் மேற்கொள்ளப்படுபவை. அவை அவசரகாலச் சட்டம் அமுல்செய்யப்பட்டதைத் தொடர்ந்து மேலும் தீவிரம் பெற்றிருக்கின்றன. சிறிலங்கா அரசும் இனிவரப்போகின்ற தேர்தல் வேட்பாளர்களும் இப்போதுள்ள அவசரகால நிலையை விற்பனைப் பொருளாக்கத் தலைப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களின் சமகால நெருக்கடிக்கு அவசரகாலத்தைக் காரணமாக கூறி அதனை நீக்குவதன் மூலமாக விமோசனத்தைத் தந்துவிடப்போவதாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் அவசரகாலச் சட்டமே இல்லாமல் பேணப்பட்டது என்றும் கூறப்படும் கூற்றுக்கள், எதுவும் தெரியாத மக்களை ஏமாற்றலாம் என்று கருதுபவர்களுடைதே.

இப்போது யாழ்ப்பாணத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் படையினரதும் பொலிசாரினதும் கெடுபிடிகள் அவசரகாலச் சட்டத்துக்குத் தொடர்பற்றவை. உண்மையில் கதிர்காமரைக் கொலை செய்தவர்களை பிடிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் ஏன் முற்றுகையிட வேண்டும். கொழும்பில் தாக்குதலை நடத்தியவர்கள் பிரதானமான இரண்டு சிறிலங்கா இராணுவச் சோதனைச் சாவடிகளைக் கடந்து யாழ்ப்பாணத்துக்குள் - பொறிக்குள் வந்து பதுங்கியிருப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றார்களா?

முகமாலைச் சோதனைச்சாவடியை கதிர்காமர் கொல்லப்பட்ட. பின்னர் மூடியமையும் தொடர்ந்து யாழ். நகரில் கேந்திர முக்கியம் வாய்ந்த பகுதிகளில் தேடுதல் தோரணையிலான நடவடிக்கையினை மேற்கொண்டதும் அடங்கிக் கிடந்த அவர்களின் மேலாதிக்க உணர்வின் வெளிப்பாடுகளே.



இப்போது யாழ்ப்பாணத்தின் சிவில் நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லையென்ற முடிவை சிறிலங்கா பொலிசார் அமுல்படுத்துகின்றனர்.

**ஞாபகன்**

ஒரு பொலிஸ் அத்தியட்சகரின் மரணத்துக்கு இப்போதும் யாழ். குடாநாட்டு மக்களைப் பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டு சிறிலங்கா பொலிஸ் மற்றும் நீதி நிர்வாகக் கட்டமைப்புக்கள் மீது இருக்கக் கூடிய நம்பிக்கையீனத்தை வலுப்படுத்தும் கைங்கரியத்தைச் செய்கின்றனர். இது இன்னும் ஈழ விடுதலையை நோக்கி மக்களை ஈர்க்கும் என்பதில் தமிழ் மக்கள் திருப்தி கொள்ளலாம்.

யாழ். குடா நாட்டில் குற்றச்செயல்களை ஊக்குவிக்கும் ஒரு களமாக சிறிலங்காவின் சிவில் நிர்வாக அமைப்புக்கள் செயற்பட்டு வந்துள்ளன என்பதும் முக்கியமானது. விடுதலைப் புலிகளின் யாழ். குடாநாட்டுக்கான பிரசன்னம் மீள நிகழும் வரை சிறிலங்காப் பொலிசார் அதனை எவ்வாறு கையாண்டிருந்தனர் என்பது உலகமறிந்தது?

இப்போது அதற்கான கடமைகளைப் புறக்கணித்துவிட்டு தமிழ் மக்களை அச்சுறுத்தும் விசேட பொலிஸ் அணி நகரில் களமிறக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு தொகுதியினரை இந்த வாரத்துக்குள் குடாநாட்டுக்குள் குவிக்கப் போவதகவும் அறிவித்துள்ளது.

அவசர கால நிலை பிரகடனம் செய்யப்பட்ட பின்னர் குடா நாட்டில் பலப்படுத்தப்பட்ட காவலரண்கள் உண்டென்ற போதும் அதிகமானவை ஏற்கனவே மீளமைக்கப்பட்டு விட்டன. மக்களின் பல்வேறு போராட்டங்கள் மூலம் விடுவிக்கப்பட்ட படையினரின் பிடியில் இருந்த வீடுகள், பொதுக் கட்டிடங்கள் என்பவற்றை மீளவும் கையகப்படுத்தும் முயற்சியில் படைகள் ஈடுபட்டுள்ளன. படையினரை விஞ்சி சிறிலங்கா பொலிசாரே இந்த மிரட்டல்களில் ஈடுபடுகின்றனர். வடமராட்சி, அச்சுவேலிப் பகுதியில் படையினர் வைத்திருக்கும் வீடொன்றுக்கு வாடகைப் பணம் தருமாறு உரிமையாளர் கேட்டதற்கு இன்றும் அதிகமாக வீடுகளை அவசர காலச்சட்டத்தின் கீழ் தம்மால் எடுத்துக் கொள்ள இயலும் என்று அச்சுறுத்திருக்கின்றனர்.

ஆனால்,அவர்கள் அவசரகாலச்சட்டம் காலாவதியாகியிருந்த நான்காண்ட்களில் -இரு தரப்புக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாட்டில் எட்டப்பட்டபடி விடுவித்திருக்க வேண்டிய அவர்களின் வீடுகளை விடுவித்திருக்கவில்லை. இப்போது மீளவும் கையகப்படுத்தவும் வாடகைப் பணம் கொடுக்காமல் தப்பித்துக் கொள்வதற்கும் அவசர காலநிலையை சிறிலங்கா படையினர் கையிலெடுத்துச் செயற்படுகின்றனர்.

கடந்த வாரம் இன்னும் மக்கள் குடியேற அனுமதிக்கப்படாதுள்ள பலாலி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இரண்டு பௌத்த தாது கோபங்களைப் படையினர் திறந்து வைத்துள்ளனர். கூட்டுப்படைகளின் தளபதி தயா சந்தகிரி திறந்து வைத்த இந்த தகவல், சிறிலங்கா இராணுவத் தரப்பின் செய்திக் குறிப்பின் வழியாகவே வெளியில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே திருகோணமலையில் அமைக்கப்பட்ட திடீர் புத்தர் சிலையை அகற்றக் கோரி ஆர்ப்பாட்டங்கள், கதவடைப்புக்கள் என போராட்ட முஸ்தீபுகள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் இதனை ரகசியமாக வைத்திருக்காது பகிரங்கப்படுத்தியிருப்பதன் நோக்கம் என்ன?

அவசரகால விதிமுறைகளின் கீழ் மக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க இயலாது என்ற துணிச்சலும் அப்படி என்ன போராட்டம் நடத்தினாலும் திருகோணமலையில் விடயத்தைக் கையாள்வது போல கையாளலாம் என்ற நம்பிக்கையும் படைத்தரப்புக்கு இருப்பது தான் காரணமா?

**"கடந்த வாரம் இன்னும் மக்கள் குடியேற அனுமதிக்கப்படாதுள்ள பலாலி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இரண்டு பௌத்த தாதுகோபங்களைப் படையினர் திறந்து வைத்துள்ளனர். கூட்டுப்படைகளின் தளபதி தயா சந்தகிரி திறந்து வைத்த இந்த தகவல், சிறிலங்கா இராணுவத் தரப்பின் செய்திக் குறிப்பின் வழியாகவே வெளியில் அறிவிக்கப் பட்டுள்ளது. ஏற்கனவே திருகோணமலையில் அமைக்கப்பட்ட திடீர் புத்தர் சிலையை அகற்றக் கோரி ஆர்ப்பாட்டங்கள், கதவடைப்புக்கள் என போராட்ட முஸ்தீபுகள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் இதனை ரகசியமாக வைத்திருக்காது பகிரங்கப்படுத்தியிருப்பதன் நோக்கம் என்ன?**

புரிந்துணர்வு உடன்படிக்கையைச் சரியான முறையில் அமுல்படுத்தி இவை போன்ற விடயங்களுக்குத் தீர்வு காணவேண்டும் என்று கதிர்காமரின் கொலைக்கு பின்னர் சிறிலங்கா அரசு பேச்சுக்களுக்கு முனைந்தபோது விடுதலைப் புலிகளினால் தெரிவிக்கப்பட்டது. அதற்கு சிறிலங்கா அரச தரப்பு ஒப்புக்கொண்டு இருந்தபோது அதனை எங்கே நடத்துவது என்ற சர்ச்சை தீர்க்கப்படாதுள்ளது. இப்போது ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டிய நிலைமையும் ஏற்பட்டு விட்ட பின்னர் பேச்சுக்களுக்கான சாத்தியங்கள் இல்லாமல் போகின்றன.

இந்த நிலையில் படையினரின் அத்துமீறல்கள் அவசர காலச்சட்டம் இருக்கும் வரைக்கும் மட்டுமல்ல அதன் பின்பும் தொடரவே போகின்றன. தீர்க்கமான முடிவை விடுதலைப் புலிகள் நடைமுறைப்படுத்தும் ஒரு சூழ்நிலைக்குள் வரும்வரை இந்த நிலைமைதான் தொடரப் போகின்றது.

# சிந்தனைக்கு....

* மனச்சாட்சியின் விருப்பப்படி நடப்பவனே நல்லமனிதன்.
* சந்தேகமிருப்பவன் சுதந்திரமாக வாழ்ந்துவர முடியாது.
* எங்கு அன்பு முடிவடைகின்றதோ அங்கு கொடுங்கோலாட்சி ஆரம்பமாகிறது.
* எதிர்காலத்தை எண்ணி அஞ்சாதவனே நிகழ்காலத்தை நுகரலாம்.
* நீண்ட தூரம் ஓடி வந்தால் தான் அதிக உயரம் தாண்டமுடியும்.
* வார்த்தையில் மட்டும் பணிவு இருந்தால் போதாது நடத்தையிலும் இருக்க வேண்டும்.
* தெரியாது என்ற வார்த்தை பல தெரிந்ததையும் கற்றுக் கொடுக்கும்.
* உண்மை ஒன்றையே பேசுகின்றவன் மரணத்திற்கும் அஞ்சான்.
* உடலுக்கு உணவு தேவைப்படுவதுபோல உள்ளத்துக்கும் பண்பாடு தேவை.
* உள்ளத்தில் உண்மையுடையவர்கள் ஒரு போதும் தோல்வி அடையமாட்டார்கள்.

**எம்.கிருசாந்தி, கோடைமேடு,**
**எருவில், களுவாஞ்சிகுடி.**

# நல்ல பழக்கங்கள்

01. அன்புடன் பழகுவோம்.
02. ஆசிரியர் சொற்படி நடப்போம்.
03. இன் சொல் பேசுவோம்.
04. உண்மை உரைப்போம்.
05. உயிர்கள் மீது கருணை காட்டுவோம்.
06. ஊக்கமுடன் கற்போம்.
07. ஏழைகளுக்கு இரங்குவோம்.
08. ஒற்றுமையாக வாழ்வோம்.
09. சுத்தம் பேணுவோம்.
10. பிறருக்கு உதவி செய்வோம்.
11. பெரியோரை மதிப்போம்.
12. முதியோருக்கு உதவுவோம்.

**நல்ல பழங்கங்களைக் கடைப்பிடித்து நல்லவர்களாக வளர்வோம்.**

**வே.நிதன், தரம்:-3R**





# பொது அறிவு

01. உலகிலேயே அதிகமாக வெயில் கூடிய நாடு?
    **சீனா**
02. காற்று நகரம் எனப்படுவது. அமெரிக்காவிலுள்ள நகரம் எது?
    **சிக்காகோ**
03. வானவில் தோன்றிமறைய எடுக்கும் நேரம்?
    **3 நிமிடம்**
04. இலவசக் கல்வியின் தந்தை?
    **சீ.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கர**
05. காகமே இல்லாத நாடு?
    **நியூசிலாந்து**
06. உலகின் ஒரே இந்து நாடு?
    **நேபாளம்**
07. கப்பலோட்டிய தமிழன்?
    **வ.உ.சிதம்பரப்பிள்ளை**
08. உலகிலேயே மிகப் பெரிய மிருகக் காட்சிசாலை அமைந்துள்ள இடம்?
    **அலிப்பூர்**
09. அதிக ஞாபக சக்தி கொண்ட விலங்கு?
    **யானை**
10. பிரிட்டனின் தபால் துறையின் பெயர்?
    **றோயல் மெயில்.**
11. இலங்கையின் எந்தவொரு அமைச்சுக்கும் உட்படாத திணைக்களம் எது?
    **தேர்தல் திணைக்களம்.**
12. இலங்கையின் தேசிய மலர் எது?
    **நீரோற்பலம்.**
13. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
    **கரப்பந்தாட்டம்.**
14. இலங்கையின் 4வது நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்கள் எத்தனையாம் ஆண்டு முதன் முதலில் தெரிவு செய்யப்பட்டார்?
    **1994ம் ஆண்டு.**
15. 'நாகம்மாள்' என்ற நாவலை எழுதியவர் யார்?
    **ஆர்.ஷண்முகசுந்தரம்.**
16. 2003ம் ஆண்டு நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிகூடிய விக்கெட்டுக்களை (721 ஓட்டங்களுக்கு 46 விக்கெட்டுக்கள் வீழ்த்தியவர் யார்?
    **முத்தையா முரளிதரன்.**
17. 2003ம் ஆண்டு நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்களைப் (1168 ஓட்டங்கள்) பெற்ற துடுப்பாட்ட வீரர் யார்?
    **யூசுப் யுஹானா.**
17. 'சுகோய் 30' ரக விமானங்களை உற்பத்தி செய்யும் நாடு எது?
    **ரஷ்யா.**

**எம்.லினேஸ்குகன், தரம்:-03**
**மட்.பட்டிருப்பு தேசிய பாடசாலை**

# எலியிடம் ஏமாறிய பூனை



ஒரு வீட்டில் உருண்டு திரண்ட உடலையும், பெரிய கண்களையும் கொண்ட ஒரு அழகான பூனை ஒன்று வளர்ந்து வந்தது. ஒரு நாள் அந்தப் பூனைக்கு பசி ஏற்பட்டது. அந்தப் பூனை எங்கு தேடியும் அதற்கு அன்று உணவு கிடைக்கவில்லை. அப்பொழுது பூனை என்ன செய்வதென்று சிந்தித்துக் கொண்டிருந்தது.

அப்பொழுது பூனை தங்கியிருக்கும் வீட்டு வளையில் ஒரு கொழுத்த எலி ஓடுவதைக் கண்டது. பசிக் களைப்பால் வாடிய பூனை அந்த எலியைப் பிடித்துச் சாப்பிட வேண்டுமென்று திட்டம் திட்டியது. பின்னர் பூனை சத்தம் கேட்காதவாறு வளையில் ஏறி பதுங்கிப் பதுங்கிச் சென்று எலியைப் பிடித்து விட்டது.

பூனையின் கோரப் பிடியிலிருந்து தப்பிக் கொள்ள முடியாமல் எலி தவித்தது. வலி தாங்கமுடியாமல் கத்தியது. பசியுடன் இருந்த பூனை எலியைச் சாப்பிட நினைத்தது.

உடனே பூனை எலியைப் பார்த்து "எலியாரே எனக்குப் பசிக்கிறது. அதனால் உன்னை நான் உணவாக்கிக் கொள்ள விரும்புகிறேன். அதனால் நீ என்னோடு இறுதியாக ஏதாவது கதைக்க விரும்புகிறாயா" என்று கேட்டது.

பூனையின் பேச்சை சாதகமாகப் பயன்படுத்த நினைத்த எலி இந்தப் "பூனையின் கோரப் பிடியிலிருந்து எப்படித் தப்பிக் கொள்ளலாம்" என நினைத்தது.

உடனே எலி பூனையைப் பார்த்து "பூனை மாமா, பூனை மாமா நான் உங்களுக்கு விருந்தாகப் போவதையிட்டு பெருமகிழ்ச்சியடைக்கிறேன். நான் விருந்தாவதற்கிடையில் என் கடைசி விருப்பத்தைச் சொல்லுகிறேன்" என்றது.

பூனை எலியைப் பார்த்து அப்படியா? உங்கள் ஆசையைக் கூறுங்கள் என்றது.

" நீங்கள் என்னை உண்ணும் போது உங்கள் நாவிற்கு இனிய சுவையாக இருக்க வேண்டும்" என்று கூறியது எலி.

"அப்படியாயின் நான் என்ன செய்ய வேண்டும்" என்று பூனை கேட்டது. அதற்கு எலி "பூனையாரே பல் துலக்காமல் என்னைச் சாப்பிட்டால் உங்கள் நாவிற்கு சுவையாக இருக்காது. அதனால் பல் துலக்கி வந்து என்னைச் சாப்பிடுங்கள்" என்றது.

எலியின் பேச்சை நம்பிய முட்டாள் பூனை " அப்படியாயின் நான் பல்துலக்கி விட்டு வரும் வரை இவ்விடத்திலேயே இரு" என்று கூறி பூனை பல்துலக்கச் சென்றது.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய எலி பூனையைப் பார்த்து "பூனை மாமா, பூனை மாமா விரைவாக வந்து என்னைச் சாப்பிடுங்கள்" என்று பூனையை பல்துலக்க வழியனுப்பி வைத்தது.

பின்னர் எலி மீண்டும் தான் இருந்த வளையில் ஏறி ஒளிந்து கொண்டது.


தனது தந்திரத்தால் முட்டாள் பூனையை ஏமாற்றி விட்டோம் என்ற சந்தோசத்துடன் பூனை மறுபடியும் தன்னை வந்து பிடிக்காதவாறு ஒளித்துக் கொண்டது.

பசியுடனும், சந்தோசத்துடனும் பல்துலக்கி விட்டு வந்த பூனை யாருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. எலி தனது தந்திரத்திரத்தாலும், புத்திக் கூர்மையாலும் தன்மை ஏமாற்றி விட்டதை எண்ணி தலை குனிந்து நின்றது.

**நி.ஜினுதர், தரம் :-01**
**மட்-கறுவாக்கேணி.வி. வித்.**



**ம.சுதர்சன்**
**குருகுலம்**
**தம்பிலுவில்**




எம்.ஐ.பர்ஹத் பர்ஹானா
தரம்:-03
கமு-கார்மேல் பாத்திமா கல்லூரி
கல்முனை



ப.தளிரவன், பாலர் வகுப்பு
அம்பிளாந்துறை

# விடுகதைகள்

01. சுருட்டச் சுருட்ட சுருட்ட முடியாது. அது என்ன?
02. கட்டுக் காவல் மனிதனுக்கு வீட்டுக்குள்ளே இடமில்லை. அது என்ன?
03. மறைக்கவும் முடியாது. பிடிக்கவும் முடியாது. ஆனால் நம்மைத் தொடர்வான். அவன் யார்?
04. இரு புறமும் பாதை. நடுவில் ஒரு தூண். அது என்ன?
05. அம்மா கொடுத்த தட்டில் நீர் ஒட்டவில்லை. அது என்ன?




ப.தேனுகாந்தா

# விடைகள்

*01. பாய்.*
*02. செருப்பு.*
*03. நிழல்.*
*04. மூக்கு.*
*05. தாமரை இலை.*

**தினேஸ்,**
**தரம்-04.**




சென்ற வாரம் குவைற் நாட்டின் Land mark என அழைக்கப்படும் இஸ்லாமிய கலாசாரப் பிரதிபலிப்புடன் கூடிய குவைத் கோபுரங்கள் பற்றிப் பார்த்தோம். இம்முறையும் இஸ்லாமிய பாரம்பரிய மரபைப் புறந்தள்ளி விடாதபடி அமைக்கப்பட்ட அதி நவீன கட்டடத் தொகுதியொன்றை நோக்குவோம்.

ஆசியாவின் பொருளாதாரப் புலிகளுள் ஒன்றாக விளங்கும் மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள இரட்டைக் கோபுரங்கள் இன்று உலகப் புகழ் பெற்றவையாக விளங்குகின்றன. இன்று உலகிலேயே உயர்ந்த இரட்டைக் கோபுரக் கட்டடமாக (Towin Tower) விளங்கும் பெற்றோனாஸ் கோபுரம் (Petronas Twin Tower) 452 மீற்றர்கள் (1483 அடிகள்) உயரமானது. அத்துடன் உலகில் மிக ஆழமான அத்திவாரத்தை (120 மீற்றர்கள்) கொண்டதாக இருப்பது இதன் சிறப்பம்சமாகும். மேலும் இது இன்று உலகில் 4வது உயரமான கட்டடமாகவும் கொள்ளப்படுகின்றது.

கட்டடக் கலைஞர் சீசர் பெல்லியால் வடிவமைக்கப்பட்ட இக்கட்டடம் Petronas கொம்பனிக்குச் சொந்தமானது. முதலாவது கோபுரத்தில் முழுமையாக இக் கம்பனியும் அதன் துணைநிறுவனங்கள், கூட்டு நிறுவனங்கள், என்பனவும் உள்ளன.

மற்ற கோபுரத்தில் ......புகழ் மிக்க பல்வேறு நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. இதில் உலகப் புகழ் பெற்ற போயிங் (Boeing) விமான த ' ாரிப்பு நிறுவனம், எக்சாட் மென்பொருள் (exact software) நிறுவனம், IBM கணணி நிறுவனம், Microsoft மென் பொருள் நிறுவனம் என்பன அடக்கம். இதைத் தவிர மலேசியாவின் பிரபல KLLCC நிறுவனத்தின் கடைத்தொகுதி (Shopping mall) காட்சியரங்கம், பூங்கா, சிறுவர் விளையாட்டு மைதானம் என்பனவும் உள்ளன.

குறித்த இரு கோபுரங்களையும் 170 M உயரத்தில் இணைத்து வான் பாலம் (Sky Buidge) 41 ஆம், 42 ஆம் மாடிகளை உள்ளடக்கியதாக 58 M நீளத்தில் அமைந்துள்ளன. இந்த இரட்டைக் கோபுரமே இன்று மலேசியாவின் பிரபலமான canel matk யாக விளங்குகிறது.




அந்தக் காலத்து "ஸ்ராங்ரைக்" "பிளைக் செவண்" முதல் இக்காலத்து "ஸ்ராவோஸ்" வரை ஒளிக்கதிர் ஆயுதங்கள் எதிரிகளையும் அவர்களின் வான்கலங்கள், கட்டடங்களையும் சுட்டுப் பொசுக்குவதைக் கண்டிருக்கிறோம். கற்பனையாக, அன்று வந்த இவ் லேசர் ஆயுதங்கள் இன்று நிஜமாகும் நிலையிலுள்ளன.

அமெரிக்க பென்ரகன் நிலையத்தின் ஆராய்ச்சியாளர்களால் இதற்கான முதலடி வெற்றிகரமாக எடுத்து வைக்கப்பட்டுள்ளது.

சண்டை விமானங்களில் (Fighter jet) பொருத்தக் கூடியவாறு வடிவமைக்கப்படும் இக்கருவித் தொகுதி HELLADS (High Energy Liquid Laser Area Defense System) என அழைக்கப்டுகிறது.

எதிரிகளால் ஏவப்படும் ஏவுகணைகளை வானில் வைத்து அழிக்கத்தக்கதாக திரவ லேசர் கதிர்கள் இங்கு பயன்படுத்தப்படுகின்றன. தற்போது ஒரு கிலோ வாற் அளவான லேசர் கதிர்கள் வெற்றிகரமாக உற்பத்தி செய்து பரீட்சிக்கப்பட்டுள்ளன. நேர்த்தியான பயன் விளைவுகளைப் பெற 150 கிலோவாற் அளவில் இது தேவைப்படும் எனக் கூறப்படுகிறது. இவ்விலக்கு 2007 இல் எட்டப்பட்டு விடும் என பென்ரகன் தெரிவித்துள்ளது.



ஒளியை உண்டாக்கும் உயிரினங்கள் பூச்சிகள், புழுக்கள், சிலவகை கடல் வாழ் உயிரினங்கள் ஏன் தாவரங்கள் கூட இருப்பதை நாம் அறிவோம்.


இவ்வகையில் மின்மினிப் பூச்சி எமக்கு மிகவும் பழக்கமான தொன்றாகும். எனினும் அது ஒளிர்வதற்கான காரணம் பற்றி நாம் அறிந்து கொண்டவை மிகக் குறைவே.

மின்மினிப் பூச்சிகள் நிலத்தில் முட்டையிடுகின்றன. அவை 4 வாரங்களில் புழுக்களாக வெளிவந்து பின் பூச்சிகளாகின்றன. இவை பொதுவாக கோடை காலத்திலும், வேணிற்காலத் திலுமே அதிகம் வெளியே உலா வரும். குளிர் காலத்தில் மண்ணின் அடியில் உயிர்வாழும்.

மின்மினிப் பூச்சி ஒளிர்வதற்கான காரணம் அங்கு இரசாயன சக்தி ஒளிச்சக்தியாக மாற்றப்படுவதேயாகும். இங்கு தாவர ஒளிச் சேர்க்கைக்கு எதிரான நிலையை நாம் அவதானிக்க முடியும். ஒளிச் சேர்க்கையின் போது $0_2$ உள்ளெடுக்கப்பட்டு $co_2$ வெளிவிடப்படும்.

இவ் "லூசி பெரின்" எனும் இரசாயனப் பொருள் ஒரு ATP மூலக்கூறுடன் சேர்ந்து லூசிபெரஸ் என்ற நொதியத்தால் தூண்டப்பெற்று "லூசிபெரில் அடினைலேற்" ஆக மாறும். இது பின் ஒரு மூலக்கூறு ஒட்சிசனுடன் சேர்ந்து Oxdative decarboxlation மூலம் ஒக்சிலூ பெரின் ஆக மாறும். இந்நிகழ்வின் போதே ஒளி உமிழப்படுகிறது. இவ்வொளி வெப்பத்தை வெளியிடாமையால் இலை குளிர் ஒளி (Cold light) எனவும் அழைக்கப்படுகின்றது.

இவ்வொளியை பூச்சிகள் உற்பத்தி செய்வது தமது இனப்பெருக்கத்திற்காகவே ஆகும். ஒவ்வொரு வகை இனமும் குறிப்பிட்ட வகை ஒளிக் குறிப்பை (Aash Pattern) கொண்டிருக்கின்றன.




(AP PHOTO)

இளம் தலைமுறையினரிடம் வாசிப்புப் பழக்கம் குறைந்து வருவதாகவும் இது கவலை தரும் விடயமெனவும் ஆர்வலர்கள் அனேகர் கூறிவருகின்றனர்.

நூலகங்களுக்குச் சென்று நேரமொதுக்கி வாசிப்பது, அல்லது புத்தகங்களை இரவல் பெற்று வந்து வாசிப்பது இன்றைய அவசர உலகிற்குப் பொருத்தமானதாக இல்லை என மேலை நாட்டு இளசுகள் அலுத்துக் கொள்கின்றனர்.

இதற்குத் தீர்வு காணும் முகமாக அமெரிக்காவில் (audio book Library) ஓடியோ நூல் நிலையங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் Guilderland நூலகம் இணையத்தின் மூலமாக இச்சேவையை வழங்க ஆரம்பித்துள்ளது. புத்தகங்களை ஒலிவடிவில் சேமித்து அவற்றை இரவல் கொடுக்கும் நடைமுறை கடைப்பிடிக்கப்படுகிறது.

இங்கு அங்கத்தவர்கள் குறித்த தொகை சந்தா கட்டி லைபிறரி காட் (Library card) பெற வேண்டும். பின் இணைய சேவை மூலம் தேவையான புத்தகங்களின் ஒலி வடிவை Down load செய்து கொள்ளலாம். மூன்று வாரங்களுக்கு இரவல் பெறும் முறை புதுப்பிக்கப்படுவதுடன் இரவல் பெறுபவர் அவ் ஒலிப் புத்தகம் மீண்டும் நூலகத்தை அடைந்துவிடும்.

# சிங்கள அரசின் பலவீனமும் தமிழ் மக்களின் பலமும்



**கிஜா**

தமிழீழ விடுதலைப்புலிகளும், சிறிலங்கா அரசாங்கமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து மூன்றரை வருடங்கள் கடந்து விட்டது. ஆனால் தமிழர் தாயகத்தில் நடப்பது என்ன? இதற்கு காரணம் யார்? என்பதை ஆராய்ந்து பார்த்தால் அதற்கான பதிலை இன்றைய நிலையில் சிறுபிள்ளை கூட சொல்லி விடும்.

ஆம் இன்று வடக்குக் கிழக்கில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் சிறிலங்காப் படையினர் தங்களது அடிவருடிகளாக ஒரு சில தமிழினத் துரோகிகளை ஒட்டுப் படையாக தமது படைமுகாம்களுக்குள் வைத்துக் கொண்டு தமிழ் மக்கள் மீதும், தமிழீழ விடுதலைப்புலிகள் மீதும்ஒரு நிழல் யுத்தத்தை புரிந்துணர்வு ஒப்பந்த காலத்திலிருந்து நடத்தி வருகின்றனர். சிறிலங்கா அரசின் இந்தச் செயலை சர்வதேச சமூகமும் உணர்ந்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் தான் நினைத்ததை தமது படைகளினதும், தம்மிடமுள்ள ஒட்டுப் படைகளினதும் ஒத்துழைப்புடன் சாதிக்கலாம் என்று பகற்கனவு காண்கின்றது. இவர்களின் பகற்கனவு இன்று கலைந்து இனி என்ன செய்வது என்று தெரியாத திண்டாட நிலையில் மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகளை உடன் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்தின் கணிப்பு, கனவுஎன்பன இன்று தவறானதாகி விட்டது. எனெனில் தமிழர்களின் பலத்தை எந்தவொரு துரோக நடவடிக்கையாலும் அழிக்கவோ சிதைக்கவோ முடியாது என்பதை சிறிலங்கா அரசு மாத்திரமல்ல சர்வதேச சமூகமும் உணர்ந்து விட்டது.

சிறிலங்கா அரசாங்கம் இதனை அறியாதது போல நாடகமாடுகின்றது. இன்று தென் தமிழீழம் தமிழ் மக்கள் கொடூரமான முறையில் கொல்லப்படும் கொலைக் களமாக மாறி விட்டது. இதனை செய்வதற்கென சிறிலங்கா படையினர் அவர்களிடமுள்ள ஒட்டுப் படையினரின் துணை கொண்டு தென் தமிழீழத்தில் மீண்டுமொரு இன அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தமிழ் மக்கள் மீதும், தமிழீழ விடுதலைப்புலிகள் மீதும் சிறிலங்கா அரசகட்டுப்பாட்டுப் பகுதியிலும், படைமுகாம்களுக்கு அருகிலுமாக இருந்து தாக்குதலை மேற்கொள்கின்றனர்.

இந்நிலை நாளுக்கு நாள் அதிகரித்தபடியே உள்ளது. இன்று எந்தவொரு ஊடகத்தைப் பார்த்தாலும் மட்டக்களப்பில் குண்டுத்தாக்குதல், அம்பாறையில் சுட்டுக் கொலை, வவுனியா, திருகோணமலையில் துப்பாக்கிச்சூடு, கடைமீது குண்டுத்தாக்குதல், விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொலை என்ற செய்திகள்தான் அதிகளவில் இடம் பிடிக்கின்றன.

இத்தகைய சம்பவங்கள் எங்கு நடைபெறுகின்றது என்று ஆராய்ந்தால் முழுக்க, முழுக்க சிறிலங்காப்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில்த்தான் குறிப்பாக அவர்களின் படைமுகாமை அண்மித்த இடங்களில் சிறிலங்கா அரசும், அதன் படையினரும் முட்டாள்த்தனமாக செயற்பட்டு படைகளுக்கும் தமிழ்த் தேச விரோதக் கும்பல்களுக்கும் எதுவித தொடர்புமில்லையென தெரிவிக்கின்றார்கள் என்றால் அதனை கேட்பவரும் பார்ப்பவரும் அவர்கள் சொல்வதெல்லாம் உண்மை என்று ஏற்றுக் கொள்வதற்கு தமிழ் மக்கள் என்றும் ஏமாளிகளில்லை. சிங்களப் பேரினவாதிகள் குட்டக்குட்ட படையினருடன், சமபலத்துடன் இன்று சர்வதேசத்தால் நோக்கப்படுகின்ற படையா தமிழர் படை தலை நிமிர்ந்து நிற்கின்றது. இனியும் தமிழர்களும், விடுதலைப்புலிகளும் படையினரும் ஏமாரமாட்டார்கள் என்பதுதான் உண்மை.

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு மூன்றரை வருடங்கள் கடந்து விட்டது. அன்றிலிருந்து இன்றுவரைக்கும் கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளும், பொது மக்களுமாக நூற்றுக்கு மேற்பட்டோர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதனை யுத்த கால எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது அதிகமென்றுதான் கூறவேண்டும் ஏனெனில் யுத்த காலத்தில் இருதரப்பினரிடையே தொடர்ந்தும் மோதல்கள் நடந்தால் உயிரிழப்பு என்பது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் இன்று நிலைமை அதுவல்ல.

தமிழீழ விடுதலைப்புலிகள் சிறிலங்காப்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மக்களுக்கான தமது தற்பாதுகாப்புக்குரிய ஆயுதமின்றி புரிந்துணர்வு ஒப்பந்தப் பிரகாரம் நிராயுதபாணிகளாக பயணிக்கும் போது சிறிலங்காப்படையினர் தம்வசமுள்ள ஒட்டுப்படைகளது ஒத்துழைப்புடன் பதுங்கியிருந்து தாக்குதல் நடாத்துகின்றனர்.

இதனை நோக்குவோமாக இருந்தால் கடந்த வருடம் மட்டக்களப்பு மாவட்ட நகர அரசியல் துறைப் பொறுப்பாளரான சேனாதிராஜா தனது அரசியல் கடமைகளைச் செய்வதற்காக அவரும், சக போராளி ஒருவரும் மோட்டார் வண்டியில் பயணிக்கும் போது சிறிலங்காப்படையினரின் உயர் பாதுகாப்பு வலயமான அரசடி மக்கள் வங்கி கட்டடத்திற்கு முன்னால் பட்டப் பகலில் சுட்டுக் கொல்லப்பட்டார். இது முழுக்க முழுக்க சிறிலங்காப்படையினரின் முகாம்கள் சூழவுள்ள பகுதியாகும். சேனாதிராஜா கொலை செய்யப்பட்ட இடத்திற்கு அண்மையில் பொலிஸ் நிலையம் இருக்கின்றது. மறுபுறத்தில் பயனியர் வீதியிலுள்ள காட்டுக்கந்தோர் கட்டத்தில் உள்ள பொலிஸ். மறுபுறம் அரசடி நூலக கட்டத்திலிருக்கின்ற பொலிசார் போதாக்குறைக்கு வீதிப் போக்குவரத்துப் பொலிசார் இராணுவத்தினரென காவலில் ஈடுபடும் பகுதியில்தான் நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சிறிலங்காப் படையினரின் ஒத்துழைப்பின்றி இத்தாக்குதலை மேற்கொள்ள முடியாது. இதே போன்றுதான் தன்னாமுனைப் பகுதியில் போராளி பகலவன் உட்பட இரு போராளிகள் மோட்டா வண்டியில் பயணிக்குப் போது சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதுவும் சிறிலங்கா அரசகட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதேபோன்று சிறிலங்காப் படையினரின் முகாமை அண்மித்த பகுதியில் வைத்து 20-08-2004 அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வாவா, யோக மீதான கிளைமோர் தாக்குதல், இதனை நடத்தியவர்கள் படை முகாமிற்குள் சென்றுள்ளனர். அதுமாத்திரமல்லாமல் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு இரண்டு மாத காலத்தினுள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது தொடர்பாக கிளிநொச்சி சென்று நோர்வே தூதுக்குழுவினரையும், தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளருடனும் கலந்துரையாடி விட்டு 07-02-2005 மட்டக்களப்பு நோக்கிவந்த மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளும், முன்னாள் தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரான சந்திரநேருவும் பயணித்த வேனைப் பின் தொடர்ந்து வந்து தாக்குதல் நடாத்தி விட்டுத் தப்பிச் சென்றனர். இது சிறிலங்காப் படையினரின் கிழக்கு மாகாணத்துக்குரிய கட்டளைத்தளம் அமைந்துள்ள மின்னேரியாவை அண்மித்த இடமாகும். இப்பகுதிகளில் படையினர் வீதி ரோந்து நடவடிக்கைகளிலும் பாதுகாப்புச் செயற்பாடுகளிலும் ஈடுபடும் பகுதியாகும். இப்பகுதியினுள் சிறிலங்காப் படையினரின் ஒத்துழைப்பின்றி எவருமே தாக்குதலை நடத்த முடியாது. இத்தாக்குதல் படையினர் ஒத்துழைப்புடன்தான் நடத்தப்பட்டுள்ளது, இத்தாக்குதலுக்குச் சிறிலங்கா அரசே பொறுப்பேற்க வேண்டும் என விடுதலைப்புலிகள் கோரிய போது சிறிலங்காவின் பாதுகாப்புத் தரப்பினர் முன்வைத்த வாதம் மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரின் பயணம் குறித்து அறிவிக்கப்படவில்லை என்றனர். இதிலிருந்து நாம் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும் அல்லவா? அதாவது கௌசல்யனின் பயணம் பற்றி தமக்கு அறிவிக்காததாலேயே அவரைக் கொலை செய்தோம் என ஒப்புக்கொள்வது போலல்லவா இருக்கின்றது.

சரி கௌசல்யனின் கொலை ஒரு புறமிருக்கட்டும். 26-06-2005 அன்று கிளிநொச்சியிலிருந்து கண்காணிப்புக் குழுவினரதும், சிறிலங்காப் படையினரினதும் வழித்துணையுடன் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் மட்டக்களப்பு நோக்கிப் பயணம் மேற்கொண்ட போது செவனப்பிட்டிக்கும் வெலிக்கந்தைக்குமிடையில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் பயணம் செய்த வாகனத்தின் மீது கண்ணிவெடித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டது. அதுவும் பட்டப்பகல். இத்தாக்குதலுக்கு யார் பொறுப்பு என்பதை ஆராய்ந்தால் விடுதலைப் புலிகளின் இந்தப் பயணம் குறித்து கண்காணிப்புக் குழுவினருக்கும் சிறிலங்காப் படைத்துறையினரின் உயர் பீடத்திற்குத்தான் தெரியும். ஆனால் இத்தாக்குதலுக்கான பொறுப்பை ஏற்க சிறிலங்கா அரசு மறுத்து விட்டது. ஆனால் உண்மை இத்தாக்குதலை மேற்கொண்டவர்கள். சிறிலங்காப் படையினரும், அவர்களின் துணையுடன் இயங்கும் ஒட்டுப் படைகளும்தான். இதனை கண்காணிப்புக் குழுவினரும் ஊகித்து அறிந்திருப்பர் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

மேலும் அம்பாறையில் சிறிலங்கா படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இயங்கும் விடுதலைப்புலிகளின் அரசியல் பணிமனைகள் உட்பட போராளிகள் மீதும் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. அக்கரைப்பற்று புலிகளின் நிர்வாக சேவை அலுவலகம் மீதான தாக்குதல், பெரிய கல்லாறு விடுதலைப்புலிகளின் அரசியல் பணிமனை மீதான குண்டுத் தாக்குதல், வீரமுனை அரசியல் பணிமனை மீதான கைக்குண்டுத் தாக்குதலில் மூன்று போராளிகள் காயமடைந்தது. அதே போன்று சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு மண்டானை நலன்புரி நிலையத்திலுள்ள மக்களின் பிரச்சினை குறித்து கேட்டறிவதற்காக அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் உட்பட வேறு பல போராளிகளும் 28.03.2005 அன்று அங்கிருந்த மக்களுடன் கலந்துரையாடிக் கொண்டிருந்த போது விசேட அதிரடிப்படையினர் கம்புகள் கி கெட் துடுப்பாட்ட மட்டை துப்பாக்கியின் பின்புறம் என்பவற்றால் அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பனையும் அங்கு வந்திருந்த போராளிகளையும் கடுமையாகத் தாக்கி காயப்படுத்தியிருந்தனர். இதற்கு விஷேட அதிரடிப்படையினர் கூறிய காரணம் இவர்கள் தாங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு வந்ததனாலேயே தான் தாக்குதல் நடத்தியாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு தெரிவித்தனர்:-

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் நலன் குறித்து கேட்டறிய வந்தவர்கள் எதற்காக விசேட அதிரடிப்படையினர் மீது தாக்குதல் நடத்த வேண்டும் இதிலிருந்து நாம் ஒன்றை விளங்கிக் கொள்ள முடிகிறது. அல்லவா புரிந்துணர்வு ஒப்பந்த காலத்திலிருந்து இன்று வரைக்கும் யுத்த நிறுத்த நடவடிக்கைகளைக் குழப்புபவர்களாக சிறிலங்காப் படையினரும், சிறிலங்கா அரசாங்கமும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதே போன்றுதான் மட்டு அம்பாறை மாவட்ட மகளீர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று பெண் போராளிகள் மீதான தாக்குதல் 28.01.2005 நடத்தப்பட்ட போது தாக்குதலை நடத்திய கொலையாளி சம்பவம் நடந்த இடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவிலுள்ள விசேட அதிரடிப்படை முகாமுக்குள்ளையே சென்றுள்ளார். இதனை அவ் வீதியால் போக்குவரத்து செய்த மக்களும் கண்டுள்ளனர். அத்துடன் அன்றைய தினம் விசேட அதிரடிப்படையினர் தங்களது வழமையான சோதனை நடவடிக்கையை தளர்த்தியிருந்தனர் இதன் மூலமாக இத் தாக்குதலுக்கு விசேட அதிரப்படையினர் பூரண ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள் என்பது தெட்டத் தெளிவாக புலப்படுகிறது.

அடுத்து அண்மையில் 10.08.2005 அன்றும் மாவட்ட அரசியல் துறைப் பணிமனையிலிருந்து திருக்கோயில் அரசியல்துறை பணிமனைக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற அரசியல்துறை போராளிகளான ரமேஸ், சுஜிவேந்தன் இருவரையும் காஞ்சிரங்குடா சந்தியில் பொலிஸ் சீருடைய அணிந்தோர் வழிமறித்து இருவரது கையையும் பின்புறமாக கட்டிவிட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இத் தாக்குதலுக்கு நீலநிற வான் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் இக் கொலையினை மேற் கொண்ட கொலையாளிகளின் வேனைச் செலுத்தி வந்த சாரதியும், இன்னுமொருவரும் பொலிஸ் சீருடையுடனும் ஏனைய 4 பேர் சாதாரண உடையிலும் இருந்துள்ளனர். இதுவும் முழுக்க முழுக்க விசேட அதிரடிப்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இச் சம்பவ இடத்திற்கும் விசேட அதிரடிப்படை முகாமுக்குமுள்ள தூரம் 300 மீற்றராகும். அத்துடன் கொலையாளிகள் இப்படைமுகாமைக் கடந்தே சென்றுள்ளனர். இதன்படி பொலிசாரினதும், விசேட அதிரடிப்படையினதும் ஒத்துழைப்புடனையே இந்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இறுதியாக வாகரை கிரிமிச்சை சந்தியில் நடை பெற்ற தாக்குதலில் ஒரு போராளி வீரச்சாவடைந்துள்ளார். மூன்று பொது மக்கள் காயமடைந்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் சிறிலங்காப் படையினரதும் ஒட்டுப்படையினரதும் ஒத்துழைப்புடன் அனைத்துத் தாக்குதல்களிலும் அரசியல் துறைப் போராளிகளே கொலை செய்யப்பட்டுள்ளதுடன் இவர்கள் அனைவரும் சிறிலங்காப் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் படைமுகாம்களுக்கும் அண்மித்தே இச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளது. இவற்றுக்கு யார் பொறுப்பு. யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறியவர்கள் யார்? என்பதை தெட்டத் தெளிவாக விளங்குகின்றது. சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகளின் அரசியல் செயற்பாட்டை அரசியல் போராளிகளை கொல்வதன் மூலமாக நிறுத்தலாம் என நினைத்து இருபடுகொலைகளை கிழக்கில் தொடர்ந்து நடாத்தி வருகின்றது என்பதுதான் உண்மையாகும். இதே போன்று பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் இந்நிலமை அதிகரிக்கக் காரணம் சிறிலங்காப் படையினரும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுப்படைகளுந்தான் என்பதை தமிழ் மக்களாகிய நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதனைச் சர்வதேச சமூகமும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

சிறிலங்காப்படையினரின் இத்தகைய செயற்பாட்டிலிருந்து தமிழர்களாகிய நாம் இன்று ஒரு பாடத்தைப் படித்துள்ளோம். புலிகள்தான் மக்கள், மக்கள்தான் புலிகள் என்பதை கருத்தில் கொண்டே சிறிலங்காப் படையினர் இன்றுகிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் மீதான தாக்குதலை அதிகரித்துள்ளனர். இது தமிழ் மக்களை எந்த வகையிலும் பலவீனப்படுத்தாது. மாறாக பன்மடங்கு பலப்படுத்தும் என்பதனை சிங்களதேசம் புரிந்து கொள்ள வேண்டும்.

# தமிழர் தாயகத்தின் இன்றைய கல்வி நிலை



ஆழிப்பேரலை தாக்கத்திலிருந்து வடகிழக்குப் பிரதேசம் இன்னும் முற்றாக மீளவில்லை. குறிப்பாக கல்வித் துறை குறிப்பிடத்தக்க நகர்வைத் தானும் தாண்டவில்லையென்று குறை கூறப்படுகிறது.

வடகிழக்கில் முற்றாகச் சேதமடைந்த 67 பாடசாலைகளில் இரண்டைத் தவிர எந்தவொரு பாடசாலைக்கும் அத்திவாரம் கூட நடப்படவில்லையென்பது சிந்திக்க வேண்டிய விடயம்.

வடகிழக்கிலுள்ள 1995 பாடசாலைகளில் போர் மற்றும் சுனாமி காரணமாக 142 பாடசாலைகள் தற்காலிகமாக இழுத்து மூடப்பட்டுள்ளன. மீதி 1853 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. பல பாடசாலைகளில் பாதிக்கப்பட்டு புலம் பெயர்ந்த பாடசாலைகள் இயங்கி வருவதால் இரு பாடசாலைகளும் சீராக இயங்க முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது.

மாணவர் மற்றும் ஆசிரியர்களின் உளநிலை இன்னும் இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. வகுப்புகளில் பல அலகுகள் இன்னும் முடிக்கப்படாமல் அப்படியே இருக்கின்றன. இந்நிலையில் இலங்கையில் ஆழிப்பேரலை காரணமாக 176 பாடசாலைகள் சேதமடைந்ததாகவும் 91234 மாணவர்களும், 3687 ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டதாக தேசிய நடவடிக்கை மத்திய நிலையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

வடகிழக்கில் 67 பாடசாலைகளில் இரு பாடசாலைகளைத் தவிர இதுவரை ஒரு பாடசாலை தானும் கட்டியெழுப்பப்படவில்லை என்பது சிந்திக்க வேண்டிய விடயம். எட்டு மாதமாகின்ற போதிலும் தொடர்ந்து வேறு பாடசாலைகளிலும், அரைகுறை கொட்டில்களிலும் காலை, மாலை நேரப் பாடசாலையாக வாடகை மனநிலையில் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் ஏனோதானோ என்று இயங்கி வருகின்றன.

அத்தனைக்கும் அரச சார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. அது தொடர்பாக 'மாஸ்டர் பிளன்' கூட தயாரிக்கப்பட்டு விட்டது. காணிப் பிரச்சினை இல்லாத பாடசாலைகூட இன்னும் கட்டப்படவில்லை. ஏனென்று புரியவில்லை.

புதிய இடத்திலோ, பழைய இடத்திலோ பாடசாலைகள் எழுப்பப்பட்டு ஒரு நேரப் பாடசாலையாக எப்போது இப்பாடசாலை முறைமை மாறுகிறதோ அன்றுதான் ஓரளவு நிலைமை வழமைக்குத் திரும்புமென எதிர்பார்க்கப்படுகிறது. அதுவரை பாதிக்கப்பட்ட பாடசாலையோ, அது தற்காலிகமாக இயங்கும் மற்றப் பாடசாலையோ சீராக இயங்கமாட்டாது. ஆழிப்பேரலை பாடசாலையை மட்டும் பாதிக்கவில்லை. மாறாக சமூகக் கட்டமைப்பையே சீரழித்துள்ளது. பாதிக்கப்பட்ட மாணவர், ஆசிரியர், பெற்றோர் முறையான சீரான உளநிலையில் இல்லை. சுனாமியால் ஏற்பட்ட உயிரிழப்பு, சொத்திழப்புக்களை விட உளப்பாதிப்பு பாரதூரமானது. இலங்கையில் 2 கோடி மக்களுக்கு ஆக 30 உளவள மருத்துவர்களே இருப்பதாக ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

சுனாமிப் பாதிப்புகளிலிருந்து பாடசாலைகளையும் அதனுடன் இணைந்த சமூகப் பின்னணியையும் பொருத்தமான முறையில் முன்னேறுவதற்கு உவப்பான மனித வளம் தேவைப்படுகிறது. உதாரணமாகச் செவிலித்தாய் பாடசாலைகளையும், அதனுடன் இணைந்த சமூகப் பின்னணியையும் பொருத்தமான முறையில் முன்னேற்றுவதற்கு உவப்பான மனிதவளம் தேவைப்படுகிறது. உதாரணமாக செவிலித்தாய், பல்கலைகழக மாணவர், சமூக நிறுவன உறுப்பினர், பாடசாலை மட்ட உளவள ஆளணியினர், பாடசாலை ஆளணியினர், என அடுக்கிக் கொண்டு போகலாம்.

சுனாமியால் 5785 சிறுவர்கள் பெற்றோரை இழந்துள்ளனர். அவர்களில் 3689பேர் வடக்குக்கிழக்கைச் சேர்ந்தவர்கள். தாயை மட்டும் இழந்தவர்கள் 1288, தந்தையை மட்டும் இழந்தவர்கள் 1995, தாயையும், தந்தையையும் இழந்தவர்கள் 406பேர். இத்தகைய சிறுவர்களுக்கு செவிலித்தாயின் (community mother) அரவணைப்பு ஊளவியல் ரீதியில் அத்தியாவசியமாகும். அவர்களே இவர்களுடன் நெருங்கிப் பழகி உரிமையுடன் அன்பு செலுத்தி வழிக்குக் கொண்டுவர முடியும். மாணவனது உளநிலை யைச் சீராக்காத வரை எந்தப் பாடசாலை முகாமைத்துவமும் வீணாய்ப்போ குமென்பது தெரிந்ததே.

### ஆசிரியர் தட்டுப்பாடு

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் 23195 ஆசிரியர்களுக்கு ஆளணிக் கோப்பு (cadre) இடமளிக்கிறது. ஆனால் இருப்பதோ 19873 ஆசிரியர்கள். எனவே மேலும் 3322 தமிழ் மொழிமூல ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இவற்றைப் பட்டதாரிகள் 2400 பேரை நிரந்தரமாக உள்ளீர்ப்பதன் மூலம் தீர்க்க முடியுமென கல்வியமைச்சு கூறுகின்றது.

இதேவேளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கூறுகையில் உளவங்கியால் அங்கீகரிக்கப்பட்ட 3000 ஆசிரியர் நியமனங்களை 2000 ம் ஆண்டில் நியமித்திருந்தால் இம் மதிப்பீடு சரியாக இருந்திருக்கும். ஆனால் அதனை 2005 வரை இழுத்தடிக்க அதனிடையில் 2500பேர் ஓய்வில் சென்று விட்டனர். ஆதலால் ஆசிரியர் தட்டுப்பாடு 6000 பேர் என்று கூறுகிறார் அவர். எனவே ஆசிரியர்களை அந்தந்த வருடத்தில் நியமிக்கப்படும் பட்சத்தில் பற்றாக்குறை என்பது பெரிதாகக் காட்டாது.

### தொண்டர் ஆசிரியர்

நாட்டிலுள்ள தொண்டர் ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பிலுள்ள தகமைகளைப் பூர்த்தி செய்பவார்களாகவிருந்தால் அவர்களை நிரந்தர ஆளணிக்குள் உங்வாங்குவது நியமாகாத ஒரு காரியமாகும்.

கஷ்டம், அதிகஷ்டம் பிரதேச பாடசாலைகளில் பணியாற்றிய தொண்டராசிரியர்களுக்கு நடைபெற்று வந்த நேர்முகப் பரீட்சை நிறுத்தப்பட்டுள்ளது. இது உடனடியாக நடத்தப் படுவதுடன் எஞ்சியுள்ள தொண்டராசிரியர்களையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் அவசியம் ஆகும்.

இதே போன்று 2001இல் பணியாற்றிய 203 ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்கியது போன்று எஞ்சிய 561 ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களையும் நிரந்தரமாக்கினால் வடகிழக்கில் நிலவும் 2000

**வி.ரீ.சகாதேவராஜா**

ஆங்கில ஆசிரியர்கள் தட்டுப்பாடு ஓரளவு நிவர்த்தியாக்கப்படலாம்.

### பதில்கடமை

நாட்டில் பதில் கடமை புரியும் அதிபர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் சமாச்சாரம் இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. போர்ச் சூழல் மற்றும் சுனாமிச் சூழல் போன்ற அனர்த்த நிலமைகளில் உயிரைத் துச்சமென மதித்து தொண்டாற்றிய இவ்வணியினர் உரிய நேர்முகப் பரீட்சை மூலம் நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

வடகிழக்கின் பெரும்பாலான கிராமப் பாடசாலைகள் பதில் அதிபர்களாலேயே நிருவகிக்கப்பட்டு வருகின்றன. அதிபர் பரீட்சை வைக்காதது அரசின் தவறு. எனவே அவர்களை நிரந்தரமாக்குதல் பொருத்தமாகும். வடகிழக்கில் கடந்த 8-10 வருடங்களாக இலங்கை கல்வி நிருவாக சேவைக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகள் நிரப்பப்படாமலே இருந்து வந்துள்ளன.

வடகிழக்கிலுள்ள 24 கல்வி வலயங்களிலும் சுனார் 320 கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் கடந்த 10 வருடங்களாகச் சேவையாற்றி வருகின்றனர். கடந்த 10 வருடங்களாக எதுவித மேலதிக கொடுப்பனவும் வழங்காமல் சேவையைப் பெற்று விட்டு இன்னமும் அவர்களை நிரந்தர நியமனம் வழங்காமல் அலைக்கழித்து வருவது ஆரோக்கியமான கல்வி மேம்பட்டுக்கு வழிவகுக்காது.

எனவே தகுதியுடையவர்களை உரிய நேர்முகப் பரீட்சை மூலம் நிரந்தரமாக்க வேண்டியது இன்றைய சூழலில் அவசியமாகும். இதேவேளை இ.க.நி சேவை தரம்-1 அதிகாரி வடகிழக்கில் ஒருவரே உள்ளார். அண்மையில் பதவியுயர்வு பெற்ற தரம்-1 ஐச் சேர்ந்த 28 அதிகாரிகளிலுள் ஒருவர் கூட வடகிழக்கில் இல்லை. எனவே 46 அதிகாரிகளையும் தரம்-1 ற்கு இணைத்தல் அவசியம்.

இலங்கையில் தரம் 1 அதிகாரிகளாது ஆளணி 200 ஆகும். ஆனால் இருப்பது ஆக 06. அதாவது இன்னும் 194 தரம் 1 கல்வி அதிகாரிகள் தட்டுப்பாடாகவுள்ளது. தரம்-III இல் நிலவும் 625 வெற்றிடங்களும் நிரப்பப்பட வேண்டும். அதிபர் சேவை தரம்-1 ஐச் சேர்ந்த 96 பேருக்கு சேவை மூப்புதிறமை என்ற அடிப்படையில் கல்வி நிருவாக சேவைக்கு பதவியுயர்வு வழங்கும் முறைமை துரிதப்படுத்த வேண்டும். இ.க.நி சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்ற 72 பேருக்கான நியமனமும் துரிதப் படுத்தப் படவேண்டும்.

### சுனாமி நிவாரணம்

சுனாமியால் வடகிழக்கைச் சேர்ந்த 37 ஆசிரியர்கள் பலியாகியுள்ளனர். 1567 மாணவர்களும் பலியாகினர். இவர்களுக்கு கல்வித் திணைக்களம் சார்பாக எந்தவொரு நிவாரணமும் வழங்கப்படவில்லையென கூறப்படுகிறது. இதைவிடப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு 1வருட சுனாமி முற்பணமோ, சொத்துக் கடனோ இதுவரை வழங்கப்படவில்லை.

ஆனால் அரசின் 5000ரூபா விஷேட கொடுப்பனவு, உணவு நிவாரண பங்கீட்டு அட்டை என்பன நிறுத்தப்பட்டுள்ளது. ''யுனிசெப்'' சேகரித்த விண்ணப்பப் படிவங்களுக்குக் கூட நிவாரணம் வழங்கப்படவில்லை.

கல்விக் கட்டமைப்பில் பிரதான கூறு என்று சொல்லப்படும் ஆசிரிய சமூகம் நிவாரணமின்றி அல்லல்படுவதை அரசு பாராமுகமாக விட்டு விடக்கூடாது. எனவே மொத்தத்தில் வட கிழக்கு கல்விப் புலம் வழமை நிலமைக்குத் திரும்ப குறைந்தது இரு வருடகாலமாவது எடுக்குமென்பது சொல்லாமலே புரிந்திருக்கும். எனவே சம்பந்தப்பட்டவர்கள் அக்கறையுடன் நடப்பின் கால அளவைக் குறைக்க முடியுமென்பது நம்பிக்கை.

## பிரான்ஸ் நாட்டுக்கு கடத்த முயன்ற புராதன சிலைகள், நாணயங்கள் பறிமுதல்

சென்னையில் இருந்து பிரான்ஸ் நாட்டிற்கு கூரியர் தபால் மூலம் கடத்த இருந்த 25 புராதன சிலைகள் விமான நிலைய சுங்கத்துறையினரால் கைப்பற்றப்பட்டன. இவை பல கோடி ரூபாய் மதிப்புள்ளவை என்று கூறப்படுகின்றது. மேலும் அசோகர் மற்றும் மொகலாயர் காலத்து நாணயங்களும் சிக்கியுள்ளன. சென்னை சர்வதேச விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் நடத்திய சோதனையில் விலை மதிப்பு மிக்க மிகப் பழைமையான வெண்கலம் மற்றும் யானைத்தந்தங்களால் ஆன குழல் ஊதும் வேணுகோபால், விஷ்ணு, அனுமன், அன்னபூ ரணி, சிவன், போதிசத்தூர், கணேசர், குபேரன், தியான புத்தர் உள்ளிட்ட 25 சுவாமி சிலைகளைக் கைப்பற்றியுள்ளனர்.

இவை அனைத்தும் மூன்று பொதிகளாக பிரான்ஸ் நாட்டிற்கு கூரியர் தபால் மூலம் கடத்த இருந்த போது அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளன. மூன்று பார்சல்களும் சென்னையில் இருந்து பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவரால் பிரான்ஸ் நாட்டில் உள்ள வெவ்வேறு முகவரிகளுக்கு அனுப்பப்பட இருந்தன.

பறிமுதல் செய்யப்பட்ட சிலைகள் அனைத்தும் சென்னையில் உள்ள ஒரு கலைப் பொருட்கள் விற்கும் கடையில் இருந்து 21ஆயிரம் ரூபாய்க்கு வழங்கப்பட்டதாக ஆவணங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. பொருட்கள் வாங்கிய கடைக்கு பணம் கிரெடிட் கார்ட் மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து குறிப்பிட்ட கலைப் பொருட்கள் விற்பனைக் கடையில் சுங்கத்துறை அதிகாரிகள் நடத்திய விசாரணையில் அங்கு கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களுக்கும் கூரியர் மூலம் கடத்தப்பட்ட சிலைகளுக்கும் சம்பந்தம் இல்லை எனத் தெரிய வந்தது.



எனவே போலி ஆவணங்கள் மூலம் நாட்டின் பழைமையான சிலைகள் பிரான்ஸ் நாட்டிற்குக் கடத்த இருந்த விடயம் வெளிச்சத்திற்கு வந்தது. மீட்கப்பட்ட தொல்லியல் துறை அதிகாரிகள் இவை அனைத்தும் 18 மற்றும் 19ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்றுள்ளனர்.

மீட்கப்பட்ட சிலைகள் அனைத்தும் சர்வதேச சந்தையில் பல கோடி ரூபாய் மதிப்பு உள்ளவை. இந்தக் கடத்தல் குறித்த விசாரணையில் நாட்டில் உள்ள புராதன சிலை மற்றும் பொருட்களை தவறான முறையில் கடத்தி விற்பனை செய்யும் கும்பல் குறித்து தகவல்கள் கிடைத்துள்ளன.

இதற்கிடையே சுங்கத்து றை அதிகாரிகளால் சமீபத்தில் நடாத்திய ஒரு சோதனையில் இந்தியாவில் இருந்து வெளிநா ட்டிற்கு கடத்த இருந்த அசோகர் மற்றும் மொகலாயர் காலத்து நாணயங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

வார இதழ்

## கலியுக ராமன்

மந்திரங்களால் மாயம் செய்து
யந்திரங்களால் யாகம் செய்து
தந்திரமாய்ப் பெற - நான்
மந்திரவாதி அல்ல......!

வார்த்தைகளால் வசீகரித்து
வாழ்க்கையை வசியமாக்கி
வஞ்சனையைப் பெற - நான்
அரசியல்வாதி அல்ல....!

பசப்பு வார்த்தைகளால்
பாசங்கு காட்டி விட்டு - பாரினிலே
பரிதவிக்கவிட - நான்
காமுகன் அல்ல....!

உயிருக்குயிராய் நேசித்து
உள்ளத்திலே பூஜித்து - உன்னையே
கைப்பிடிக்க நினைக்கும் - நான்
''கலியுக ராமன்''

**அ.ரவி, பூம்புகார் வீதி**
**மட்டக்களப்பு.**

## சிறை

தாயின் வயிற்றில்
ஐயிரண்டு மாதம் சிறை!
தரையில் தவழ்கையில்
கட்டிய தொட்டிலில் சிறை!
காளையாகும் போது
கன்னி மனதில் சிறை!
சம்சாரத்தில்
சகிக்க முடியாத சிறை!
தகப்பனாகும் போது
பிள்ளையின் சிறை!
வேலை செய்யும் போது
முதலாளியின் சிறை!
இறக்கும் போது
தட்டியில் சிறை!
மண்ணில் புதைக்கும் போது
கல்லறையில் சிறை!

**ம.குபேரன்**
**மண்டூர் -01**

## வேதனையின் விம்பங்கள்

கடல் அலை
ஊரைச் சுற்றி வளைத்ததால்
உறவுகளை இழந்தேன் ........
உடமைகளை இழந்தேன் .........
உறக்கத்தை இழந்தேன் ........
உணவை இழந்தேன் ........
நான் மட்டும்
ஏன் வீதியில்
உயிரோடு
வாழ வேண்டும்
மீண்டும் இன்னுமொரு
சுனாமி வந்து
என்னையும்
அழைத்துச் செல்லாதா?

**ந.துரைராசசிங்கம்**
**கோட்டைக்கல்லாறு-01.**

## தாயக தாகம்

ரத்தத்தில் படிந்த
முத்தங்கள் போல் - என்
சித்தத்தில் சொல்லிய
வார்த்தைகள்
சொத்தான தமிழீழம்.
எத்தனை ஜென்மங்கள்
செத்துப் போயினும்
சுத்தமான தமிழீழம்
செத்துப் போகுமோ?
தத்தளிக்கும் தமிழீழம்
பெற்றெடுத்த மாவடம்
மண்டியிட்டு மானத்தை
விற்றிடாது
துப்பாக்கியின் ரவைகள்
துளைத்த போதும்
தண்ணீர்த் தாகம் வராது
தாயகத் தாகம் தான்
வந்து வந்து சேரும்
'கருவறையின் தாகம்
கண்ணியமான மாவடம்
தமிழர்கள் நம் தாகம்
தமிழீழத் தாயகம்'
அதுவோ ஒரு போதும்
ஓயவே ஓயாது
ஓங்கியோங்கி
ஒலித்துக் கொண்டே
இருக்கும்.

**மகா-சதீஸ்**
**துறைநீலாவணை.**

## ஏ(ன்) மாற்றம்

மனமுள்ளவன் என்னுள்ளே
மனமுடிக்குமளவு ஸ்பரிசம்
செய்தேன்
என் அடிமனதிலிருந்து
தந்தேன் என் காதலை
ஏன் நடித்தாய்
காதலிப்பது போல்
ஏன் உடைத்தாய்
என் இதயத்தில் கட்டிய
கோட்டையை!
நீ மறக்க நினைத்து
தூக்கி வீசியது - என்னை அல்ல
நம் காதலைத்தான்.
இருந்தாலும் நீ ஒரு
கொடை வள்ளல் தான்
ஏன் என்றால் எனக்காக
நரகம் ஒன்றைத் தந்தவனல்லவா?

**ச.கவிதா,**
**ஏறாவூர் - 05.**

## மரணத்தைத் தேடி...

உன்னை நினைத்து
என்னை மறந்து
கண்களை மூடி
கனவு கண்டு
கண்ணீர் சிந்தி
கருணை பெற்று
கடமை உணர்ந்து
கதறி அழுது
உன்னை உருக்கமாய் நோக்கி
உயிரை விடமுன்
உன்னைக் கேட்டேன்.
உரக்கச் சொன்னாய் - நீ
வேண்டாமென்று -
அந்நிசப்தத்தைக்
கூறாமல் இருந்தால் நானோ
உன் மடியில்
அந்நிசப்தம் நிஜமான
நிழலாக நின்றதால்
மரணத்தைத் தேடியவனாக
நானோ இறைவன்
அடியில்........

**"கவிப் புயல்"**
**எஸ்.எம்.றம்ஸி**
**காத்தான்குடி.**

## உரிமை

பட்டதாரிப் பெண் தான்
நான்!
எனக்கும் இங்கு
விலைபேசி முடிவாயிற்று
நான் வாய் திறக்க
முடியாது!
என் குடும்பமானம்
போய் விடுமாம்
எனக்கான உரிமைக்காய்
நான் வாதிட்டால்
நேற்று வரையில்
பெண்ணுரிமை பேசிய
என் வாயும் இன்றுடன்
கட்டப்பட்டாகி விட்டது.!

**வே.தமருகா றொபட்**
**மட்.கல்லடி வேலூர்.**

## உலகமறியாத நட்பு

உலகமறிந்த நண்பர்களான
கர்ணனையும்,
துரியோதனனையும்விட!
நமது நட்பு மேலானது
என்று உணர்ந்த போது,
நீ தமிழையும்,
தமிழ் மண்ணையும்
நேசித்த வேளை
நமது நட்பு
உலகம் அறியாததாகிவிட்டது.
அப்போது இருந்து
என் உள்ளக் கிடங்கில்
பல உறவுகளுக்கு
இடம் இருந்தாலும்
நட்பு என்ற உறவிற்கு
இடமே இல்லை.
காரணம்......
என் உள்ளக் கிடங்கில்
நீ விட்டுச் சென்ற
நட்பின் நினைவுச் சுவடே
போதும்.

**க.கமலதாசன்**
**வந்தாறுமூலை.**

## பட்டம் தீட்டிய பட்டம்...!

பட்டம் பறக்கிறது
பட்டத்துடன் எங்களது
கொட்டாவியும் பறக்கிறது..

விட்டிருக்கிறார்கள்
எங்களை வெளியில்
விட்டதாரிகளாய்....
கைவிட்டதாரிகளாய்......!

பல படிக்கட்டுகள்
ஏறுகிறோம்.....
பயனொன்றும் இல்லை
நேர்முகம் எங்களுக்கு
நேரடியான நெத்தியடி!

பரவாயில்லை
எவரிலும் குற்றமில்லை
எங்களில் தான்
குற்றங்கள்
குவிந்து கிடக்கின்றன!

தகுதி அற்ற
பட்டதாரிகளாக்கும் நாங்கள்
அதனால் தானே
தள்ளி வைக்கப்படுகிறோம்.
புள்ளி இல்லாமலே போகிறோம்!

இருந்தும் என்ன...
விதியோடு எங்கள்
மதியை மோதவிட்டு
என்றோ ஒரு நாள்
விடிவு காண்போம்.

**-வெல்லபதியான்-**

## புது நிஜங்கள்

தாறாப்பிட்டியும்
பாக்குமரப் பட்டையில்
பசியாறும் பொழுதுகளும்
இன்னும்.....
எம் மனக் கண்முன்னே!

விளை நிலப் பறவும்
குழு குழு தென்றலில்
அசந்து தூங்கும்
மதியத்து நேரங்களும்
எங்களின்......
பொர்ணமிப் பொழுதுகளாய்...

அந்திந்த நேரமும்,
குளத்துக் குளியலில்
முகத்தவரச் சத்தையும்
செப்பலிக் கோர்வையில்
சட்டி நிரப்பும் சேதியும்
இன்னும்....
மறக்கடிக்கப்பட்டதாய்....

இரவுகள் போடும்
புதிர்களின் நீளமும்,
நிலாச் சோறு சமைத்த
பற்றைக் காடுகளும்
அழிவுண்டு போனதாய்.....

அதனால் தான் இயற்கையின்
சில்மிசம் தொலைந்து
செயற்கையின் ரணங்கள்
சீண்டிக் கிடக்கிறது
எம்மனங்களின்
கொதிப்புகளை வருடி....

**செயின் தம்பி ஸியாம்**
**கல்முனை-06.**

## பிரிவு

சொந்தங்களை விட்டுப் பிரியாமல்
சொருபமாய்ச் சேர்ந்து வாழ்ந்தேன்
சொந்தங்களைப் பிரிந்த
இவ்வேளையில்
சொல்லியழா வேதனையால்
செயல் மறந்து துடிக்கின்றேன்.

இல்லத்தில் இனிதாக இன்புற்ற
இனியவைகளை நினைக்கையிலே
மனசெல்லாம் மகிழ்கின்றது -
ஆனால்
துடிக்கின்றேன் பிரிவினாலே.....!

**எம்.கிருசாந்தி**
**கோடைமேடு எருவில்.**



# கவிநாதம்

## அன்றும்-இன்றும்

படித்தேன் அன்று
பரிதவிக்கிறேன் இன்று
பட்டம் பெற்றதால்
சந்தோசப் பட்டேன் அன்று
பதவி பெற்றதால்
துயரப் படுகிறேன் இன்று
ஆசைக் கனவுகளை
வளர்த்தேன் அன்று -
அத்தனையும்
பொடியாய் போனது இன்று
உறவுகளுடன் உறவாடினேன்
அன்று
உறவுகளைப் பிரிந்து
தவிக்கிறேன் இன்று
ஊரை நினைக்கையில்
வெறுத்தது அன்று
ஊரைப் பிரிந்து தவிக்கையில்
பிடிக்கிறது இன்று
நட்புகளுடன் விளையாடி
மகிழ்ந்தது அன்று
நட்பை நினைத்து
கண்ணீர் விடுவது இன்று
உன்னைப் பார்த்ததில்
வெறுத்தது அன்று
உன்னைப் பார்க்காததில்
ஊமையானது உன் மனது
இன்று
வாழ்க்கையே வசந்தமானது
அன்று
வாழ்க்கையே வெறுக்கின்றது
இன்று
என்னை நானே விரும்பியது
அன்று
என்னையே வெறுக்கிறேன்
இன்று
கடவுள் பொய் என்றது அன்று
கடவுளே என்கிறேன்
இன்று........!

**வி.ஜெசி**
**செங்கலடி.**

## காவியமாகும் தேசியம்

எங்கள் தேசம் தழைத்திடவே
ஒற்றுமையாய் யாவரும்
இணைந்திடவே
அமைதி என்னும் நிலைத்திடவே
ஆன்மீக உணர்வு எழுந்திடவே
அக்கறை கொண்டு விழித்தெழுவீர்
அன்புடன் நாளும் பணி புரிவீர்.

அறிவுப் பூக்களின் வளர்வினிலே
எங்கள் தேசிய உணர்வு
மலர்ந்திடுமே
தேசம் தலைவரை பெற்றிடவே
நேசக் கரங்கள் ஒன்றாய்
இணைந்திடவே
என்றும், எதிலும் உரிமை
கிடைத்திடுமே.

எங்கள் தலைவன் வழியினிலே
அன்பு கசியும் விழியினிலே
கருணை பொழியும் ஒளியினிலே
தமிழரின் பயணம்
தொடர்கதையினிலே
தமிழீழமும் வெற்றி வாகை
சூடிடுமே

தமிழர் ஆண்ட தேசமதில்
கயவனின் கொடுமைகள்
நிலைத்திடுமா?
காலங்கள் பல கடந்திடினும்,
கண்மணித் தலைவரின்
நல்லுணர்வு
காவியமாக என்றும் ஒளிர்ந்திடுமே.

**ச.சந்திமதி,**
**மகிழவட்டவான்,**
**ஆயித்தியமலை.**

## சரியா? தப்பா?



பெண் ஒன்று
கண்டேன் நான்
யாரும் காணாத
பெண்ணொன்றை!

ஏமாற்றும்
ஆண்களுக்கோர்
முற்றுப் புள்ளி!
அதனை நானும்
தொடர் ......... புள்ளி
பெண்ணைக் கண்டேன்!

பதினாறு வயதுப் புள்ளி
மங்கையவள்!
பருவத் தோழனை
மாற்றி! மாற்றியதில்
பருவ முகத்தில்
மாறி மாறி
பால் வடியும்
பெண்ணைக் கண்டேன்.

படிப்பதற்கோர்
மாற்று இடம்!
உனது வேலைக்கோ
சொந்த இடம்!
படத்தட்டு போட்டு
பல மணி நேரம்
பாடம் படித்த
பெண்ணைக் கண்டேன்!

பரம்பரை அலகு கடத்தப்படுதல்
உன்னில்
கண்டேன்!
எப்பெண் என்னவென்று
யார் கண்டார்!
தப்பென்று - நீ
நினைத்தால்
தலை நிமிர்வாய்!
சரி என்று - நீ
நினைத்தால்
உனைத் தேடி
வருவார் ஊரார்....?

**வெளியூரான்**
**எஸ்.பீ.தயா.**

## வேங்கைகள் வீழ்வதில்லை

எங்கள் தமிழினம் வாடுகையில்
சுயநல வாழ்க்கைக்காய்
சோரம் போகும் பாவிகளே
தறவிகளும் எம்மை
தாவு செய்கையில்
துணையாய் நீங்கள் நிற்பது ஏன்?
தாய விடுதலை வேண்டும் என்ற
தயர் கண்டு ஓடாமல்
தமது இலட்சியப் பயணம்
தொடர வேண்டும் என்ற
துச்சமாய் தன்னுயிரை
துறக்கின்ற தமிழன் எங்கே?
சோற்றுக்கும், சொகுசான
வாழ்விற்கும் அடிமையாய்
எதிரியிடம் வாலாட்டும்
விலங்கு போல் வாழும்
நீங்கள் எங்கே?
வீரமாய் போர் செய்து
வெற்றி பல கண்டவர் முன்
நேர் நின்று மோதாமல்
கூலிக்காய் மாரடிக்கும்
கூட்டத்துடன் நீ சேர்ந்து
கோழையாய் வாழ்வது ஏன்?
கொள்கை நெறி தவறாத
தலைவன் தமிழருக்குண்டு
தமிழர் தாகம் தீரும் நாளும்
விரைவிலுண்டு
வேங்கைகள் வீழ்வதில்லை
வீரமும் குறைவதில்லை.

**பாண்டியூர்**
**புலேந்திரா.**

# கல்லோயாவின் சிங்கள குடியேற்றமும்
# தமிழ் மக்களின் முதல் ஆயுதப் போரும்

த.தயாளினி
மட்டக்களப்பு.

கல்லோயா குடியேற்றத் திட்டம் அம்பாறையில் 1949ம் ஆண்டு ஆரம்பமானது. பிரிட்டிஸ் ஆட்சியாளர்கள் சிங்கள, தமிழ் தேசங்களை ஒன்றாக இணைத்து இலங்கைத்தீவின் ஆட்சி அதிகாரத்தை சிங்கள ஆளும் வர்க்கத்தின் கைகளில் ஒப்படைத்து விட்டுச் சென்றனர். இந்த ஆட்சி அதிகாரம் தங்களுடைய கைக்குள் கிடைத்தவுடனேயே இலங்கைத்தீவு முழுவதையும் சிங்கள பௌத்த நாடாக்கும் எண்ணமும், இலக்கும் சிங்கள ஆளும் வர்க்கத்திடம் தோன்றிவிட்டது.

தமிழ் பேசும் மக்களது தாயகப் பிரதேசமான அம்பாறையில் சிங்களக் குடியேற்றம் உருவான தன் பிரதிபலிப்பாகவே தமிழர்களது முதல் ஆயுதப்போரும் மூண்டிருந்தது. அம்பாறையில் ஆரம்பமான குடியேற்றம், யாழ்குடா நாடுவரை இன்று நீண்டுள்ளது. இருந்தும் அது பயனளிக்கவில்லை. குடியேற்றத்திட்டம் என்பது தமிழ் பேசும் மக்களது நிலங்களை ஆக்கிரமிப்பது என்பதும் டி.எஸ்.சேனநாயக்கா முதல் இன்று வரையுள்ள சிங்கள அரசியல் தலைவர்களால் கட்டிக் காக்கப்பட்டு வரும் ஒரு கொள்கையாகும்.

கல்லோயா அபிவிருத்தித் திட்ட பொன்விழா 1999ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28, 29ம் திகதிகளில் பௌத்த பேரினவாதிகள் கொண்டாடி தங்களது சுயரூபத்தையும் உணர்த்தியிருந்தன. அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையினுள் இந்த சிங்கள குடியேற்றத் திட்டம் கல்லோயாவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இலங்கைத் தீவு முழுவதையும் சிங்கள மயமாக்கும் இறுதி இலக்கை எட்டுவதற்கு தமிழ் பேசும் தலைமைகள் பங்களிப்புச் செய்ய வைக்கும் சாணக்கியத்தை சிங்கள தலைமைகள் கையாண்டனர்.

அன்றைய பிரதமரான டி.எஸ்.சேனநாயக்காவின் தூரப் பார்வையாக இருந்தவை. அதாவது இலங்கைத் தீவை சிங்கள நாடாக மாற்ற வேண்டுமானால், தமிழ் பேசும் மக்களது தனித்துவத்தை இல்லாது ஒழிக்க வேண்டும். பின்னர் படிப்படியாக இனமாற்றத்துக்கு அவர்களை உள்ளாக்கி விடலாம் என்பதேயாகும். இதனை ஈடேற்றுவதற்கு அவர் கையில் எடுத்த மிக முக்கியமான ஆயுதம் தான் இந்தச் சிங்கள குடியேற்றத் திட்டமாகும்.

வடகிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற மூலமாகச் சிங்களத் தலைமைகள் பின்வரும் பலன்களை விரும்பி நின்றன. அதாவது 'பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களது பிரதிநிதித்துவ விகிதாசாரத்தைச் சுருக்குதலாகும். அதன் மூலம் சட்ட வாக்கத்தில் பங்கு பற்றாது தடுத்தல் மற்றது தமிழ் பேசும் மக்களது தனித்துவத்தை அழித்தல். வடகிழக்கில் தமிழ் பேசும் மக்களைச் சிறுபான்மையினராக்கி படிப்படியாக இன மாற்றத்துக்குள்ளாக்குதல் போன்றவையாகும். 'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்' ஒரு தேசிய இனத்துக்கு நிலம் இருந்தால்தான் பலத்தோடும், தனித்துவத்தோடும் வாழமுடியும். இதனை நன்கு உணர்ந்தே தமிழ் பேசும் மக்களது தாயகப் பிரதேசங்களைக் குறி வைத்துத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு 1949இல் அடிகோலப்பட்டது என்பது உண்மையாகும். அன்றைய பிரதமரான டி.எஸ். சேனநாயக்காவிடம் பிரிட்டிஷார் இந்நாட்டின் அபிவிருத்திக்கு எத்தகைய உதவிகளைச் செய்ய வேண்டும் எனக் கேட்டபோது வரண்ட பிரதேசங்களை வளமுள்ள விவசாய அபிவிருத்திக்கு ஏற்ற பிரதேசங்களாக மாற்ற வேண்டும் என்று பிரதமர் கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து பிரிட்டிஷார் ஒரு நிபுணத்துவரை இலங்கைக்கு அனுப்பி வைத்தனர். நாடு பூராகவும் ஆய்வுகளை மேற்கொண்ட குழுவினர் வட மத்திய மாகாணத்திலுள்ள மின்னேரியாக் குளத்தை புனருத்தாரணம் செய்வதே பொருத்தம் என்று சிபார்சு செய்தனர். ஆனால் அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் தமிழ் பேசும் மக்களது தாயகப் பிரதேசத்தைக் குறிவைத்த சேனாநாயக்காவுக்கு பிரிட்டிஷ் குழுவினரின் சிபார்சு பிடித்தனமாக அமையவில்லை. இங்கு குடியேற்றத் திட்டங்களை நடத்துவதில் எந்த வித பயனும் இருக்காது என்று இவர் கருதினர். காரணம் மின்னேரியாத் திட்டத்திலுள்ள நிலம் சிங்களப் பிரதேசத்தில்தான் இருந்தது.


இதன் பின்னர் பிரிட்டனில் இருந்து மற்றுமொரு குழுவினர் இலங்கைக்கு வந்து சேர்ந்தனர். சேனநாயக்காவின் அபிலாசைகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப ஆய்வுகளை நடத்தினார்கள். கல்லோயாத் திட்டத்தின் பிரதான நகரமாக அம்பாறை தேர்ந்தெடுக்கப்பட்டது. அம்பாறை அப்போது அழகிய தமிழ்க் கிராமமாகத் திகழ்ந்தது. அம்பாறை என்பது 'அம்-அழகிய, பாறை-கல்" என்று அர்த்தம் ஆகும். மற்றும் பட்டிப்பளை ஆறு என்ற பெயரில் ஊவா மாகாணத்தின் தென்பகுதிக் குன்றுகளிலிருந்து ஊற்றெடுத்து வரும் ஒரு சிற்றருவியை மறித்து அணைகட்டி நீரைத் தேக்க முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கே கல்லோயாத் திட்டம் என பெயரிடப்பட்டது.

தொடர்ந்து காடுகள் அழிக்கப்பட்டன. அழிக்கப்பட்டு களனிகள் உருவாக்கப்பட்டன. கொலனிகள் இலக்கமிடப்பட்டு சிங்கள குடியேற்ற வாசிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இதனை உணர்ந்த அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் சிலர் கண்டித்து குரல் எழுப்பியபோது பிரிட்டிஷ்காரர்களது உதவிகள் தடைப்படுமோ? என்று நினைத்து அரசாங்கமானது சில பகுதிகளை தமிழ் மக்களுக்கு ஒதுக்கித்தர முன்வந்தனர். மண்டூர் மத்திய முகாம் போன்ற பகுதிகளில் தமிழர்களுக்கென்று காணிகள் ஒதுக்கப்பட்டன. ஆனால் இது ஒரு கண் துடைப்பு நடவடிக்கையாகவே இருந்தது. கல்லோயாவிலிருந்து பாய்ந்து வரும் நீரால் முக்கிய பயன்களைப் பெறும் பகுதிகளில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். இக்குடியேற்ற சிங்கள வாசிகள் அம்பாறையிலுள்ள தமிழ் பேசும் மக்களை அச்சுறுத்தும் நிலையும் விரைவில் தோன்றியது.

1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி சிறிலங்காவின் பிரதமராகவிருந்த பண்டாரநாயக்காவினால் நாடாளுமன்றத்தில் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனை உணர்ந்த தமிழரசுக் கட்சி அன்றைய தினம் பாராளுமன்றத்திற்கு எதிரே காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்தனர். இந்த சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்கள் பௌத்த மதகுரு தலையிலே வந்த குண்டர்களால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு இரத்தம் சிந்த வைக்கப்பட்டனர். இந்த தாக்குதல் நடைபெற்ற போது பிரதமர் பண்டாரநாயக்கா நாடாளுமன்ற மேல்மாடியில் நின்று சுங்கானை புகைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தார். இந்த சந்தியாக்கிரகிகள் தாக்கப்பட்ட போது அன்று மாலை கொழும்பு புறக்கோட்டை, மருதானை போன்ற பகுதிகளில் தமிழர்களதும், முஸ்லிம்களினதும் கடைகள் உடைக்கப்பட்டு சூறையாடப்பட்டன.

இந்த நடவடிக்கை நாடு முழுவதிலும் பரவவில்லையாயினும் கல்லோயாப் பள்ளத்தாக்கில் பரவியிருந்தது. அங்கு குடியேறியிருந்த சிங்களவர்கள் தமிழ் மக்களைத் தாக்கினார்கள். அம்பாறை நகரில் இருந்த தமிழ் ஊழியர்கள், அதிகாரிகள் மற்றும் தமிழர்கள் சிங்கள குடியேற்ற வாசிகளால் மிரட்டப்பட்டு தமிழர்களது கடைகளும் சூறையாடப்பட்டன.

அம்பாறையிலிருந்து சிங்களக் குடியேற்றவாசிகள் தாக்குதலை நடத்தப் புறப்பட்டனர். வாவியைக் கடந்து சென்று துறைநீலாணை மக்களைக் கொன்று குவிப்பதே அவர்களது நோக்கமாக இருந்தது.



அரச வாகனங்களை எடுத்துக் கொண்டு கத்திகள், வாள்கள், பொல்லுகள், இரும்புக் கம்பிகள் போன்ற ஆயுதங்களோடு தாக்குதல் நடத்தப் புறப்பட்டனர். வாவியைக் கடந்ததும் மண்டூர் செல்வற்கான சந்தி இருக்கின்றது. அந்தச் சந்தியில் கடையொன்று இருந்தது. தமிழர்களை அழிக்கச் செல்லும் சிங்களக்காடையர் கூட்டத்தை உபசரிப்பதற்காகவே பல ஆடுகளை வெட்டி கறி சமைக்க ஏற்பாடுகள் நடந்தன. இதனை அறிந்த துறைநீலாவணையிலுள்ள தமிழர்கள் பொலிசார் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளப்போவதில்லை என்பதும் தங்களுக்குத் தெரிந்த விடயமே. இதனை உணர்ந்து தங்கள் பாதுகாப்புக்கு ஒரு ஊர்காவல் படையொன்றை உடனடியாக அமைத்தார்கள். தம்மிடமிருந்த சில துப்பாக்கிகளையும், ரவைகளையும் எடுத்துக் கொண்டு வாவியைத் தாண்டி மேற்குக் கரையை அடைந்தனர். சிங்களக் குடியேற்ற வாசிகள் தம்மைத் தேடி வரமுன்பாகவே தாமே உடனே அவர்களைத் தேடிச் சென்று தாக்குவதற்கு அங்கு சென்ற போது ஆட்டுக்கறி சமைத்து வைத்து சிங்களக் குடியேற்ற வாசிகளை எதிர்பார்த்திருந்த சந்திக் கடை சிங்கள முதலாளியை மடக்கிப் பிடித்து உண்மைகளை எடுத்துக் கொண்டனர். அதே சந்தியின் மேற்கே இருந்த மற்றுமொரு சந்தியில் சிங்களக் கடை வைத்திருந்த முதலாளியையும் அவரது உதவியாளரையும் சுட்டுக் கொன்றதோடு அவர்களது உடல்கள் சந்தியில் போடப்பட்டன.

இதனைத் தொடர்ந்து உடனே சந்தியிலிருந்த அடர்த்தியான மரமொன்றில் ஏறி துப்பாக்கிகளுடன் காத்திருந்த போது வாகனங்கள் அதாவது சிங்கள குடியேற்ற வாசிகள் வந்த அரச வாகனங்களில் ஒன்று முதலில் தெரிந்தது. இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக வந்த வாகனங்கள் உடனே நின்று விட்டன. வாகனங்களில் இருந்து சிலர் இறங்கி வந்து சடலங்களைப் பார்த்தனர். அடையாளம் கண்டு கொண்டதும் திகைப்புற்று நின்றனர். அப்போது மரங்களில் மறைந்திருந்த ஊர்காவல் படையினர் சுடத் தொடங்கினர். துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்து வந்தன. வாகனங்களில் வந்தவர்கள் 'தெமல ஆமி எனவா' (தமிழ் இராணுவம் வந்துவிட்டது) என கூக்குரலிட்ட வண்ணம் திரும்பி ஓடத் தொடங்கினார்கள். அவர்கள் வந்த வாகனங்களில் சிலவற்றை மட்டுமே திருப்பி எடுக்க முடிந்தது. பலவற்றை அங்கேயே கைவிட்டு கால் ஓட்டமாகவே போய்ச் சேர்ந்தனர். இத்தாக்குதல் மட்டும் நடந்திருக்காது விட்டால் அன்று இரவே துறைநீலாவணை தமிழ் மக்கள் அம்பாறை குடியேற்றவாசிகளால் கொன்று குவிக்கப்பட்டிருப்பர். இத்தாக்குதலின் பின்னர் அரசாங்கமும், படையினரும், பொலிசாரும் நடந்து கொண்டமுறை இன அழிப்புக்கு ஆதரவானதாகவே அமைந்திருந்தது.

தமிழ்க் கிராமத்தைத் தாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி பற்றி கவலைப்படாது துறைநீலாவணை தமிழ் மக்களை நிராயுத பாணிகளாகவே பொலிசார் கவனம் செலுத்தினார்கள். துறைநீலாவணைக் கிராமத்தைச் சுற்றி வளைத்து வீடு வீடாகச் சென்று துப்பாக்கிகள் உள்ளனவா? என்று தேடுதல் நடத்தினார்கள். இதன் பின்னரும் மற்றுமொரு தாக்குதலுக்கு சிங்களக் குடியேற்ற வாசிகள் திட்டமிட்டனர். முதல் சம்பவம் நடைபெற்ற சில நாட்களின் பின்னர் அதிகாலையில் கல்முனை வீதியிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக வாகனங்கள் வருவதை தமிழ் ஊர்காவற் படையினர் கண்டனர். ஊரை அடையும் இடத்தில் இரு வீதிகள் பிரிகின்றன. ஒரு வீதி துறையடிக்கும், மற்றது ஊருக்குள்ளும் செல்கின்றது. அந்த வீதிகள் பிரியும் சந்தியை முதல் வாகனம் அண்மித்ததும் தமிழ் ஊர்காவற் படையினரின் துப்பாக்கிகள் வெடித்தன. முதலில் வந்த வாகனத்தின் முன் கண்ணாடியைத் துளைத்துக் கொண்டு ரவை பாய்ந்தது. சாரதிக்கும் அவருக்கு அருகேயிருந்த இராணுவ அதிகாரிக்கும் இடையே உள்ள இருக்கையில் குண்டு பாய்ந்தது அந்த வாகனத்தை அப்படியே கைவிட்டு அனைவரும் பின்வாங்கினார்கள்.

இதனால் நீலாவணை தமிழர்களை அழித்தொழிக்கும் இரு திட்டங்களும் தோல்வியிலேயே முடிந்திருந்தன. வண்டி மீது தாக்குதல் நடத்த இடத்தில் அந்தப் போராட்டத்தின் நினைவாக நினைவுக்கல் ஒன்று வைத்து அக்கிராம மக்கள் இன்று வரைக்கும் காப்பாற்றி வருகின்றனர். தமிழ் பேசும் மக்களது போராட்டத்தில் முதல் ஆயுதப் போர் என்றுகூட இதனைக் குறிப்பிடுவதில் தவறேதுமில்லை.

> **''1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி சிறிலங்காவின் பிரதமராகவிருந்த பண்டாரநாயக்காவினால் நாடாளுமன்றத்தில் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனை உணர்ந்த தமிழரசுக் கட்சி அன்றைய தினம் பாராளுமன்றத்திற்கு எதிரே காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்தனர். இந்த சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்கள் பௌத்த மத குரு தலைமையிலே வந்த குண்டர்களால் மிருகத்தனமாக தாக்கப்பட்டு இரத்தம் சிந்த வைக்கப்பட்டனர். இந்த தாக்குதல் நடைபெற்ற போது பிரதமர் பண்டாரநாயக்கா நாடாளுமன்ற மேல்மாடியில் நின்று சுங்கானை புகைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தார். இந்த சந்தியாக்கிரகிகள் தாக்கப்பட்ட போது அன்று மாலை கொழும்பு புறக்கோட்டை, மருதானை போன்ற பகுதிகளில் தமிழர்களதும், முஸ்லிம்களினதும் கடைகள் உடைக்கப்பட்டு சூறையாடப்பட்டன"**

# சுனாமியால்

- கல்வி 100 வருடங்கள் பின்தள்ளப்பட்டு விட்டது- வடக்கு ஸ்ரீபதி.
- பஸ் ஸ்ரான்டில் வாழ்ந்து வருகிறேன்- தெற்கு அனோஜா
- வாக் கெடுத்தவர்கள் வாழாவிருக்கிறார்கள்- கிழக்கு சிவனேசன்
- உழுந்த மாவும் உக்கிய அரிசியுமே மிச்சம். மேற்கு- தேவிகா

# கொழும்பு மக்கள் நீதிமன்றத்தில் சுனாமி ஏதிலிகள் சாட்சியம்

வடக்கின் கல்விநிலை பல்வேறு காரணங்களால் 50 வருடங்கள் பின்தங்கியிருந்தது. சுனாமி தாக்கிய காரணத்தால் 100 வருடங்கள் பின்தங்கி விடுவோமோ என்ற அச்சம் எம்மிடையே ஏற்பட்டுள்ளது. எனவே கல்வித் துறையினர் திட்டமிட்டு துரிதமாக தியாகத்துடன் அர்ப்பணித்து சேவையாற்ற முன்வர வேண்டும். இவ்வாறு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற மக்கள் நீதிமன்றத்தில் சாட்சியமளித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கல்வியலாளர் ஏ.ஸ்ரீபதி வேண்டுகோள் விடுத்தார்.

'சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுடன் ஒருநாள்' எனும் தலைப்பிலான மக்கள் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த சனிக்கிழமையன்று (27.08.2005) கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது. இனவாதத்தையும் சகல விதமான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சர்வதேச அமைப்பு (IMADR) இதற்கான ஏற்பாட்டைச் செய்தது. கண்டி மனித அபிவிருத்தி தாபனம் பிரதான ஏற்பாட்டாளராக செயற்பட்டது. அமைப்பின் தலைவி கலாநிதி நிமல்கா பெர்ணாண்டோ தலைமையில் அம்முழு நாள் நிகழ்வு வெற்றிகரமாக நடைபெற்றது. அவர் தலைமையுரையாற்றியதும் கண்டி மனித அபிவிருத்தித் தாபனப் பணிப்பாளர் பி.பி.சிவப்பிரகாசம் நிகழ்ச்சி பற்றிய விளக்கவுரை நிகழ்த்தினார்.


மக்கள் மன்றத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் சாட்சியமளித்தனர். அங்கு ஏற்படுத்தப்பட்டிருந்த மக்கள் நீதிமன்றத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி ஜீ.தீரரத்ன மற்றும் அறிஞர்களான சுசில் ஸ்ரீவர்த்தன, பத்மினி, விஜேசூரியா, வாசுதேவ நாணயக்கார, பேராசிரியர் எஸ்.மூக்கையா, சரோஜா சிவச்சந்திரன், லலித் திசாநாயக்க ஆகியோர் நீதிபதிகளாக அமர்ந்திருந்தனர்.

மூன்று பாஷைகளையும் ஒரே நேரத்தில் மொழி பெயர்த்து வழங்க மூத்த மொழி பெயர்ப்பாளர் கே.ராகுலன் தலைமையிலான குழுவினர் அமர்த்தப்பட்டிருந்தனர். மண்டபத்தினுள் கண்டி மனித அபிவிருத்தித் தாபனத்தின் செயற்பாடுகளைப் பிரதிபலிக்கும் புகைப்படக் கண்காட்சி மகளிரணித் தலைவி சிவப்பிரகாசம் லேகேஸ்வரி பிரமுகர் நடராஜா தலைமையில் நடைபெற்றது. சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு, தெற்கு, மேற்கு மாகாணங்களைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் வருகை தந்திருந்தனர். 21பேர் சாட்சியமளித்தனர். தேசத்தை மீளக்கட்டியெழுப்பும் செயலணி (தப்ரன்) சார்பில் உயரதிகாரி சுசிலா பெரேராவும் சமூகமளித்திருந்தார்.

**வி.ரி.சகாதேவராஜா**

*வட மாகாணம் சார்பில் முதலாவது பேசிய பிரதிநிதி ஏ.ஸ்ரீபதி மேலும் பேசுகையில்:-*

சுனாமி எந்தச் சாதிமத இன வேறுபாடுமின்றி தாக்கியது. ஆனால் நிவாரணம் வழங்கலில் எம்மவர் பாகுபாடு காட்டுகின்றனர். எமது வடமராட்சியில் 16 பாடசாலைகள் அழிக்கப்பட்டன. அரசின் 200 மீற்றர் பிரச்சினையால் இவற்றை மீள அமைப்பதில் பலதரப்பட்ட சிக்கல் கள் எழுந்துள்ளது. வல்வெட்டி சிவகுரு வித்தியாலயம் என்ற பாடசாலை சுனாமியால் முற்றாகப் பாதிக்கப்பட்டது. தற்போது அப்பாடசாலை ஊரிலே பல வீடுகளில் நடமாடும் பாடசாலையாக இயங்கி வருகிறது. அதனால் முறையான கற்றலின்றி பிள்ளைகளின் கல்வி வீணடிக்கப்படுகிறது. இதனால் ஏலவே பின்தங் கியிருந்த கல்வி மேலும் பின்தங்கு ம் நிலையேற்பட்டுள்ளது' என்றார்.



*கொக்கலையைச் சேர்ந்த அனோஜா சுவர்ணமாலி அங்கு பேசுகையில்:-*

'கடலுக்கு அண்மையில் வாழ்ந்து வந்த எம்மை சுனாமி சீரழித்து விட்டது. இருக்க இடமின்றிக் கடந்த 8 மாதகாலமாக பஸ் தரிப்பிடத்தில் வாழ்ந்து வருகிறேன். எந்தப் பாதுகாப்புமில்லை. எனது குழந்தையைக் காப்பாற்றச் சென்ற கணவன் கடலோடு சங்கமமாகி விட்டார். நிவாரணம் கிடைக்கவில்லை. மிகவும் கஷ்டத்திற்கு மத்தியில் வாழுகிறோம் என்றார்.

*அம்பாறையைச் சேர்ந்த ம.சிவனேசன் பேசுகையில்:-*

தற்காலிக முகாம்கள் பல பாவனைக்குதவாத நிலையிலுள்ளன. நுளம்புகளின் தாக்கம் வரவரக் கூடுகின்றன. காணிப் பிரச்சினையால் நிரந்தர வீடு அமைக்கும் படலம் இழுபடுகிறது. கல்முனைக்கு 100 மீற்றர் காரைதீவுக்கு 200 மீற்றரா? ஏனிந்தப் பாரபட்சம்? பாகுபாடு? வாக்குப் பெற்றவர்கள் வாழாவிருக்கிறார்கள். விரக்தியின் விளிம்பில் உள்ளோம். தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு விடுவோமா? என்று அஞ்சுகிறோம். என்றார்.

*மட்டக்களப்பு திருச்செந்தூரைச் சேர்ந்த தாஸ் பேசுகையில்:-*

எமது பகுதியில் 3 கூடாரங்களில் 107 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. ஒரு சில வீடுகள் கட்டி இரு மாதங்களில் வீழ்ந்தளிக்கப்பட்டு வரும்போது மழை பெய்தது. கிட்டத்தட்ட முகாம்களிலுள்ள அனைவரும் நனைந்தபடியே இருந்தனர். அரச அதிகாரிகளிடம் முறையிட்டாலும் வந்து பார்க்கின்றார்களில்லை. எமது பிரதேச கிராம சேவையாளர் வந்து எமது கூடாரங்களில் 1 நிமிட நேரம் இருந்து பார்த்தால் புரியும் எமது அவலநிலை! மக்களுக்கு சேவை செய்ய வந்த அதிகாரிகள் எட்டியும் பார்ப்பதில்லை யாரிடம் சொல்லி அழுவது? என்று கேட்டார்.

*கொழும்பைச் சேர்ந்த தேவிகா பெர்ணான்டோ கூறுகையில்:-*

'109 குடும்பங்கள் முகாமில் வாழ்கின்றோம். நீர் போதாது மூன்று மலசலகூடங்கள் அரசின் உதவி எதுவுமேயில்லை. உக்கிய அரிசியும், உழுத்த மாவுமே தருகிறார்கள். இனிமேல் எமக்கு பருப்பு தரவேண் டாம் என்று கேட்கிறோம். பிள்ளைகளுக்கு படிக்க வசதியில்லை. சுனாமியால் பாதிக்கப்ப ட்டமைக்கு ரூபா 5000 ரூபா ஆனால் பாதிக்கப்படாதவர்களுக்கு ரூபா 10,000 இதுதான் இன்றைய நிலை' என்றார்.

# ஜனாதிபதி தேர்தலின் வெற்றி அறுவடையாருக்கு?

**எல்லாளன்**



ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடமா? அல்லது அடுத்த வருடமா ? என்ற நீண்டகால அரசியல் முறுகல் வினாவுக்கு இலங்கையின் உயர் நீதிமன்றம் விடையளித்து



விட்டது. இனி என்ன? வழமைப்போல நாட்டில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப்பணிகள் முன்னெடுக்கப்படும். அதேநேரம் நாட்டில் தீர்க்க முடியாமலிருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வைத் தரப்போவதாக ஜனாதிபதி வேட்பாளர்கள் உறுதியளிப்பார்கள். இந்த உறு திமொழியை நம்பிக்கொண்டு சிறுபான்மை அரசியல்வாதிகளும் தமது மக்கள் மத்தியில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான பிரசாரப் பணிகளில் ஈடுபடுவார்கள்.

இலங்கை சுதந்திரம் அடைந்தததன் பின்னர் இதுதான் நடைமுறையாக இருந்து வந்துள்ளது. எனினும் தற்போதைய சூழ்நிலையில் இதற்கான சாத்தியங்கள் எவ்வாறு இருக்கின்றன என்பதை சற்று ஆராய்வது நல்லது. ஜனாதிபதித் தேர்தல் திகதியை உயர்நீதிமன்றம் அறிவிப்பதற்கு காரணமாக இருந்த ஜாதிக ஹெல உறுமய இந்த தேர்தலில் முக்கிய பங்கை ஆற்றவுள்ளது. அதற்கான வாய்ப்புகளை அது உருவாக்கிக் கொண்டுள்ளது. பௌத்த கொள்கைகள் என்ற போர்வையில் அந்த கட்சியின் கொள்கைகள் ஒரு படி மேல் சென்று சிங்கள இனத்துவ அடிப்படை வாதத்தை முன்னிலைப் படுத்தியுள்ளமையால் அதற்கு சிங்கள மக்கள் மத்தியில் ஆதரவு இருந்து வருகிறது. மறுபுறத்தில் ஜே.வி.பியும் சோசலிஸம் என்ற போர்வைக்குள் இருந்துக் கொண்டு சிங்கள இனவாதக் கொள்கைகள் சார்ந்த போக்கை கடைப்பிடித்து வருகின்றமையால் அதுவும் ஜனாதிபதித் தேர்தலில் முக்கிய பங்கை கொண்டிருக்கிறது. இதனை தவிர ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்ய வேண்டிய கடமையும் அதேபோல தீர்க்கமான கட்டமைப்பும் வடக்கு கிழக்கு மற்றும் மலையக தமிழ் கட்சிகளிடமும், அதேபோல முஸ்லிம் கட்சிகளிடமும் இருக்கின்றன. இவ்வாறான சூழ்நிலையிலேயே இலங்கையில் 1977 ஆம் ஆண்டின் யாப்புக்கு அமைவான நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசுத் தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு காணப்படுகிறது.

1999ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவிற்கு வடக்கு கிழக்கை தவிர்ந்த ஏனைய பகுதி தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஓரளவான தமது ஆதரவை வழங்கினார்கள். இதன் காரணமாக அவர் தமது பிரதான அரசியல் எதிரியான ரணில் விக்கிரமசிங்கவைக் காட்டிலும் சுமார் 7 இலட்சம் வாக்குகளை அதிகமாக பெற்று ஆட்சிக்கு வந்தார். அந்த தேர்தலின்போது சந்திரிகாவுக்கு 43 இலட்சத்து 12 ஆயிரத்து 157 வாக்குகள் கிடைத்தன. ரணில் விக்கிரம சிங்கவுக்கு 36 இலட்சத்து 2 ஆயிரத்து 748 வாக்குகள் கிடைத்தன. ஜேவிபியின் நந்தன குணதிலக்கவுக்கு 3 இலட்சத்து 44 ஆயிரத்து 173 வாக்குகள் கிடைத்தன. இந்த தேர்தலின்போது ஜாதிக ஹெல உறுமய முழுமையாக உருபெற்றிருக்கவில்லை. இந்த நிலையில் 2004 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவிற்கு வாக்குபலம் குறைந்திருந்



தமை தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டது. அந்த தேர்தலில் சந்திரிகாவின் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் ஜேவிபியும் இணைந்து போட்டியிட்டு 42 இலட்சம் வாக்குகளை பெற்றன. மறுபுறத்தில் மலையக தமிழ் வாக்காளர்களின் உதவியுடன் 35 இலட்சத்து வாக்குகள் கிடைத்தன.

அதாவது ஜேவிபியு டன் இணைந்தமை காரணமாகவே சந்திரிகாவின் கட்சியினால் ஐக்கிய தேசிய கட்சியை பின்தள்ள முடிந்துள்ளது. இதன்போது தமிழரசுக் கட்சியின் 6 இலட்சம் வாக்குகளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒரு இலட்சம் வாக்குகளும் ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைத்திருக்குமானால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எனப்படும் ஜேவிபி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கூட்டு நேரடியான தோல்வியை தழுவியிருக்கும். மறுபுறத்தில் ஜாதிக ஹெல உறுமயவின் 5 இலட்சம் வாக்குகள் இரண்டு பிரதான கட்சிகள் மத்தியில் பிரிந்திருந்தாலும் ஐக்கிய தேசிய கடைசியின் வெற்றியை தடுத்திருக்க முடியாமல் போயிருக்கும். இந்த நிலைமை 2004 இல் காணப்பட்டதாகும் என்ற வகையில் தற்போதைய நிலைமையை ஒப்பிட்டு பார்ப்போம்.

ஜே வி பி. க்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கடசிக்குமான மக்கள் செல்வாக்கில் சரிவு நிலை காணப்படுகிறது. அதாவது அந்த கட்சிகளுக்கான வாக்காளர்கள் குறைந்திருக்கிறார்கள் தவிர கூடவில்லை. இதற்கான காரணம் சுனாமியின் பின்னர் இந்த இரண்டு கட்சிகளும் உரிய செயற்பாட்டை முன்னெடுக்கவில்லை, பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்கிய போதும் அவர்கள் நிரந்தரமாக்குவதில் அந்த கட்சிகளின் இயலாமை, நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்ட நிலையில் மக்கள் பாரிய பொருளாதார சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளமை, இனப்பிரச்சினை தீர்வின் அடிப்படையில் பல்வேறு சர்வதேச வலையமைப்புக்கு மத்தியில் ரணில் விக்கிரமசிங்க தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தை செய்து கொண்டு மக்கள் மனதில் குறிப்பாக யுத்தத்தை விரும்பாத சிங்களவர்கள் மத்தியில் சமாதான நம்பிக்கையை கொண்டு வந்திருந்த போதும் அதனை கூட்டு அரசாங்கம் உடைத்தெறிந்து நாட்டில் மீண்டும் யுத்த சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளமை போன்ற காரணங்களை கூறலாம்.

எனவே எதிர்வரும் அரசுத் தலைவர் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிங்கள மக்கள் மத்தியில் மாத்திரமதிக வாய்ப்புகள் கிடைக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அதன்பின்னர் தற்போது பின்னடைவு கண்டுள்ள சமாதானம் ஓரளவுக்காவது முன்னகர்த்தப்படும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் இருக்கிறது. மறுபுறத்தில் ஜேவிபியுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும் நேரடியான அல்லது மறைமுகமான ஒப்பந்தங்களை செய்துக் கொண்டு அதேநேரம் மலையக வாக்குகளையும் ஏதோ ஒரு வகையில் பெற்றுக் கொண்டு மஹிந்த ராஜபக்ச அரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெறுவாராக இருந்தால் நாட்டின் இனப்பிரச்சினையின் நகர்வு தொடர்ந்தும் இன்றைய சூழ்நிலையையே பிரதிபலித்திருக்கும் என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது. ஏனெனில் மஹிந்த ராஜபக்ச எந்த ஒரு சமாதான முன்னெடுப்பையும் நகர்த்திச் செல்ல அவருக்கு ஆதரவு வழங்கும் கட்சிகள் ஒத்துழைக்காது என்பது கருத்தாக காணப்படுகிறது.

இந்த நிலையில் தமிழ், முஸ்லிம் மக்களின் கதாபாத்திரம் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்? குறிப்பாக வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் உட்பட்ட வடக்கு கிழக்கின் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் உடனடியாக காலதாமதமின்றி ஒரிணக்கத்திற்கு வரவேண்டியது காலத்தின் அவசரமான அவசிய மாகும். இதனடிப்படையிலேயே தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு அடுத்த 5 ஆண்டு காலப்பகுதியிலாவது தீர்வை பெற்றுக் கொள்ள முடியும். ஒரு வகையில் இந்தக் கட்சிகள்

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

# பலமோடு இருக்கின்றோம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா விலக்கப்பட்டதிற்குப் பின்னர் விடுதலைப் புலிகள் பலமிழந்து விட்டதாகவே பேரினவாத



சக்திகள் கருதினர். அவ்வாறே தென்னிலங்கை ஊடகங்களும் கருத்துத் தெரிவித்தன. மீண்டும் ஒரு போர் தொடங்குமானால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தாயக மண்ணை ஒட்டுப் படையின் உதவியோடு அபகரித்து விடலாம் என படைத்தரப்பு நம்பிக் கொண்டிருக்கிறது.

இந்த நம்பிக்கை பலவீனமானது. விடுதலைப் புலிகள் ஒருபோதும் பழமிழந்து விடவில்லை என்பதையும் மீண்டும் ஒரு போர் மூழுமானால் மட்டக்களப்பு மாவட்டத்தை முழுமையாக மீட்டெடுப்போம் எனத் தெரிவித்திருக்கிறார். மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு அவர்கள்.

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகள் ஈழநாதம் இணையத்தளமூடாகக் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் ஐயாயிரம் சிறிலங்காப் படையினரே தாயக மண்ணை ஆக்கிரமித்திருக்கின்றனர். அவர்களை வெளியேற்றி நிரந்தரமாகவே எமது கட்டுப்பாட்டில் வைத்திருப்போம். அதற்கான படைவலிமை உள்ளது என்ற சாரப்பட அவர் தெரிவித்திருந்தார்.இதனை சான்று பகிரும் வகையில் அண்மையில் படுவான்கரையில் நடைபெற்ற போராளிகளுக்கான விளையாட்டு நிகழ்வு வெளிப்படுத்துகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கனரக ஆயுதப் பயிற்சியினை நிறைவு செய்த போராளிகளுக்கான மரதன் ஓட்ட நிகழ்வு கடந்த 25ம் திகதி படுவான் கரைப்பிரதேசத்தில் நடைபெற்றது.

அம்பிளாந்துறை தாமரைப் பூச் சந்தியிலிருந்து ஆரம்பமான மரதன் ஓட்டம் அம்பிளாந்துறை, கடுக்காமுனை, அரசடித்தீவு, பட்டிப்பளை, கொக்கட்டிச்சோலை ஆகிய ஊர்களூடாக மகிழடித்தீவு நினைவுத் தூபியடியில் நிறைவு பெற்றது.



கனரக ஆயுதங்களைச் சுமந்தவாறு போராளிகள் மரதன் ஓட்டத்தை நிறைவு செய்தனர். இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு மாவட்டத் தளபதி நாகேஸ் துணைத்தளபதி ரமணன், மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளந்திரையன் உட்பட தளபதிகள் பொறுப்பாளர்கள், போராளிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் இரு நிமிட அகவணக்கம் செலுத்தப் பட்டது. பின்னர் கட்டளைத் தளபதி கேணல் பானு, மாவட்ட தளபதி நாகேஸ் ஆகியோர் மரதன் ஓட்டத்தில் கலந்து கொண்ட போராளிகளுக்கு கைலாகு கொடுத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கனரகப் பயிற்சி பெற்ற போராளிகளின் மரதன் ஓட்டம் கட்டளைத் தளபதி கேணல் பானு அவர்களின் கருத்தினை வைத்து ஆளமாக அவதானிக்குமிடத்தில் புலிகள் பலமிழக்கவில்லை. பலம் பெற்று நிற்கின்றனர் என்பதை வெளிப்படுத்துகிறது.

தமிழ்த் தேசியத்திற்கு துரோகமிழைத்த கருணா விடுதலைப் புலிகள் அமைப்பினால் வெளியேற்றப்பட்டதால் விடுதலைப் புலிகள் பலமிழந்து விட்டதாகக் கருதுவது முட்டாள்தனம். தற்போதும் அவ்வாறு கருத சிலர் முனைகின்றனர்.

சிறிலங்காவின் படைத் தளபதிகள் தெரிவித்த கருத்தொன்றிலும் தாங்கள் சண்டைக்குத் தயாராகி விட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் விடுதலைப் புலிகளைப் பலமிழந்ததாக இவர்கள் கருதிக்கொண்டிருப்பதுதான்.

சுயபலத்தில் நம்பிக்கையிழந்திருக்கும் படைத்தரப்பு வெளிநாட்டு இராணுவ உதவியோடு விடுதலைப் புலிகளுடன் போரிட்டு வெற்றிபெற முடியும் என படை கருதுமானால் அவர்களுக்கு ஏற்படப் போகும் விளைவுகள் விபரீதமானவையாகவே அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

வெறும் ஆட்பலம், ஆயுதபலம் இரண்டும் இருந்தால் போதாது. மனோபலம் வேண்டும். அதுவே வெற்றிக்கு பிரதான பலமாகும். சிங்களப் படைகள் தோல்வியுறுவதற்கும் இதுவே மூலகாரணம். விடுதலைப் புலிகளின் போரியல் நுட்பமான திறனுக்கு தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் தான் பல்லாயிரக் கணக்கான படையினர் தப்பியோடினர். இன்னும் ஒரு போர் மூண்டாலும் இதே நிலைதான் ஏற்படும் என்பது உறுதி.

# சங்கரியின் கனவு


தென் அமெரிக்க நாடொன்றின் சர்வாதிகாரி மரணப் படுக்கையில் கிடந்த கதையைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.பல வருடம் ஆட்சி செய்த கார்லொஸ் என்ற இராணுவத் தலைவன் உயிருக்கு மன்றாடிக்கொண்டு படுக்கையில் கிடந்தான். அவனுக்கு



இரண்டாம் இடத்திலிருந்த பிரதித் தலைவன் கதறிஅழுதபடி பக்கத்தில் நின்றான். "கொமான்டர் உங்கள் இறுதி ஆசை என்னவென்று சொல்லுங்கள். நிறைவேற்றக் காத்திருக்கிறேன்" என்றான் பிரதித்தலைவன் மிகவும் உருக்கமாக. "எனக்கு உதவும் உயிர வாயுக் குழாயைச் சற்றுமுன் நிறுத்தி விட்டாய். அதை மீண்டும் திறந்து விடப்பா. இந்த உதவி ஒன்றே போதும்" என்றார் அந்த சாகக் கிடந்த கொமாண்டர். பிரதித் தலைவர்கள் எப்போதும் இப்படித்தான். தமது கொமாண்டர்களை விரைவாக மேலுலகம் அனுப்பக் காத்திருக்கிறார்கள்.

பிரதித் தலைவனுடைய இடத்தில் சங்கரியை வைத்துப் பாருங்கள், நிலமை புலப்படும். கதிர்காமருக்குப் பிறத்தால் நிழல்போல் தொடர்ந்து திரிந்த சங்கரி வெளியுறவு அமைச்சராகும் கனவில் கிடந்தது உண்மையே. சங்கதி கதிர்காமர் நடத்திய டாம்பீக வாழ்க்கை, உலகப் பயணங்கள், சிங்களவர்களின் வணக்கம், ஊடகங்களின் புகழாரம் என்பன சங்கரியைக் கவர்ந்தன. வெளியால் சொல்லப்பயம், ஆனால் ஆசையை வளர்த்துக் கொண்டார். ஞாயிறு தோறும் கதிர்காமர் வீட்டில் சங்கரிக்கு மதிய போசனம். அரச செலவில் கதிர்காமர் இறக்குமதி செய்த உயர்தர மதுபானம் சங்கரிக்குப் போதை ஊட்டின. கரையில் தூக்கிப் போட்ட தூண்டில் மீன்போல சங்கரி கதிர்காமரின் கட்டளையை நிறைவேற்றத் தயாரானார். "சொல்லுங்கள் சேர், என்னை நம்புங்கள்சேர், எதையும் செய்யத் தயார் சேர். நீங்கள் சொன்னால் போதும் சார்" என்று பிதற்றினார் சங்கரி.

நீர் என்னைப் பின்பற்ற வேண்டுமாயின்



முதலாவதாக நான் சொல்லுறபடி நடக்க வேண்டும். தமிழ் மொழியில் பேசுவதை நீர் நிறுத்த வேண்டும். எனக்கு ஒரு சொல்லுக் கூடத் தெரியாது, நான் பிறந்தது வளர்ந்தது கண்டியிலும் கொழும்பிலும் தான். என்னுடைய நண்பர்கள் யாபேரும் சிங்களவர்கள் என்று நீர் சத்தியம் பண்ணிச் சொல்ல வேண்டும். ஆரம்பத்தில் கொஞ்சம் கடினமாக இருக்கும். ஆனால் நாளடைவில் எல்லாம் சரியாகிவிடும். நீர் இலேசுப்பட்ட ஆளில்லை பாரும், என்னையே தூக்கியடிக்கக் கூடிய கெட்டிக்காரன் என்றார் கதிர்காமர். சங்கரிக்குத் தலைகால் தெரியாத சந்தோசம். வசிட்டர் வாயால் மகரிசிப் பட்டம் என்பார்கள் அந்த மாதிரி மகிழ்ச்சி. எல்லாம் சரி கொஞ்சம் நாகரிகமாக நடவும் சங்கரி. என்றார் கதிர்காமர். திடீரென்று - கஞ்சி தொட்டியிலை


(தொடர்ச்சி 23ம் பக்கம்)

ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) வாரம் தோறும் வழங்கும் குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபெற விரும்புவோர் போட்டிப்படிவத்தைப் பூர்த்தி செய்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடை அனுப்பும் ஒரு அதிஸ்டசாலிக்கு 250 ருபா பணப்பரிசும், பாராட்டுப் பெறும் 10 அதிஸ்டசாலிகளின் பெயர் விபரமும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

*விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி:~ 12~09~2005*

## குறுக்கெழுத்துப் போட்டி 67

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 67**
**ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு)**
**பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**



## இடமிருந்து வலம்

01. இராமாயணத்தில் மாய மானாக வந்தவர்.
05. சிறுவன் (திரும்பியுள்ளான்)
06. மகாவிஷ்ணுவின் இன்னொரு நாமம். (குழம்பியுள்ளது)
08. இறுதி எழுத்தைக் கொஞ்சம் திருத்தினால் இதுவும் அடவி என்றாகும்.
09. மற்றவருக்காக தமது சந்தோசங்களையும் சிலவேளை உயிரைக் கூடத் துறப்பது (முதல் எழுத்தையும் துறந்து விட்டது)
10. இம்மரத்தை கற்பகத்தரு என்றும் கூறுவார்கள்.
11. எப்போதாவது பூக்கும் மரம் (இறுதியெழுத்தில்லாமல் திரும்பி நிற்கிறது)
12. மேளச் சத்தம்.
13. சந்தை (திரும்பியுள்ளது)
15. வன்மையான மரமொன்று.
16. சோற்றுடன் சேர்ந்து வருவது.

## மேலிருந்து கீழ்

01. விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரர்.
02. தொலைந்து போன விலைமதிப்பற்ற பொருட்களைக் கண்டெடுத்துக் கொடுப்பவருக்குக் கொடுக்கப்படுவது.
03. பருந்து (குழம்பியுள்ளது)
04. தீபங்கள் கொண்டு இறைவனுக்குச் செய்யப்படும் பூஜை.
07. மயில் எழுப்பும் ஒலி இவ்வாறு அழைக்கப்படும். (தலைகீழ்)
09. தலங்களைத் தரிசிக்கும் நோக்குடன் செல்லும் நெடுநாள் பயணம்.
10. ஊறு களங்கம். (குழம்பியுள்ளது)
12. கானகம். (தலைகீழ்)
13. கிரீடம்.
14. தெரிந்து கொள் என்னும் பொருள் தரும் சொல்லின் வினையடி.

## குறுக்கெழுத்துப் போட்டி 65ற் கான விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. விடுகதை. | 01. விண்கலம். |
| 05. பந்தல். | 02. கபடம். |
| 07. கட்டடம். | 03. உடந்தை. |
| 09. உலகம். | 04. நூல். |
| 11. ப(ல)ம். | 6. த(ன)ம். |
| 12. வடு. | 08. பனிக்கட்டி. |
| 13. கரடி. | 10. குடுமி. |
| 16 சிக்கனம். | 14. தகர(ம்) |
| 17. புனிதம். | 15. கனம். |
| 18. மா. | 16. புசி. |

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

**தே.இளங்கோ,**
**இல-5,பிள்ளையார் கோயில் வீதி,**
**கல்லடி உப்போடை,**
**மட்டக்களப்பு.**

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01. மு.கிருஷ்ணாளினி, பிரதான வீதி, செட்டிபாளையம்.
02. மு.கஜரூபன், சுதர்சன் கபே வீதி, கோட்டைக்கல்லாறு - 01.
03. கே.நாதன், ஷாணுஜா ஜுவலரி, பெரியபோரதீவு.
04. ய.சயந்தன், கடுக்காமுனை.
05. ப.ஹின்ஷியா, முனைக்காடு, கொக்கட்டிச்சோலை.
06. ச.சந்திரமதி, மகிழவட்டவான், ஆயித்தியமலை.
07. கோ.தணிகாசலம், தாழங்குடா - 02., ஆரையம்பதி.
08. வீ. கேதீஸ்வரன், பாடசாலை வீதி, ஐயங்கேணி, செங்கலடி.
09. திருமதி.அனிஷா.அல்.ஆஸாத், புன்னைக்குடா வீதி, ஏறாவூர் - 03.
10. யோசப் டொரிங்ரன் ஸ்பெக், மட்டக்களப்பு.



# திருக்குறள் காட்டும் அரசியலும் அதன் பொருத்தப்பாடும்

**கன்னிமுத்து வெல்லபதியான்**

**(சென்றவாரத் தொடர்ச்சி...........)**

திருக்குறள் காட்டும் அரசியலில் இறைமாட்சிக்கு அடுத்ததாகக் கல்வி என்னும் அதிகாரமானது இடம் பெறக்காணலாம். இது மன்னனுக்கு மட்டும் உரித்தானதல்ல, மக்களுக்கும் பொதுவானதாகும்.

மன்னனாலும் சரி, மக்களாலும் சரி கற்பதற்குத் தகுதியான - ஏற்ற நூல்களைச் சந்தேகமறக் கற்றல் வேண்டும். கற்றதன் பின்னர் அதற்கேற்ப நடக்க வேண்டும்.

''கற்கக் கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

இதிலிருந்து இவ்வாறான கல்வி மூலமே அரசியலும் மக்கள் வாழ்வியலும் செழுமை பெறமுடியும் என்பது வள்ளுவனாரின் சீரிய கருத்தாகும்.

இவ்வாறான பல கருத்துக்கள் கல்வி அதிகாரத்திலே இடம் பெற்று அதன் பின்பு ''கல்லாமை'' அதிகாரம் முன்வைக்கப்படுவதை அவதானிக்கலாம். மன்னனாலும் சரி, மக்களானாலும் சரி கற்காத போது அவர்களது வாழ்நாளில் ஏற்படும் இழிவும் மனிதனாக மதிக்கப்படாத தன்மையும் அதிலே வலியுறுத்தப்பட்டு அதன் மூலமாக கல்வி கட்டாயமானது என எடுத்துணர்த்தப்படுவது சிறப்பம்சமாகும். எடுத்துக்காட்டாக,

''கல்லாதான் சொற்கா முறுதல் முலை இரண்டும்
இல்லாதாள் பெண்காமுற்றற்று''

என்ற குறள்களைக் கொள்ளலாம். அதாவது கல்லாதவன் தானும் அவையில் பேசவேண்டும் என்று விரும்புதல். முலைகள் இரண்டும் இல்லாதவளான பெண் பெண்மையை விரும்புதல் போன்ற அறியாமையை உடையதாகும் என்று அழகான உவமை மூலம் கல்லாமையால் ஏற்படும் இழிவையும், அதன் மூலமாக கல்வியைக் கற்றாக வேண்டும். கருத்தையும் திருக்குறள் சிறப்புற விளக்கக் காணலாம்.

கல்லாமைக்கு அடுத்ததாக ''கேள்வி'' என்னும் அதிகாரமானது இடம் பெறுகின்றது. இதுவும் மன்னனுக்கும், மக்களுக்கும் பொதுவானவைகளாகும்.

''செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை''

என்ற திருக்குறள் ஒன்றே கேள்வியின் சிறப்பிற்கு போதுமானதெனலாம்.

அதாவது கேள்வியால் அடைகின்ற அறிவே செல்வங்களுள் சிறந்த செல்வமாகும். அந்தக் கேள்விச் செல்வமே பிற செல்வங்களுள் எல்லாம் முதன்மையானதும் ஆகும். எனவே இது அரசியலுக்கும், மக்கள் வாழ்வியலுக்கும் அத்தியாவசியமானதாகும்.

அடுத்ததாக ''அறிவுடைமை'' என்னும் அதிகாரமும் மன்னனுக்கும்,மக்களுக்கும் பொதுவானதாக வள்ளுவரால் வலியுறுத்தப் படுகின்றது. உதாரணமாக,

''எப்பொருள் யார்யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது
அறிவு''

என்னும் திருக்குறளைக் கொள்ளலாம். எந்தப் பொருளைப் பற்றியும் எவர் எவரிடமிருந்து கேட்பதானாலும் அப்பொருளினது மெய்யான தன்மைகளைக் காண்பது தான் அறிவாகுமென்று இக்குறள் தெளிவுபடுத்துவதை அவதானிக்கலாம்.

''குற்றம் கடிதல்'' என்னும் அதிகாரமானது அரசனாக இருந்தாலும், சாதாரண குடிமகனாக இருந்தாலும் குற்றம் வராமல் நடந்து கொள்வதற்குரிய வழிவகைகளைக் கூறுகின்றது. இதற்கு எடுத்துக் காட்டாக பின் வரும் குறள்களைக் கொள்ளலாம்.

''வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரி முன்னர்
வைத்தூறு போலக் கெடும''

அரசியலிலோ சரி, மக்கள் வாழ்க்கையிலோ சரி குற்றங்கள் வருவதானது பல வகையிலும் கேடுகளையே விளைவிக்கும். அவ்வாறான மோசமான குற்றங்கள் வராமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு வருமுன்னர் பாதுகாத்துக் கொள்ளாதவனுடைய அரசியலோ அல்லது வாழ்க்கையோ நெருப்புப் பட்ட வைக்கோல் போர் போல் அழிந்து கெடும் என்பது வள்ளுவர் கண்ட உண்மையாகின்றது.

''பெரியாரைத் துணைக் கோடல்'' என்ற அதிகாரமானது மன்னனுக்கும், மக்களுக்கும் பொதுவானசாக முன்வைக்கப்பட்டுள்ள போதும் அரசனுக்கே அது மிகவும் பொருத்தப்பாடு உடையதாக இருப்பதை அவதானிக்கலாம்.

''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார்
இலானும் கெடும''

நாட்டுக்கு உதவாத வரிகள், சட்டதிட்டங்களை, ஒரு மன்னன் அமுல்படுத்த முற்படும் போது அதனை இடித்துக் கூறி புத்தி மதிகள் கூறக்கூடிய அமைச்சர்களை அவன் கட்டாயமாகப் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு பெற்றிராத மன்னன் அவனைக் கெடுக்கின்ற பகைவர் இல்லாமல் போனாலும் தானாகவே கெட்டழிவானாம்.

பெரியாரைத் துணைக் கோடலுக்கு அடுத்ததாக வைக்கப்பட்டுள்ள ''சிற்றினம் சேராமை'' என்னும் அதிகாரமானது மன்னனுக்கும், மக்களுக்கும் பொதுவானவையாக முன்வைக்கப்பட்டிருப்பது கண்கூடாகும்.

மன்னனாலும் சரி, சாதாரண குடிமகனாலும் சரி சிற்றினத்தை அதாவது கெட்டவரை ஒரு போதும் சேரக் கூடாது. பெரியோர்கள் இத்தகையோரைக் கண்டால் அஞ்சி ஒதுங்கிக் கொள்வார்கள். சிறுமையுடையோர் தான் இவர்களை உறவினர்களாகக் கருதிச் சூழ்ந்து கொள்வார்கள்.

''சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்''

என்னும் குறள் மூலம் இது நன்கு தெளிவுறக் காணலாம். எனவே மன்னனோ, மக்களோ சிற்றினத்தைச் சேரக் கூடாது என்பது வள்ளுவரின் அறிவுரையும், அரசியலோடு ஒட்டிய ஆலோசனையுமாக இருக்கின்றது.

''தெரிந்து செயல்வகை'' என்னும் அதிகாரமும் பலவித அரிய கருத்துக்களைத் தாங்கி மன்னனுக்கும், மக்களுக்கும் பொதுவானதாக வரக்காணலாம். அதற்கு எடுத்துக் காட்டாக பின்வரும் குறட்பாவைக் கூறலாம்.

''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு''

எந்தவொரு செயலாயினும் அதனைப் பற்றி முதலில் சிந்திக்க வேண்டும். அந்தச் சீரிய சிந்தனை மூலம் கிடைத்த தெளிவின் பின்பே செயலில் இறங்க வேண்டும். திடீர் முடிவுகளும் மனம் போன போக்கிலான செய்கைகளும், அரசியலிலும், மக்கள் வாழ்வியலிலும் பல்வேறு இழுக்குகளையே ஏற்படுத்தும். ஒரு செயலை நினைத்த உடனே செய்து விட்டு அதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்ட பின்பு அதனைப் பற்றி எண்ணி ஏங்குவதும், மனம் வருந்துவதும் குற்றமாகும்.

ஒரு மன்னன் வலி, காலம், இடம் ஆகிய மூன்றிலும் கவனமாகச் செயற்படும் போதே அரசியலைத் திறம்பட நடத்த முடிவதுடன், வெற்றி வாகைகளையும் தொடர்ந்து சூடலாம் என்பது வள்ளுவரின் கருத்தாக இருக்கின்றது.

மயில் தோகை, ஒன்றை நோக்குங்கால் அது பாரம் குறைந்தது. அவை பலவாக ஒன்று சேரும் போது பாரமானது அதிகரித்து விடும். பாரம் குறைந்தது என்பதற்காக மயில்த் தோகைகளை அளவுக்கதிகமாக வண்டியில் ஏற்றும் போது வண்டியினது அச்சாணி முறிந்து விடும் என்று உவமானத்தை மாத்திரம் கூறிய வள்ளுவர் உவமேயத்தைக் குறிப்பாக விளக்கியுள்ளார்.

அதாவது ஒரு மன்னன் தான் பலசாலி என்பதற்காக ஒரு பலவீனமான மன்னனோடு போராடலாம். ஆனால் அவனுக்கு எதிராக எல்லாப் பலவீனமான மன்னர்களும் ஒற்றுமைப்பட்டு ஒன்றாக இணைந்து விட்டால் அந்தப் பலசாலியான அரசனையே தோற்கடித்து விடுவர். இந்த உண்மையைத் தாங்கி வரும் குறள் பின்வருமாறு.

''பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால
மிகுத்துப் பெறின்''

எனவே அரசன் வலியறிதலில் கவனமாக இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

வலியறிதல் மட்டும் மன்னனுக்குப் போதுமானதன்று. அவன் காலமறிதலிலும், இடன் அறிதலிலும் கவனமாக இருக்க வேண்டும்.

''பகல் வெல்லும் கூகையைக் காக்கை
இகல்வெல்லும்
வேந்தற்கு வேண்டும் பொழுது''

என்ற குறளை காலமறிதல் கட்டாயமானது என்பதற்குத் தக்க உதாரணமாகக் கொள்ள முடியும்.

அதாவது அரசனானவன் வலிமையுடையவன் என்ற கர்வத்தில் இருப்பதோடு பகைவர் மேற்போர் தொடுக்கும் போது பொருத்தமான காலத்தை முறையாக அமைத்துப் போரிடல் வேண்டும் என வள்ளுவர் கூறுகின்றார். இதனைச் சிறந்த உவமை நயத்தோடு அவர் விளக்கக் காணலாம்.

காகத்தையும், ஆந்தையையும் ஒப்பு நோக்கிப் பார்த்தால் வலிமை குறைந்தது காகமாகும். வலிமை கூடிய ஆந்தையைக் காகம் வெல்லக் கருதினால் பகல் நேரத்தில் ஆந்தைக்கு கண் பார்வை துலக்கம் இல்லை என்பதை உணர்ந்து அக்காலத்திலே தான் போராட வேண்டும்.

அதே போன்று தான் பகையரசனை வெல்லக் கருதிய மன்னன் காலத்தைத் தக்கவாறு திட்டமிட்டு உணர்ந்த பின்பே படையெடுத்தல் வேண்டும் என்று வள்ளுவர் இதற்கு விளக்கம் தந்து நிற்பதைக் காணலாம்.

வலிமையும், காலமும் அறிந்து பகைமேற் செல்லும் மன்னன் தான் வெல்வதற்குப் பொருத்தமான இடத்தினை (நிலத்தினை) அறிந்து செயற்படுவதும் இன்றியமையாத ஒன்றாகும். இதனையும் சிறந்த உவமை நயமுடைய பின்வரும் குறளால் திருவள்ளுவர் தெளிவு படுத்துகின்றார்.

''நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும் புனலின்
நீங்கின் அதனைப் பிற''

முதலை ஆழமுடைய நீரில் தன்னைவிட வலிமை கூடிய மிருகங்கள் எல்லாவற்றையும் வென்று விடும். எனவே முதலைக்குரிய வெற்றி பொருந்திய இடமாக அது வாழும் ஆழமான நீர் கொண்ட இடமே இருக்கின்றது. அங்கேதான் அது வெற்றிகளைப் படைக்க முடியும்.

இதனை விட்டு அம் முதலையானது வெளியே வருமாயின் வலிமை குறைந்த சிறு மிருகங்கள் கூட ஒன்று சேர்ந்து அதனைக் கொன்று விடும் என்பதே அந்தக் குறள் தந்த உண்மையாகும்.

இதே போன்று சிறுபடையினை உடையவனும் தன் வலிமையைச் செலுத்தக் கூடிய இடத்தில் சேர்ந்திருந்தால் பெரும்படையை உடையவனும் தன் முயற்சியிலே தோல்வியையே எப்போதும் தழுவிக் கொள்வான் என்பதனை,

''சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்''

என்ற குறட்பா விளக்கி நிற்பதை நோக்க முடியும். எனவே தான் ஒரு மன்னன் வலியறிதல், காலமறிதல் மாத்திரம் கவனம் செலுத்தாது இடன் அறிதலும் கூடிய கவனம் உடையவனாக இருக்க வேண்டுமென்று வள்ளுவர் விளக்கம் தருகின்றார்.

இடன் அறிதலை அடுத்து தெரிந்து தெளிதல் மன்னனுக்கும், மக்களுக்கும் பொதுவானதாக முன்வைக்கப்பட்டு அதன் பின்னால் தெரிந்து வினையாடல் அதிகாரமானது சிறப்பாக மன்னனை மையப்படுத்தியதாக இடம் பெற்றிருப்பதைக் காணலாம். அந்த அதிகாரத்தில் இருந்து பின்வரும் குறளைத் தக்க எடுத்துக்காட்டாகக் கொள்ள முடியும்.

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்''

என்பதே அக்குறளாகும். அரசன் ஒருவனுக்கு இருக்க வேண்டிய முக்கிய பண்புகளில் ஒன்று ஆராய்ந்து தெளிந்து தேர்ச்சிக்குரியவராகத் தெரிந்து கொண்டவரை அவரது துறையிலேயே விட வேண்டும்.

அதாவது ஒரு மன்னன் படைத்தளபதி ஒருவனைத் தெரிவு செய்கின்றான் என வைத்துக் கொண்டால் படையை ஆளுகின்ற திறமையை அதற்குரிய கருவியைக் கொண்டு இவன் முடிக்க வல்லான் என வேறுபடுத்தி ஆராய்ந்து அந்தச் செயலை அவனிடமே பொறுப்பாகக் கொடுக்க வேண்டும். இது சிறந்த மன்னன் ஒருவனுக்குரிய உயர்ந்த பண்பாகும் என வள்ளுவர் விளக்கம் தந்து தமது அரசியல் பற்றிய கருத்துக்களை நகர்த்திச் செல்கின்றார்.

*(தொடரும்........)*

நவீனமான மற்றுமோர் நவீன நாவல்.....



# உயிருள்ளவரை உன்னுடன்.....

(06)

'உங்களுக்குத்தான் வேறு யாருக்கு' எனக்கூறி அவளிடம் நீட்டினான். அதை வாங்கியவள் 'மீன் குஞ்சு எனக்குப் பிடிக்கும் என்று எப்படி உங்களுக்குத் தெரியும்' என வினாவினாள். அதுதான் ரகு என்று கூறிவிட்டு சென்று விட்டான்.

தேவதையைக் கண்டு ஒரு மாத காலம் சென்று விட்டது. இதுவரைக்கும் அவளைக் காணவில்லை. என மனதில் ஏற்பட்ட குழப்பத்தைக் குறைப்பதற்கு கடற்கரைக்குத் தனியாக சென்றிருந்தான் ராஜா. அங்கு இருந்தும் அலுப்புத்தட்டியது ராஜாவிற்கு.

கடற்கரை ஓரமாகக் கடல் நீர் காலை நனைக்க ராஜா நடந்து கொண்டிருக்கும் போது அங்கு அவனது தேவதையும் அதே போன்று வருகிறாள் என்பதை அறியவில்லை. அறிந்திருந்தால் என்ன பேச வேண்டும் எனத் திட்டம் போட்டிருப்பான். ஏற்கனவே போட்ட திட்டமும் தற்போது வரப் பயப்பட்டது. ஏனோ தெரியாது. பெண்னென்றாலே ஏற்கனவே அலேஜிக். தற்போது இவளுடன் பேசவும் பயம் என்ன செய்வதென்று புரியாமல் தவிர்த்தான்.

அவள் ராஜாவைக் கண்டதுதான் தாமதம் அப்படியே நின்று விட்டாள். ஒருத்தி வந்து தனது தேவதையைக் தட்டிக்கூட்டிக் கொண்டு சென்று விட்டாள். ஓர் வேளை அவள் இவளது நண்பியாக இருக்கக் கூடும் என நினைத்தான். இரண்டாவது முறையும் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டு பதற்றத்துடன் வீடு வந்து சேர்ந்தவன் ரகுவைக் கூட்டிக் கொண்டு வெளியே சென்றான். டேய் நான் நிம்மதியா இருக்கிறது உனக்குப் பிடிக்கலையாடா? என்றான் ரகு. என்னுடைய நிம்மதியை அந்த வைட் சுடிதார் இரண்டாவது முறையாக மூடவுட் பண்ணிட்டாள். இங்க உனக்கு நிம்மதி கேட்குதாக்கும் எனக் கேட்டான் ராஜா.

'டேய் அண்ணியைக் கண்டியாடா? பெயரைக் கேட்டியாடா? அதைக் கேக்கத்தானே இந்த நாஷமாப்போன நரம்பில்லா நாக்கு வருகுதில்லையடா?' என ரொம்ப வேதனையோடு கூறினான். ரகுவிற்கு ராஜாவைப் பார்க்கையில் மனக்கஷ்டமாகப் போய்விட்டது.

ரகு எனக்கு ஒரு கெல்ப் பண்ணு. இனி நான் எங்கயாவது வெளிய போனா நீயும் கூடவா? ஏனெனில் தற்சமயம் அவளைக் கண்டால் நீயாவது பெயரைக் கேட்டுச் சொல்வாய். எனக்கென்றால் அவளைக் கண்டாலே பயமா இருக்குடா? மச்சான்' என்றான் ராஜா.

இந்த விஷயத்தில நீதான் எனக்கு உதவி பண்ணனும் என ராஜா கேட்டான். 'என்னடா நீ இப்படி பேசுர. உனக்காகத்தானேடா இந்த உயிரை வைத்திருக்கின்றேன். என்ன வேண்டும் என்றாலும் செய்வேண்டா? எனக்கூறி முடிக்க முன் 'சித்ராவிற்கும் இதே டயலோக்கைத்தானே அடித்திருப்பாய் பிறகு வைக்கிறேன்டா ஆப்பு என்றான் ராஜா.

ஞாயிற்றுக் கிழமை அனைவருக்கும் விடுமுறை தினம். அன்றைய சமையலுக்குத் தேவையான மரக்கறி வகைகளை வாங்குவதற்காக ரகுவும், ராஜாவும் மார்க்கெட்டிற்குச் சென்றனர். ராஜாவிற்குக் காய்கறி வாங்கிப் பழக்கமில்லை. ஆனால் ரகு அப்படியில்லை. விவசாயியின் மகன் என்பதை நிருபிக்க சந்தர்ப்பம் கிடைத்தவன் போல பார்த்துப் பார்த்து காய்கறிகளை வாங்கிக் கொண்டிருந்தான்.

காப்புக் கடையில் அந்த அம்மாவை எதேர்ச்சியாகக் கண்டான் ராஜா. ரகு, ரகு என தனது நண்பனை அதட்டிக் கூப்பிட்டான். என்னடா ஒரே நொய் நொய் என்று இல்லடா மச்சான். அக்ஸிடன்டான பையன் அம்மா அந்தக் கடையில் இருக்காங்கடா. வாடா போய் பேசுவோம் என ராஜா ஓடினான்.

ரகுவிற்கு ராஜா மீது பரிதாபம் ஏற்பட்டது. அம்மா என்ற ஓர் வார்த்தைக்காக எவ்வளவு துடிதுடித்திருப்பான். உச்சரிப்பதற்கு வரப்போரவளையாவது இறைவன் நல்ல இரக்க குணமுள்ளவளாக அமைக்கட்டும் என மனதில் வேண்டிய வண்ணம் தொடர்ந்தான்.

வணக்கம் அம்மா என்றார்கள் இருவரும் ஒரே குரலில். யார் தம்பி நீங்க நான் மதிக்கயில்லை என்றாள். அந்த கெட்ட நிகழ்ச்சியை ஏன் மீண்டும் ஞாபகப்படுத்தனும் உங்கட மகன் எப்படி இருக்கிறான். காலில் ஏற்பட்ட புண் ஆறிவிட்டதா? என வினாவினான். ராஜா.

அவனுக்கு சுகமாகிவிட்டது தம்பி. நீ எப்படி இருக்காய் யார்? இந்தத் தம்பி என வினாவ இவன் என்னுடைய நண்பன். பெயர் ரகு. இங்கதான் என்கூட வேலை பார்க்கிறான். அம்மாவின் வீடு எங்கு இருக்கிறது என்று கேட்டான் ரகு.

முருகன் கோயிலுக்குப் பக்கத்தில்தான் தம்பி என்று கூறினாள். வாங்க நாங்களும் அந்த வழியாலதான் போறோம். அம்மாவை விட்டுட்டு, வீட்டையும் பார்த்துட்டுப் போவோம் எனக் கூறி அம்மாவையும் அழைத்துக் கொண்டு காரில் சென்று கொண்டிருக்கும் போது ரகு சொன்னான். அன்றைய நாளைக்குப் பிறகு ராஜா பெண்களின் கூட்டங்களில் உங்களைத் தேடுவான். அன்றும் விலாசத்தைக் கேட்கவில்லை என இருவரும் தேடிவந்தோம். உங்களைக் காணவில்லை.

ராஜா பணக்கார வீட்டுப் பையன் என்றாலும் மனதில் கொஞ்சம் கூட நிம்மதியில்லை. அம்மா அவனது சின்ன வயதிலே தவறிட்டாங்க. சித்தியிடம்தான் வளர்ந்தான். அவள் செய்த கொடுமையினால் பெரும்பாலும் பெண்களை வெறுப்பவன்.

டேய் ரகு வாயை மூடிக்கொண்டு வாடா. புராணத்தை ஆறுதலாகச் சொல்லலாம். நீ சொல்லு தம்பி என ரகுவை அந்த அம்மா கேட்டாள்.

*(தொடரும்............)*

காத்தநகர்
கறுப்பு ரோஜா

---

# முஸ்லிம் தமிழர் கிராமியக் கவியமுதம்

## அஷ்ரபின் பேராசையும், புத்தர் சிலையும்



உலகத்தில் தோன்றிய தீர்க்க தரிசிகளில் கௌதம புத்தர் தான் சண்டை சச்சரவையற்ற அன்பு, அகிம்சை மதத்தைப் போதித்து வாழ்ந்தார். புத்தரைப் பின்பற்றுவதாகக் கூறும் தேரர், பிக்குமார் ஏன் அடுத்தவர்களை அடிக்கின்றனர். ஆகவே இவர்கள் ஏமாற்றுப் பேர்வழிகள்.

ஆரிய திராவிட நாட்டிலிருந்தே ஈழதீவகத்துக்கு வந்தேறு குடிகளாகும். புத்த மகான் வந்து எந்த மதத்தினரையும் இழிவுபடுத்தவில்லை. இழுத்து அடித்து காணி, பூமிகளை அபகரித்து வாழவுமில்லை. புத்தஞ்சரணங் கச்சாமி, சங்கஞ்சரணங் கச்சாமி என்றுதான் ஆடாமல், அசையாமல் அரச மரத்தடியில் அகிம்சையைப் போதித்தார். அக்கால நாட்டார் பாடலிலும் இப்படித்தான்.


''புத்த மகான் நல்லவராம்
பேதிப்பாராம் போதி மரக்கீழிருந்து
சத்தங் கேட்டுச் சனங்கள் வந்து
சரணங் கச்சாமி யாகினாராங் கா...''

**03.09.2000 ம் ஆண்டு முஸ்லிம் காங்கிரசின் முகமூடி கிழிகிறது. பிரசுரம் அச்சிட்டேன். ஏழாம்மாடியிலிருந்து விரைவில் கீழ் விழுவீர் என்ற சாராம்சம்.**

**04.09ல் தேர்தல் நியமனம் அம்பாறைக் கச்சேரியுள், அஷ்ரபின் கையில் முதல் நோட்டிஸ் கொடுத்து விட்டு மயோன் முஸ்தபாவுடன் நான் நடந்து விட்டேன்.**

**16.09.2000ம் ஆண்டு (3-16) இரண்டு வாரத்துள் மந்திரி அஷ்ரப் அகால மரணம், எனது தீர்க்க தரிசனம்.**

இந்தப் புத்தர்சிலை வைப்புக்களின் ஆரம்ப காலமே ஆயிரம் ஆண்டுக்கு முன்பே கதிர்காமம் முருகன் கோயிலுக்கும், பால்குடி பாவாத் தைக்காவுக்கும் எதிர்பாகத் தோன்றியது. முன்னர் ஈழநாதம் வெள்ளி மலர்களிலும் எழுதியிருந்தேன். முஸ்லிம், தமிழர் மத உணர்வுகளைத் துரத்தி விட்டு கதிர்காமத்துக்கு வருவோர்களை புத்த மதத்தைத் திணித்துவிட தேரர்களும், பிக்குமாரும் குறுக்கு வழியில் வகுத்திட்ட இழி செயல்தான் புத்தர் சிலை, வைப்புக்களாகும். புராதன காலத்தில் சித்தார்த்தன், புத்தராகி, ஈழத்தீவுக்கு வந்த காலத்தில் இந்து கிறிஸ்த்து, இஸ்லாம் வேறு வன வேடர், குறவர்களும் வாழ்ந்தனர். அதற்கு முன் குவேனி பெற்ற சிங்கவல்லி, சிங்கராசன் ஒரு தாய் பெற்ற பரம்பரை இருந்ததாம். சிங்களவர்களும்



இவ்வண்ணம் சாந்தியும், சமாதானமுமாக வாழ்ந்த புத்த மகானின் பிக்குமார் தேரர்களின் பரம்பரை இன்றுள்ளதா? புத்த மகானின் பூரண சமாதிக்குப் பின்னர் இந்து கிறிஸ்த்து, இஸ்லாமியர்களை அடுத்துக் கெடுத்து புத்த நாடாக்கும் முயற்சிகளில் புராதனப் பழங்காலமிருந்து பிக்குமாரே புத்தர் சிலை வைப்பு களவிலும் நடாத்திக் கொண்டிருக்கின்றனர். இது இழிவான செயலாகும். புத்தருக்கே பேரிழுக்காகும்.

1948ல் இலங்கைக்குப் பிரித்தானிய அரசு சுதந்திரம் கொடுத்த பின் முதலாவது பிரதமரான சேனநாயக்காவும், காணி விவசாய மந்திரி பண்டாரநாயக்காவும் பிக்குமாரின் தூண்டுதல்களாலேயே தமிழர், முஸ்லிம் பூர்வீக பூமிகளில் புத்தர் சிலை வைக்கத் தொடங்கினார்கள். இதை எதிர்த்த இந்து, கிறிஸ்த்து இஸ்லாமியத் தலைவர்கள் சிலரும் கால், அரை, முக்கால் மந்திரிப் பதவிகளுக்குப் பேராசைப்பட்டவர்களில் ஜீ.ஜீ.பொன்னம்பலம்,

*(தொடரும்,.......)*

கலாபூசணம்
மருதூர்வாணர்

---

## கடலோரம் சுனாமி வந்தது
## குளத்தோரம் பெருவெள்ளம் வந்தது

வாதப் பிரதிவாதப் பிரச்சினைக்கு ஏழு மாதம் கடந்து எட்டாவது மாதம் கடந்தும் இன்றைய பத்திரிகைகளில் மருதமுனைக்கு 100 மீற்றர் வேண்டாம். 200 மீற்றருக்கப்பால் வீட்டுத்திட்டத்தை அமுல்ப்படுத்துங்கள் என்று சுனாமியால் வீடிழந்த (5800 பேர் வீடுகளுள்) சிலர் மட்டுமே செய்திகளை ஜனாதிபதிக்கும், மகஜர் அனுப்பியதாகவும் வாசித்தேன். இதை விளக்கவே இக்கட்டுரையில் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

உலகம் தோன்றிய காலம் கோடான கோடி ஆண்டுகள் பெரும் பிரளயங்கள், சுனாமிகள், சூறாவளிகள், பெருவெள்ளங்கள் வந்தும் பேரழிவுகள் 26-12-2004 போல் சில ஆண்டுகள்தான் நடந்தன. 6000 ஆறாயிரம் ஆண்டுகளில் சஹாரா பாலை வனத்தில் நட ந்தது. பின்னர் 4000 நாலாயிரம் ஆண்டில் சுதிமலை (நூஹூநபி)யில் கப்பல் கட்டிய காலத்திலும் மாபெரும் வெள்ளம். பின்னர் 2000 இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நாகபட்டினம், விசாகா பட்டணம் கடல் கொந்தழித்தது. இப்படி ஆராய்ந்து பார்த்தால் 2004ல் வந்தா சுனாமிப் போரலை பனாமாத்தீவு, இந்தோனேசியா, இந்தியா, இலங்கை போன்ற இருபது நாடுகளின் கடலோரங்களில் 500 மீற்றர் வரைக்கும் 50 மீற்றர் பேரழிவும் 100 மீற்றர் முக்கால், 200 மீற்றர் பாதியாகவும் 300 மீற்றர் 10 சதவீதமுமே அழிவுகள் நிகழ்ந்தன சரி, இனிமேல் சுனாமிப் பேரழிவு வருமென்றால் 500 தொடக்கம் 1000 ஆண்டுகளுக்குப் பின்னரே வரலாம். என்பது எனது கணிப்பு.

இதில் ஒரு பெருமயக்கம் யாதெனில் சூடுபட்ட பூனைகள் அடுப்பங்கரையை நாடுவதில்லை என்பது பழமொழி. இது படுபொய் என்பது போல் இன்றும் கடலோரம் 50 மீற்றருக்கப்பால் கொடி ஏற்ற மணறாக் கல்முனை, சாய்ந்தமருதுதிலும் பாதி ஐந்துநூறு, ஆயிரம் வீடுகளையும் புனர்நிர்மாணித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்க ளைக் கண்டு பாண்டிருப்பு மருதமுனையிலும் 100 மீற்றருக்குட்பட்டவர்களும் ஆயிரக் கணக்கினில் வீட மைத்து வருகின்றனர். இதைக் கண்ட பின்னும் பேரியல் அமைச்சர் வந்து போய் ஜனாதிபதியிடம் சொல்லியும், 100 மீற்றர் சட்டத்தைப் பற்றி வெளியிட்டனர். சரி இது பிழை என்போர் 200 மீற்றருக்குள் நீதிபதிகளின் வீடுகள், மாடிவீடுகள், பல்லாயிரம் புதுப்புது வீடுகளை உடைக்கலாமா? இது வேறு விடயமா?

சுனாமி வந்த மாதமே ஓயாத மழை பெய்து வயல்வெளி 15, இருபதடிவெள்ளம் பெருக்கெடுத்தும், குளத் தோரம் வீடுகள் தாழ்ந்து வெள்ளம் தலைக்கு மேல் வந்தும் மக்கள் குடிபெயர்ந்து நடுஊருக்குள் வந்தவர்களை மீள்பரிசீலனை செய்தோமா? ஆக கடலுக்கும் பயந்தவர்கள் குளத்துக்கும், இங்கு பயந்தவர்கள் கடலோரங்களிலுமா வீடுகட்டி வாழச் சொல்கிறீர்கள். வயலை, குளத்தை 20அடி உயர்த்தி வீடு கட்டுவதென்றால் உலக வங்கி 100 ஆயிரம் கோடி இலவசமாக தருமா? யோசியுங்கள். யாசிகளே?

# இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு அறுபது அகவை




இரண்டாம் உலகப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது 1945.08.15ம் ஆண்டாக இருந்த போதிலும், இவ் இரண்டாம் உலகப் போரின் கொடூரம் நிறைந்த வடுக்கள் இந்த அறுபது ஆண்டுகள் உருண்டோடிய பின்பும் மாறியதாகத் தெரியவில்லை என்றே பலராலும் பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஜப்பான் நாட்டிலுள்ள ஹிரோஷிமா, நாகஸாக்கி ஆகிய இரு பெரும் நகரங்கள் மீது அமெரிக்காவின் விமானப்படையின் டி.29 ரக விமானத்தைப் பயன்படுத்தி அதாவது 06.08. 1945ம் திகதி ஹிரோசிமா நகரின் மீதும், 09.08.1945 ம் திகதி நாகஸாக்கி நகரின் மீதும் அமெரிக்கா நடாத்திய அணுகுண்டுத் தாக்குதலே இரண்டாம் உலகப் போரை இத்தாக்குதல் நடத்தப்பட்ட ஆறு நாட்களின் பின்புதான் இரண்டாம் உலகமகா யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்டு வருகின்றது.

ஹிரோஸிமா, நாகஸாக்கி ஆகிய ஜப்பானிய நகரங்களின் மீது அமெரிக்கா நடாத்திய அணுகுண்டு தாக்குதல்கள் நடைபெற்று ஆறுபது வருடம் கடந்து விட்டாலும் மானிட வாழ்வியல் மீது நடாத்தப்பட்ட இக் கொடூரமான மிருகத்தனமான தாக்குதலின் கொடூரங்கள் பற்றி அமெரிக்கா உணரா விட்டாலும் ஜப்பானியர்களும் ஏனைய நாட்டு மக்களும் இதை உணர்ந்துள்ளார்கள் என்றே கருதப்படுகின்றது.

1456.08.29ம்திகதி ஹிரோஷிமா நகரத்தின் மீது பீ டி ரக அமெரிக்க விமானப் படையின் விமானி ஒருவரால் அணுகுண்டு வீசப்பட்ட போது உடனடியாகவே 140,000 பேர் பலியாகியதாகவும், நகரமே முற்று முழுதாக அழிந்து பாலைவனம் போன்று காட்சியளித்ததாகவும் கூறப்படுகின்றது.



31000 அடி உயரத்திலிருந்து காலை 8.15 மணியளவில் இவ்வணு குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி அணுகுண்டுக் கதிர் வீச்சினால் பல்லாயிரக் கணக்கான மக்கள் அவலங்களை இழந்து அவதியுற்றதாகவும், அதற்குப் பின் மீதமுள்ள மக்களுக்கு பிறந்த குழந்தைகளும் அங்கவீனர்களாகவே பிற்பட்ட வருடங்களில் பிறந்தார்கள் என்றும், இன்று வரை இந்த அவலச் சுமையின் வடுக்கள் மாறவில்லை என்றே கூறப்படுகின்றன.

அன்று இந்த அணுகுண்டுத் தாக்குதல்களுக்கு உள்ளானவர்கள் சிறுவர்களாகவும், இளம் வயதினராகவும் இருந்தனர். இவர்களில் ஒரு சிலர் இன்றும் கூட அங்கவீனர்களாக உயிருடன் வாழ்கின்றார்கள். இதன் கொடுமைகளை இவர்கள் விவரிக்கும் போது உலகம் அழியக் கூடியளவுக்கு இந்த அணுகுண்டுத் தாக்குதல் ஏற்பட்டது போன்ற ஒருவகை அச்சமும், பயமும் மனதில் ஏற்படுகின்றது.

பிறக்கும் பிள்ளைகளுக்கு ஏற்படும் குறைபாடுகள், வயது வந்தவர்களுக்கு ஏற்படும் பல்வேறுபட்ட நோய்கள் ஆகியவைகள் இவற்றில் சில. இவற்றை விட புதுவிதமான நோய்களும், வியாதிகளும் இந்நகர மக்களுக்கு ஏற்பட்டு வருவதாக வைத்தியர்கள் கண்டு பிடித்துள்ளார்கள்.

இந்நகரங்களில் பிறந்த குழந்தைகள் அங்கவீனர்களாகவும், வழமைக்கு மாறான விதத்தில் உடல் உறுப்புக்களைக் கொண்டவர்களாகவும் இருந்தனர். இதற்குக் காரணம் இந்த அணு குண்டுகளின் தாக்கமேயாகும். ஜப்பான் நாட்டின் தலைநகர் டோக்கியோவிலிருந்து 450 கிலோ மீற்றர் தொலைவிலேயே இந்தக் ஹிரோஷிமா நகரம் காணப்படுகினறது.

குண்டு வீசப்பட்ட நேரத்தில் இன் நகரில் சுமார் 250000 மக்கள் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் சுமார் 140000 பேர் உடனடியாகவே கொல்லப்பட்டனர். ஏனையோர் இறக்கக் கூடியளவுக்குக் காயமுற்றும் மற்றும் சிலர் படிப்படியாக ஒரு சில மாதங்களுக்குள் குண்டுத் தாக்கத்தினால் அவதிப்பட்டும் இறந்தனர். இது மானிட இனத்திற்குச் செய்யப்பட்ட மன்னிக்க முடியாத கொடுமை யாகவே கருதப்படுகின்றது.

ஹிரோஷிமாவில் இருந்த பசுமையான எல்லா உயிரினங்களும் இப்படியாக அழிக்கப்பட்டன. கட்டடங்களும், ஏனைய பொது வசதிகளும் அடியோடு தீக்கிரையாக்கப்பட்டது. வீதியில் காணப்பட்ட அனைத்து வாகனங்களும் தீக்கிரையாகியதும், பாதிக்கப்பட்ட சிலர் தமது உடல் உறுப்புக்களின் ஒரு பகுதியைக் கையில் பிடித்துக் கொண்டு அங்கும் இங்குமாக ஓடினர்.

நோய் போன்ற வியாதிகள் இன்று இந்தக் குண்டு வீசப்பட்ட பகுதிகளில் அதி

பாரிசிலிருந்து
ஏ.நல்லரெத்தினம்

கரித்து வருவதாக ஜப்பானிய மருத்துவத் துறை அறிக்கைகள் தெரிவிக்கப்படுகின்றன. எனவே இத்துறை சார்ந்த ஆராட்சிகளும், ஏனைய விடயங்களும் இவ்விடயங்களில் மும்முரப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக வருடாவருடம் கூடுதலான நிதியையும் ஜப்பான் அரசு ஒதுக்கி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு விசேட மருத்துவர்களும் இவ் ஆராட்சி முயற்சிகளில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

31000 அடி உயரத்திலிருந்து வீசப்பட்ட குண்டினால் பூமியின் நிலப்பரப்பிலிருந்து நினைத்துப் பார்க்க முடியாதளவு பல மைல் ஆழமான பாதாள குழிகள் பல ஏற்பட்டதாகவும், இதன் ஆரம்பத்துடனேயே உலகின் அணுவாயுத யுகமும், ஆயுதப் போட்டா போட்டியும் உலகில் ஆரம்பமாகின. அணு சக்தி, அணுவாயுதம் போன்றவற்றுக்கான அடித்தளமும் இவ்விடத்திலேயே இடப்பட்டது. ஹிரோஷிமா, நாகஸாக்கி ஆகிய இரு நகரங்கள் மீதும் நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களுக்கு வி 29 ரக குண்டு விமானத்தையே பயன்படுத்தியதாகக் கூறப்படுகின்றது. இக்குண்டுத் தாக்குதலுக்கான காரணத்தை அமெரிக்கா கீழ்வருமாறு நியாயப்படுத்துகின்றது. ஒன்று யுத்தத்தை இவ்வணுகுண்டுத் தாக்குதல் மூலம் முடிவுக்குக் கொண்டு வந்து அமெரிக்கப் போர் வீரர்களைப் பாதுகாப்பது என்பது. அடுத்தது ஹிரோஷிமா, நாகஸாக்கி ஆகிய இரு நகரங்களும் ஆயுத தளங்களாகவும் யுத்த விடயங்கள் சம்பந்தமாக கேந்திர முக்கியத்துவம் மிக்க இடங்களாகவும், யுத்த நடவடிக்கைகளுக்கு தகவல் பெறும் இடமாகவும் பெண்கள் முதல் சிறுவர்கள் வரை யுத்தத்துடன் தொடர்புடைய ஏனைய தொழில் துறைகளுடன் பின்னிப் பிணைந்திருந்ததும் ஒரு காரணமென அமெரிக்க தரப்பில் நியாயம் சொல்லப்படுகின்றது. இதை அமெரிக்கச் சார்பு ஊடகங்களும் நியாயப்படுத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான மிகக் கொடூரமான தாக்குதல்கள் மேற்படி இரு நகரையுமே தரைமட்டமாக்கிய போதிலும் இன்று இவ்விரு நகரும் புதுப்பொலிவுடன் நிமிர்ந்து நிற்பதை இன்று காணக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறான அனர்த்தமும் கொடுமையும் இங்கு நடந்தது என்று கூட நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு வளம் நிறைந்து அதிநவீன கட்டடங்களும், பாதைகளும் நிர்மாணிக்கப்பட்டு எல்லாத் துறைகளிலும் குறிப்பாகத் தொழிநுட்பத் துறையில் முன்னிலையில் திகழ்கின்றதென்றே கூறப்படுகின்றது.

இருந்தும் இந்த இரு நகரங்களிலும் அமைக்கப்பட்டுள்ள சமாதானப் பூந்தோட்டங்களுக்கு இறந்தவர்களின் நினைவுக்காக அணையா விளக்காக எரிந்து கொண்டிருக்கும் நெருப்பும் அன்று அமெரிக்க விமானப்படை நடாத்திய குண்டுத் தாக்குதலின் கொடுமை எரிந்து கொண்டிருப்பதையே நினைவு படுத்திக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறு இரு நகரங்கள் மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுடன் ஓரளவு முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட இரண்டாம் உலகப் போரினால் ஜப்பான் நாடானது சீனா மீது நடாத்திய யுத்தத்தினால் சீனாவிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விரண்டாம் உலகப்போர் புரிந்ததையும் உயிரிழந்த சீன மக்களுக்காகவும் ஜப்பான் நாடு மன்னிப்புக் கோர வேண்டும் எனவும் சீனப் பிரதமரும், சீன மக்களும் கடந்த 15.08.05ம் திகதி உயிரிழந்த மக்களுக்கு 60வது ஆண்டு நினைவு வைபவத்தில் கலந்து கொண்ட போது கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்தோடு அதே தினத்தில் அவுஸ்ரேலியாவில் இரண்டாம் உலகப் போரின் போது உயிர் நீத்த 40000 பேரின் நினைவாக நினைவுத் தூபிக்கருகில் 60வது ஆண்டு நிறைவையொட்டி கடந்த 15.08.05ல் அவுஸ்ரேலியப் பிரதமரும் உயிர் நீத்தவர்களின் உறவினர்களும் சென்று அஞ்சலி செலுத்தியும் உள்ளார்கள்.

# மாணவர் பரிசுக் குவியல்

**தமிழ் பேசும் மாணவச் செல்வங்களுக்கு!**

ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு மாணவர்களின் அறிவுத்திறனை விருத்தி செய்யும் வகையில் வாரந்தோறும் பரிசுத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. மட்டக்களப்பு ராஜாஸ் புத்தக நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இந்தப் பரிசுக் குவியலில் நீங்களும் அதிஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்படுமிடத்து பெறுமதி மிக்க அறிவு நூல்கள், பாடசாலை உபகரணங்கள், பரிசுகளாக வழங்கப்படும்.

நீங்கள் செய்யவேண்டியது இவை தான்,

கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையை எழுதி – பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தி முகவரியை வெட்டியொட்டி அனுப்புதல் வேண்டும்.

முதலாவது அதிஷ்டசாலிக்கு பரிசும், பாராட்டுப் பெறும் ஐந்து மாணவர்களின் பெயர், பாடசாலை விபரங்களும் பிரசுரிக்கப்படும்.

**விடைகள் வந்து சேர வேண்டிய இறுதித் திகதி:-12.09.2005**

அனுப்பவேண்டிய முகவரி

**மாணவர் பரிசுக்குவியல்-48**
**ஈழநாதம் (மட். பதிப்பு), பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**

**இவ்வார வினாக்கள்.**

01. வெளிவிவகார அமைச்சரின் கொலையை அடுத்து சிறிலங்கா அரசாங்கம் தற்போது அமுல்படுத்தியிருக்கும் சட்டம் எது?
02. இருண்ட கண்டம் என்று அழைக்கப்படும் நாடு எது?
03. யப்பான் நாட்டின் தலைநகரம் எது?
04. 'கல்கத்தாவின் இளவரசன்' என்றழைக்கப்படும் இந்திய கிரிக்கெட் வீரர் யார்?
05. மகாத்மா காந்தி எழுதிய நூலின் பெயர் என்ன?

**பரிசுக்குவியல் 46 இற்கான சரியான விடைகள்**

01. 14.08.2005. 02. மின்னேரியா
03. இங்கிலாந்து 04. 1900ம் ஆண்டு 05. அர்சுணா ரணதுங்க

## பரிசுபெறும் அதிஸ்டசாலி

**த.செல்வக்குமார்,**
**தரம் -12கலை,**
**மட்.மத்திய கல்லூரி மட்டக்களப்பு**

## பாராட்டுப்பெறுவோர்

01. ஜெ.ஜினோஜிதா
மட்டக்களப்பு
02. நி.நிலஜா
தரம் 04வி
மட்.விவேகானந்தா ம.ம.வி
03. உ.பிரவீனன்
தரம் 03
மட்.கன்னன்குடா ம.வி
04. கு.பிரசன்னா
தரம் 09
மட்.செட்டிபாளையம் ம.வி
05. வி.வினோத்
செங்கலடி
மட்டக்களப்பு.

**மட்டு நகரில் சகலவிதமான பாடசாலை உபகரணங்கள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் அறிவு நூல்களுக்கு :-**




**தொ.பே.இல:- 065-2222371 065-2225341**




**இனிய நாதமே!**
முன்பெல்லாம் கவிநாதப் பக்கத்தில் "காத்தான்குடி யூனுஸ்" என்றால் ஒரு தனியிடம் கொடுப்பாய். ஆனால் இப்போது அவரின் கவிதைகள் பிரசுரிக்கப்படுவதில்லையே! காரணம் என்ன நாதமே, உனது வளர்ச்சிதான் எம்மைப் போன்ற உள்ளங்களின் வளர்ச்சி.

யூ.எல்.ஸாஸாத்
காத்தான்குடி

வெற்றி நாதமாய் வருகை தந்து
வீர நடைபோட்டு கால் பதித்து
உணர்வுகளின்
ரூபங்களை
உலகுக்கு அறிவித்து
பாமர மக்களின்
பிரச்சினைகளைப்
பரீட்சித்து
சாதகம் செய்து
கிழக்கின் விடிவெள்ளியாய்
வெள்ளி தோன்றியும்
இடைவிடாமல்
தினமும் சுடர் விட்டெரியும்
சூரிய அஸ்த்தமனமாய்
உதித்து வரும் நீ
பவள விழாவைத் தொட்டு
நிற்க ஆசைப்பட்டு
எதிர்பார்க்கிறேன்.

"கவிப்புயல்"
எஸ்.எம்.றம்ஸி
காத்தான்குடி 06

**அன்பின்**
**ஈழநாதத்திற்கு!**
புரட்சிகர வணக்கம், வெள்ளிதோறும் வருவாய் வெள்ளி நாதமே! நீ சுமந்து வரும் ஆக்கங்கள் யாவும் தரமானவை! அதிலும் போர் உலா, மகளிர் மகுடம், குறுக்கெழுத்துப் போட்டி போன்றவை என்னை மிகவும் கவர்ந்தவை! அது மட்டுமா? இலங்கையில் நடக்கும் தீய சக்திகளின் திருட்டு வேலைகளையும், கபட விளையாட்டுக்களையும் உடனே எடுத்து மக்களுக்குக் காட்டுகிறாய்! எனவே உன் சேவை மென்மேலும் தொடர எனது புரட்சிகர வாழ்த்துக்கள்.

என்.ஆர்த்தி
கரடியனாறு.

# பல ஆயிரம் கோடி ரூபாய் சொத்துக்களை அழித்த கத்ரினா



(நியுயோர்க்)

அமெரிக்காவில் "கத்ரினா" என அழைக்கப்படும் சூறாவளிக் காற்று மணிக்கு 230 கி.மீ. வேகத்தில் வீசியதில் லூசியானா, மிசிசிபி, அலபாமா மாநிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. 55 பேர் உயிர் இழந்ததாக முதல் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புக்கு சேதம் ஏற்பட்டு இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கடற்கரை யோர மாநிலங்களில் ஆண்டுதோறும் ஆக்ரோஷமான சூறாவளிக் காற்று வீசுவதுண்டு. ஒவ்வொரு சூறாவளிக்கும் அமெரிக்கர்கள் வித்தியாசமான பெயர்களைச் சூட்டியுள்ளனர்.

அந்த வகையில் "கத்ரினா" என்று அழைக்கப்படும் சூறாவளி அமெரிக்காவைப் புரட்டி எடுத்து. மணிக்கு 230 கி.மீ. வேகத்தில் சூறாவளிக் காற்று வீசியதில் கடற்கரையோர மாநிலங்களான லூசியானா, மிசிசிபி, அலபாமா ஆகிய மாநிலங்களில் பல பகுதிகள் தண்ணீரில் மூழ்கின. மிசிசிபி மாநிலத்தில் மட்டும் 50 பேர் உயிர் இழந்ததாக முதல் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் அடுக்குமாடிக் கட்டிடம் ஒன்று நொறுங்கியதில்



30 பேர் இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர லூசியானா உட்பட பிற பகுதிகளில் மரங்கள் விழுந்து ஐந்து பேர் இறந்துவிட்டனர்.

சூறாவளி வீசிய பகுதிகள் தற் போது தண்ணீரால் சூழப்பட்டுள்ளது. இப்ப குதிகளில் மீட்பு பணி தாமதமாக நடந்து வருகிறது. எனவே இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என அஞ்சப்படுகிறது.

அமெரிக்காவில் முக்கிய நகரங்களில் ஒன்றான நியூஆர்லியன்ஸ் நகரம் கடல் மட்டத்தை விட தாழ்வான பகுதியில் அமைந்துள்ளது. சூறாவளி வீசினால் இந்த நகரம் கடுமையாக பாதிக்கப்படும் என முன்பே கணித்து வைத்திருந்தனர். அது போல் "கத்ரினா" சூறாவளி சுழன்று அடி த்து வீசியதில் நியூ ஆர்லியன்ஸ் நகர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

கடல் நீர் சூழ்ந்து கொண்டதால் ஏராள மானவர்கள் வீட்டு



கூரைகளில் ஏறி தப்பிக்க முயற்சி செய்தனர். இதே போன்றதொரு சூழ்நிலை மிசிசிபி மாநிலத்தில் உள்ள நகரங்களிலும் ஏற்பட்டது.

"கத்ரினா" சூறாவளி காற்று வீசிய பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது. லட்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ள னர். பல ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு சேதம் ஏற்பட்டு இருக்கலாம் என கணக்கிடப்பட்டுள்ளது.

# கிரிக்கெட்டின் விலை 1300 கோடி ரூபா

(மும்பை)

அடுத்த நான்காண்டுகளுக்கு இந்தியாவில் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளுக்கான நேரடி ஒளிபரப்பு உரிமைக்காக ஆயிரத்து 300கோடி ரூபாய் பணத்தைக்கொட்ட காத்திருக்கின்றன தனியார் 'டிவி' அலைவரிசை

நான்கு அலைவரிசை வரும் அக்டோபர் 1 முதல் 2009ம் ஆண்டு செப்டம்பர் 30ம் தேதி வரையிலான நான்காண்டு காலத்துக்கு, இந்தியா வில் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளின் நேரடி ஒளிபரப்பு உரிமை கோரும் விண்ணப்பங்களை இந்திய கிரிக்கெட்போர்டு சமீபத்தில் வரவேற்றது. ஈ.எஸ். பி.என். ரூ ஸ்டார் ஸ்போர்ட்ஸ், ஜீ, சோனி மற் றும் தூர்தர்ஷன் (பிரசார் பாரதி) ஆகிய நான்கு சேனல்கள் உரிமை பெற போட்டி போட்டன.

போட்டி தற்போதைய நிலவரப்படி, மற்றெந்த அலைவரிசையும்விட, ஜீ ''டிவி" மிகஅதிக தொகைக்குஉரிமை கேட்பதாகவும், இரண்டாம் இடத்தில் ஈ.எஸ்.பி.என். ரூ ஸ்டார் ஸ்போர்ட்ஸ் உள்ளதாகவும் கிரிக்கெட் போர்டு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நான்காண்டுகளுக்கான ''டிவி" ஒளிபரப்பு உரிமைக்கு இந்திய கிரிக்கெட் சபை ரூபா 1, 300 கோடி அளவுக்கு ''விலை' நிர்ணயித்துள்ளது. இதற்கும் கூடுதலாகக் கூட செலுத்த தனி யார் சேனல்கள் போட்டி போடுகின்றன. எப்படியாவது கிரிக்கெட் ஒளிபரப்பு உரிமை பெறவேண்டும் என்பது மட்டுமே அவர்கள் குறி.

ஒப்பந்தம்: தூர்தர்ஷனும் இந்தக் களத்தில் இருந்தாலும், தனி யார் அலைவரிசைகள் அளவுக்கு போட்டியிட முடியாத நிலை. ஆகவே, அவர்கள் புதிய பாதையில் செல்கின்றனர். தனியார் சேனல்கள் யாருக்கு உரிமை கிடைத்தாலும் சரி, தூர்தர்ஷனுடன் ஒளிபரப்பு உரிமையைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என ஒப்பந்தம் தயார் செய்து விட்டனர்.

வருவாய்: பிரசார் பாரதி தலைமை நிர்வாக அதிகாரி சர்மா மும்பையில் நேற்று அளித்தப் பேட்டியில், ''கிரிக்கெட் போட்டிகளின் நேரடி ஒளிபரப்பு உரிமையை பகிர்ந்து கொள்வது தொடர்பாக, ஜீ மற்றும் ஈ. எஸ். பி.என். ரூ ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனல்களுடன் ஒப்பந்தம் கையெழுத்தாகி விட்டது. இந்தியா பங்கேற்கும் ஒரு நாள் போட்டிகள் மற்றும் பல அணி கள் பங்கேற்கும் தொடர்களின் அரை யிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளின் ஒளிபரப்பு உரிமையை பகிர்ந்து கொ ள்ளவேண்டும்.

டெஸ்ட் போட்டிகளுக்கு ''ஹைலைட்ஸ்' வழங்கவேண்டும் என ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. தூர்தர்ஷனில் இந்தப் போட்டிகளை ஒளிபரப்பும் போது கிடைக்கும் வருவாயை 25:75 என்ற விகிதத்தில் (25 சதவீதம் தூர்தர்ஷனுக்கு 75 சதவீதம் தனியார் சேனலுக்கு) பகிர்ந்து கொள்ளவும் இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது என்று தெரிவித்தார்.

# சந்திரிகாவின் மௌனத்தின் பின்னால்.....

தென்னிலங்கை முழுவதும் தேர்தல் கோலம் பூண்டிருப்பதாக தோற்றமளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் தேர்தல் கோலத்துக்கு வித்திட்ட சூத்திரதாரி சந்திரிகா குமாரதுங்க இதுவரை வாய்திறந்து வெளிப்படையான கருத்து எதுவும் வெளியிடவில்லை.

சமாதானத்துக்காகவே யுத்தம் நடத்துகிறதாகக் கூறி பாரிய யுத்தங்களை கடந்த 11 ஆண்டுகால ஆட்சிக் காலத்தில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்ட சந்திரிகாவின் மௌனத்தின் பின்னால் அர்த்தங்கள் இல்லாமலா போய் விடும்?

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சிறிலங்கா தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்த நாளில் நீதிமன்றில் இருந்த அனுரா பண்டாரநாயக்க, சந்திரிகா குமாரதுங்கவை சந்திக்க விரைந்தார். இருவரது சந்திப்பின் போதும் விவாதிக்கப்பட்ட முக்கிய விடயமே இந்தத் தோல்விக்கு யார் காரணம் என்பதே.

இந்தத் தோல்விக்குப் பின்னால் மகிந்த ராஜபக்ச மீது சந்தேகம் இருப்பதாக சந்திரிகா கூறியுள்ளார். சந்திரிகாவின் முன்னாள் செயலாளர் குசும்சிறியுடன் இணைந்து மகிந்த ராஜபக்ச இந்த சதிவேலையில் ஈடுபட்டிருக்கக் கூடும் என்றும் சந்திரிகா விளக்கம் அளித்துள்ளார்.

இதில் விசனமடைந்த அனுரா பண்டாரநாயக்க மகிந்த ராஜபக்ச மட்டும் இந்த சதியின் பின்னால் இருந்தால் நான் அதை எளிதில் விடமாட்டேன் என்று கோபத்துடன் கூறியுள்ளார்.

பண்டாரநாயக்க குடும்பத்தினரால் மகிந்த ராஜபக்சவின் வேட்பாளர் தெரிவு ஏற்க இயலாத ஒன்றாகவே தொடர்ந்து இருக்கிறது.

மகிந்த ராஜபக்சவை ஊழல் பேர்வழி என்றும் திருடன் என்றும் விமர்சனம் செய்த சில நாட்களிலேயே, சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்ட பாரிய நெருக்கடிக்கு முகம்கொடுக்கும் வகையில் வேறு வழியின்றி அரச தலைவர் வேட்பாளராக மகிந்த ராஜபக்சவை சந்திரிகா அறிவிக்க நேர்ந்தது.

அனுரா பண்டாரநாயக்கவை அரசுத் தலைவராக்கும் தனது கனவு தவிடு பொடியாகிப் போன நிலையில் அவரை பிரதம வேட்பாளராக்க மட்டுமே சந்திரிகாவால் முடிந்தது.

இந்த விசனங்களிடையே மகிந்த ராஜபக்சவின் வெற்றிக்கு சந்திரிகாவும் அனுரா பண்டாரநாயக்கவும் முழுமையாக பின்நிற்பார்களா? என்ற சந்தேகம் சுதந்திரக் கட்சியில் அதிகரித்துள்ளது.

இதை உணர்ந்தே மகிந்த ராஜபக்சவும் தற்போது ஜே.வி.பி.க்கு இருகரம் விரித்து பிச்சை எடுக்காத குறையாக கெஞ்சி அழைப்பு விடுத்து வருகிறார். அவருக்கு ராஜதந்திரியாக அமைச்சர் மங்கள சமரவீர செயற்பட்டு வருகிறார்.

ஜே.வி.பி. உள்ளிட்ட பேரினவாத சக்திகளின் ஆதரவுடன் மகிந்த ராஜபக்ச வெற்றி பெறுவாரானால் என்னதான் ஆயுட்கால தலைவராக தாம் நியமிக்கப்பட்டாலும் சுதந்திரக் கட்சியானது பண்டாரநாயக்க குடும்பத்தின் கைகளிலிருந்து நழுவிப் போவது தவிர்க்க இயலாத ஒன்றாகிவிடும்.

அப்படியானால் சுதந்திரக் கட்சியும் தென்னிலங்கை அரசியலும் பண்டாரநாயக்க குடும்பத்தின் ஆதிக்கத்தின் கீழேயே இருப்பது எப்போது சாத்தியமாகும்? அதற்கான காய் நகர்த்தல்களின் ஒரு பகுதிதான் சந்திரிகாவின் நெடிய மௌனமும் அனுரா பண்டாரநாயக்கவின் தொடரும் கடும் விமர்சனங்களும்.

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சராக அனுரா பண்டாரநாயக்கப் பொறுப்பேற்ற நாள் முதலே நோர்வே அனுசரணையாளர்களை வெளியேற்ற வேண்டும் என்பதை மையப்படுத்தியே தொடர்ந்து அறிக்கைகளையும் நேர்காணல்களையும் அவர் வெளியிட்டு வருகிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை இதுவரை நிழல் யுத்தத்தின் வழியே சீண்டிப் பார்த்து பாரிய யுத்த நகர்வுக்கு சிறிலங்கா இராணுவம் முயற்சித்த போதும் தமிழ் மக்களின் மனிதாபமான நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுமை காத்து வந்தனர்.

நீடித்த நிழல் யுத்தத்தால் புலிகளை யுத்தத்துக்கு வரவழைக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட சிறிலங்கா தரப்பு இப்போது கதிர்காமர் படுகொலை, பயங்கரவாத முத்திரை, நோர்வேக்கு எதிரான பரப்புரை என்கிற கணோட்டத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது வெளிப்படையாக நிற்கின்றன உண்மை.

கதிர்காமர் படுகொலைக்கும் எங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று பல முறை பகிரங்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்த பின்னரும் தொடர்ந்தும் புலிகள் மீது முத்திரை குத்துவதில்தான் அக்கறையோடு இருக்கிறார்கள் சிறிலங்கா தரப்பும் அனுரா பண்டாரநாயக்கவும்.

ஒருபுறம் சமாதானத்துக்கு வருகிறோம் என்று கூறிக்கொண்டே மறுபுறம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது சர்வதேச நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பகிரங்க வேண்டுகோளையும் அனுரா பண்டாரநாயக்க விடுத்துவருகிறார்.

அனுரா பண்டாரநாயக்கவும் சிறிலங்கா இராணுவ-பொலிஸ்மீண்டும் மீண்டும் கதிர்காமர் கொலையை முன்வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இயங்கும் போது இயல்பாகவே கதிர்காமரை யார் கொலை செய்தார்கள் என்ற கேள்வி எழாமல் இருக்க எவருக்கும் வாய்ப்பில்லை.

இந்த உண்மைகள் அம்பலத்துக்கு வராமல் இருக்கவே நாங்கள் சமாதனத்துக்கானவர்கள் என்கிற கடந்த 11 ஆண்டுகால சமாதான தேவதை அங்கியை சிறிலங்கா அரச தரப்புப் போர்த்திக் கொண்டு பேச்சுகளை அங்கு நடத்தலாமா? இங்கு நடத்தலாமா? அவர்கள் பங்கேற்கலாமா? இவர்கள் பங்கேற்கலாமா? என்ற வழமையான நாடகத்தையும் ஒருபக்கம் அரங்கேற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

11 ஆண்டுகாலம் எந்த ஒரு சமாதான முயற்சியையும் ஆக்கப்பூர்வமாக மேற்கொள்ளாத சந்திரிகா குமாரதுங்க, இறுதி இருமாத காலத்தில் உருப்படியாக சாதித்துவிடுவார் என்று நம்புவதற்கு தமிழ் மக்கள் தரப்பினர் தயாராக இல்லை. அதே நேரத்தில் இறுதி நாட்களில் தீவிரம் காட்டப்படுகிற சமாதானம் ஒரு நாடகத்தின் மையப்பகுதி என்பதை உள்வாங்காமலும் தமிழர்கள் இல்லை.

இப்படியான நிலையில் சிறிலங்கா தரப்பின் இந்த இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தி மனிதாபிமான நெருக்கடிக்குள்ளாகி நிற்கும் தமிழர்களுக்கான பாதுகாப்புக் கேடயமாக இருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட நாடுகள் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் என்று நோர்வே தரப்பு நடுநிலையோடு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. அனுசரணையாளர் என்கிற வகையில் நோர்வே தனது கடமையைத்தான் செய்கிறது.

ஆனால் இதை செரிமானிக்க முடியாத அனுரா பண்டாரநாயக்க, நோர்வேயை வெளியேற்றுவதிலேயே உறுதியாக குறியாக இருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலை காரணம் காட்டி இப்போதைக்கு பேச்சுக்களை பின் தள்ளுவது அல்லது கதிர்காமர் கொலை-விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு என்ற அடிப்படையில் நோர்வேயை வெளியேற்றிவிட்டு யுத்தத்தை ஏற்படுத்துவது என்பதுதான் அனுரா பண்டாரநாயக்கவின் இந்த அறிக்கைகளின் பின் உள்ள விடயமாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

அதேபோல் சிறிலங்கா இராணுவத்தில் சந்திரிகா ஏற்படுத்திக் கொண்டிருக்கும் புதிய மாறுதல்களும் யுத்த நகர்வுகளின் ஒருபகுதியாகவே கொழும்பு ஊடகவியலாளர்களால் கருதப்படுகிறது.

-நன்றி புதினம்-

# ஜனாதிபதித் தேர்தலின்......

இணைந்து தனியான வேட்பாளர் ஒருவரை அரசுத் தலைவர் தேர்தலில் நிறுத்துமாக இருந்தால் அதுவே இனப்பிரச்சினையின் அரைவாசித் தீர்வுக்கு சமனாகும். இதனால் வரலாற்றில் முதன் முறையாக ஜனாதிபதித் தேர்தலில் நூற்றுக்கு 51 என்ற வாக்குகளை யாரும் பெறமாட்டார்கள் எனவே நாடு மீண்டும் இரண்டாவது வாக்கு எண்ணலுக்கு செல்ல வேண்டியிருக்கும் என்ற நிலை ஏற்பட்டால் கூட அது வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தின் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு கிடைத்த வெற்றியாகவே கருத்தப்படும். அது அவர்களின் சுயநிர்ணய உரிமைக்கான சர்வதேச அங்கீகார மனுவாகவும் வரலாற்றில் கருதப்படும். இந்த நிலையில் இரண்டாம் கட்ட வாக்கு எண்ணலின்போது தமிழ் முஸ்லிம் கட்சிகளின் விருப்பத்தெரிவு தற்போதைய அரசாங்கத்தை சார்ந்திருக்காது என்ற நிலை ரணிலுக்கு வாய்ப்பாகவே அமையும்.

ஆனால் இந்த முறை ஜனாதிபதித் தேர்தல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசாங்க பலத்தின்கீழ் நடைபெறுவதால் எப்படியும் வெற்றி பெறுவோம் என்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முழக்கமும், ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியை நாட்டில் அனுமதிக்க மாட்டோம் என்ற ஜே வி பியின் சவாலும் ஐக்கிய தேசிய கட்சிக்கான வாக்காளர்களை தடுக்கும் நிலைக்கும் செல்லலாம். ஆனால் அது நடக்குமானால் இலங்கையில் ஜனநாயக போராட்டம் ஒன்றுக்கு மக்கள் தயாராக வேண்டியேற்படும் அதேநேரம் தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்திற்கு உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் நேரடி ஆதரவு கிடைக்கும் வாய்ப்புகளும் அதிகரிக்கும். மறுபுறத்தில் சர்வதேச நாடுகள் இலங்கையின் இனப்பிரச்சினையில் மாத்திரமில்லாமல் அரசியலிலும் ஒளிவு மறைவற்ற செல்வாக்கை செலுத்த முற்படும் என்பதை மறுக்கவியலாது.

# சங்கரியின் கனவு...........

வாய் வைச்ச பசுமாடு மாதிரி அந்த பிரெஞ்சு நாட்டு வைனைத் தண்ணி மாதிரிக் குடியாதையும். இது மிகவும் விலை உயர்ந்த சரக்கு. சிங்கள மக்களும், புத்த பிக்குகளும் எனக்கு வாங்கி இலவசமாகத் தாறான்கள். என்றாலும் குடிக்கும்போது மெதுவாகக் குடிக்க வேண்டும். புகை பிடிக்கும்போது சிகரற்றைச் சப்பாதேயும். பாக்கிறவன் என்ன நினைப்பான். சிங்களவர்கள் எம்மை மலைபோல் நம்பியிருக்கிறார்கள், நாங்கள் அவர்களைக் கைவிடலாமா? அவ்வளவும் போதும், இப்போது விசயத்துக்கு வருவம்.

மிஸ்ரர் சங்கரி உம்மைப் பற்றிய இரகசியத் தகவல் எனக்கு வந்திருக்கு. கடந்த முப்பது வருட காலத்தில் நீர் உறுப்புரிமை வகிக்காத அரசியல் கட்சி இலங்கையில் இல்லையாமே. கொமியூனிஸ்ற் கட்சி, என்.எம்.பெரேரா கட்சி, ஜீஜீ பொன்னம்பலம் கட்சி, செல்வநாயகம் கட்சி, கூட்டணி கட்சி இப்படி எத்தனை கட்சியள்.சங்கதி மேடைப் பேச்சில் நீர் நல்லாய் பிரகாசிப்பீராமே. சில படுகொலைகளிலும் நீர் பின்னணியில் இருந்திருக்கிறீர். பரந்தனில் யூ.என்.பி மணியத்தை தீர்த்துக் கட்டியது நீர் தானாமே. பயப்படாதேயும், அரசியல்வாதி என்றால் அப்படித்தான் இருக்கவேணும். ஆனால் நான் வித்தியாசமான ஆள், என்னுடைய விசுவாசம் முழுவதும் பண்டாரநாயக்கா குடும்பத்திற்கு சொந்தம். வேறு கட்சி ஒன்றையுமே எனக்குத் தெரியாது.

நான் முதன்முதலாக சிறிமாவுக்குச் சிலவேலையள் இரகசியமாகச் செய்து கொடுத்தனான். அவவுக்குப் பின்பு சந்திரிகாவுக்குச் சேவகம் செய்யிறன். எனக்கு அவமீது கட்டுங்கடங்காத அன்பு. அவவுக்காக நான் என்னவென்றாலும் செய்யத் தயாராக இருக்கிறன். நீர் வித்தியாசமான ஆள் உமக்கு விசுவாசம் என்றால் என்னவென்று தெரியாது. என்றாலும் பரவாயில்லை. எனக்கும் சிங்கள நாட்டிற்கும் உம்மைப் போலை ஆள் தேவை. உம்மைப்போலை அறிக்கை விடுவதற்கும், கூசாமல் பொய் பேசுவதற்கும் வேறை யார் இருக்கினம். இப்போது இந்திய அரசாங்கத்தின் கைக்கூலியாகச் செயற்படுகிறீர் என்று அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள் சொற்படி ஜே.வி.பியோடு மிகவும் நெருக்கமாகப் பழகுகிறீர் என்றும் அறிந்தேன். தமிழர்களுக்கு சுனாமி நிவாரணம் தேவையில்லை, அவர்கள் சமாளித்துக் கொள்வார்கள் என்று அறிக்கை விட்டிருக்கிறீர்கள். மிகவும் நல்ல காரியம். என்னுடைய உதவியாளனாக உம்மை நியமிக்க எனக்குச் சம்மதம். ஆனால் ஒரு சந்தேகம், என்னுடைய காலை வராமாட்டீர் என்பதற்கு என்ன உத்தரவாதம்?



கொடியேற்றம்
05.09.2005

தீர்த்தோற்சவம்
19.09.2005





# கொக்கட்டிச்சோலை

# ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்

## வருடாந்த மகோற்சவ திருவிழாவும், தேரோட்டப் பெருவிழாவும்-2005

### தேரோட்டமும் திருவேட்டையும் 18.09.2005

பேரன்புடையீர்

எம்மைப் படைத்துக் காத்து பராமரிக்கும் பரமன் இத்தரணியோர்க்கு தண்ணளி செய்ய தானாகத் தோன்றி சுயம்புலிங்கமாகத் துலங்கும் ஆலயமும், கல்நந்தி புல் உண்டு கதறிச் சாணியிட்ட அற்புதம் நிகழ்ந்த ஆலயமும், போத்துக்கேயரை புறமுதுகு காட்டி ஓடவைத்து அற்புதம் நிகழ்த்தப்பட்ட வரலாறும், மன்னர் காலம் தொட்டு இன்று வரை மரபு வழி மாறாது பாரம் பரியம் பாதுகாத்து வரும் மகிமைவாய்ந்த தெய்வத்திருத்தலமுமாகிய கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் நிகழும் பார்த்திப வருஷம், ஆவணித் திங்கள் 20ம் நாள் (05.09.2005) திங்கட்கிழமை உத்தர நட்சத்திரம் சேர்ந்த சுபவேளையில் காலைப்பூசையைத் தொடர்ந்து கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி புரட்டாதித் திங்கள் 2ம் நாள் (18.09.2005) ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் 3 மணிக்கு தேரோட்டமும், இரவு திருவேட்டையும் நடைபெறும். மறுநாள் (19.09.2005) திங்கட்கிழமை காலை தீர்த்தோற்சவமும் நடைபெற்று அன்றிரவு கொடியிறக்கத்துடன் அனைத்து விழாக்களும் இனிது நிறைவுறும். இந் நிகழ்வுகள் யாவற்றிலும் அனைத்து மக்களும் கலந்து இறையருள் பெற்றேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அனைவரும் வருக! அருளினைப் பெறுக!!**

| அ.இராசதுரை [வண்ணக்கர்] | க.ஆறுமுகம் [வண்ணக்கர்] | இ.சாந்தலிங்கம் [வண்ணக்கர்] |
|---|---|---|
| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |

ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபை கொக்கட்டிச்சோலை


## தமிழீழத்தில் தமிழீழத் தேசிய தொலைக்காட்சி தொழில்நுட்பத் தகவல்




Satellite : Eurosat KU 45 E
Azimuth : 258
Frequency : 11506Mhz
Symbol rate : 2.894 Ms/s
Polarity : Vertical
FEC : 3/4

KU Band இல்
தினமும் தமிழீழ தேசிய நேரம்
இரவு 8.00 மணி தொடக்கம் 9.00 மணிவரை
ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் ஒளிபரப்பாகின்றது
தெற்காசியாவிலும் இந்த அலைவரிசையில் பார்க்கலாம்


இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 02- 09- 2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

F:\Weekly COVER PAGE 01\02-09-2005.cdr